



# வாணி

## 1

அன்றுடன் படிப்பு, பயிற்சி எல்லாம் முடிந்து போயிற்று. பாங்கிப் பரீட்சை கூட முடிந்துவிட்டது. அகல்யாவிடம் சொன்னால் ஏதாவது காரணம் காட்டி இன்னமும் பயணத்தைத் தள்ளிப் போடச் செய்து விடுவாள் என்கிற பயத்தில் அவளிடம் சொல்லாமலே ஓசைப்படாமல் அன்றையத் தினத்துக்கு ஊருக்குப் போக டிக்கட் எடுத்து வந்து விட்டாள் மதுரவாணி.

மதுரவாணி என்கிற அந்தப் பெயரில் கூட அகல்யாவுக்கு மயக்கம்தான். 'உன்னிடம் மயங்குவது ஒரு தொத்து நோய். என்னிடமிருந்து என் அண்ணனை யும் தொத்திக்கொண்டு விட்டதே!' என்று, கூறிப் பல் தெரியப் பகபகவென்று சிரிப்பாள்.

எப்போதும் எதற்காகவாவது சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆனால் அவளுடைய அண்ணன் அப்படிச் சிரித்து மதுரா பார்த்ததில்லை. புன்சிரிப்புதான். அதுவும் அள வாகத்தான். அறிமுகத்துக்கு ஒரு மில்லி மீட்டர். வரவேற்புக்குக் கூட இரண்டு மில்லி மீட்டர். ஜோக்கடித் தால் இன்னும் அதிகமாய் ஒரு மில்லி மீட்டர் என்று கணக்குப்போட்டு வைத்தாற் போலத்தான் உதடுகள் பிரியும்.

அவனுக்கு எல்லாமே கணக்குதான். ஏன், அகல்யா சொன்னதுபோல ராஜாராமனுக்கு எந்த மயக்கமும் தொத்திக் கொண்டு விட்டதாகவும் வாணிக்குத்

தோன்றவில்லை. ராஜாராமனுக்கு வந்து கொண்டிருந்த மூவாயிரம் ரூபாய்ச் சம்பளத்தோடு, மதுர வாணிக்குக் கிடைப்பதாக இருக்கும் வேலையின் ஆயிரத்து எழு நூறு ரூபாய்ச் சம்பளமும் மற்ற அலவன்சுகளுமாகச் சேர்ந்து வீட்டுக்குள் வர இருக்கும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பணத்தில் சுகமாக வாழுவதோடு கணிச மாகச் சேமிக்கவும் முடியும் என்ற கணக்குதான் அவனை உந்தியிருக்கும் என்பது அவளது கணிப்பு.

ஆனால் அதில் தவறேதும் இருப்பதாகவும் அவளுக்குத் தோன்றவில்லை. நம் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும், என்று திட்டமிடுவதோடு, அதை நிறைவேற்ற முயற்சி எடுப்பதே பிழை என்று சொல்ல முடியுமா?

அரைவயிற்றுக் கஞ்சியானாலும் இருவரும் ஆனந்தமாக வாழ்ந்தனர் என்பதில் அவளுக்கும் நம்பிக்கை கிடையாது.

எனவேதான் ராஜாராமன், மணந்து கொள் வோமா? என்று கேட்டபோது அவளும் சட்டென மறுப்பாக ஏதும் சொல்லி விடவில்லை.

அமைதியாக இருந்து யோசித்துப் பார்க்கையில் அவனை மறுக்கக் காரணம் ஏதும் இருப்பதாகவும் தெரியவில்லை.

ஆள் பார்வைக்கு நன்றாகத்தான் இருந்தான். முக ஜாடையில் இருந்த சிறு குறைகளை அவனது சிவந்த நிறம் நிவர்த்தி செய்தது. நல்ல படிப்புதான். வேலையும் நல்ல வேலைதான். குடும்பம் என்று பார்த்தாலும் அகல்யா ஒரே ஒரு தங்கைதான். தாய் தகப்பனார். தகப்பனாரும் சம்பாதித்துக் கொண்டு இருந்தார். ஓய்வு பெற்றாலும் 'பென்ஷன்' வரும். அத்தோடு எல்லோருமே அவளிடம் பிரியமாகவும் இருந்தார்கள்.

ஒரு சிறு குறை. ராஜாராமனுக்கு நகைச்சுவை உணர்வு கொஞ்சம் குறைவு. அகல்யா அளவுக்கு இல்லை என்றாலும் மதுரவாணிக்கும் சட்டெனச்



சிரிப்பு வரும். தங்கை, தாரம் என்று இந்த இரண்டு பெண்களிடையே ராஜாராமனும் சிரிக்கக்கற்றுக் கொண்டுவிட மாட்டானா என்ன?

மற்றபடி, கிடைக்க இருக்கும் இந்த வேலை தவிர, சொத்து, நகை என்று எதுவும் இல்லாத மதுரவாணிக்கு இப்படி ஒருவன் கிடைக்க இருப்பதே பெரும் அதிர்ஷ்டம் அல்லவா?

உறவு என்று கூறவும் ஒரே ஒரு தமக்கை தவிர மதுரவாணிக்கு யாரும் இல்லை. அந்தச் சகோதரிக்கும் அவளுடைய நாலு பிள்ளைகள், புருஷன், அவளைப் பெற்றவர்களைத் தவிர உலகில் வேறுயாரும் இருப்பது பெரும்பாலும் நினைவு வருவது இல்லை.

பெரும்பாலும் மறந்து போய்விடுகிறது. உறவு அக்கா கோகில வாணிக்கு வெகு அபூர்வமாக நினைவு வருவதும்உண்டு.

அப்படிக் கடைசியாக நினைவு வந்ததன் பயன் தான் அப்பா வைத்து விட்டுப் போன ஒரே சொத்தான வீடு விற்பனை ஆனது.

அவ்வளவு பணத்தையும் என்னதான் செய்தார்களோ. லீவுக்கு லீவு மதுரவாணி அக்கா வீட்டுக்குச் சென்றபோதெல்லாம் தடவைக்குத் தடவை அங்கே வளம் குறைவது அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

இருபெண்களும் இருகண்கள் என்று வளர்த்த தந்தை, மூத்தாள் பெண் என்கிற எண்ணம் இல்லாமல் தன் நகைகளையும் கோகிலவாணிக்குப் பூட்டி மண முடித்த தாயார் இருவரையும் எண்ணிப் பார்த்துதான் வீட்டை விற்பதற்கு மதுரவாணி சம்மதித்ததே.

"உன் படிப்புக்கே நிறையச் செலவாகி விட்டதில்லையா? மதுக்குட்டி "என்று தமக்கை பூசி மெழுகிய போது கூட அவளுக்குச் சிரிப்பு வந்ததே தவிரக் கோபம் மூளவில்லை. தங்கையிடம் கூட வீட்டு வறுமையை வெளிப்படுத்திவிடக் கூடாதாம்!



'வறட்டு கௌரவம்' என்று நினைத்தாலும் தங்கை யின் மனம் இளகிப் போயிற்று. மேலே 'செகரட்டரி கோர்ஸ்' ஒன்று பயின்று முடிப்பதற்குத் தேவையான படிப்பு கட்டணத்திற்கும் தங்கும் செலவுக்கும் என ஒரு பத்தாயிரம் ரூபாயை மட்டும் எடுத்துக்கொண்டு மற்ற பணம் முழுவதையும் கோகிலாவிடமே கொடுத்து விட்டாள்.

அதில் அவளுக்கு வருத்தமும் இல்லை.

அப்பா அழைப்பது போல, அவ்வப்போது 'மதுக் குட்டி' என்று அவளைக் கூப்பிடுவது இப்போது கோகிலா மட்டும்தான். அந்த அழைப்பிலேயே மதுர வாணியின் மனம் கனிந்து போய்விடும். அத்தோடு கோகிலாவின் பிள்ளைகள் கடைக்குட்டியை இடுப்பில் தூக்கிக் கொண்டு இந்த வால்களோடு விளையாடத் தொடங்கினால் லீவு நாள் தொடங்கும் போதே திரும்பவும் கிளம்பவேண்டிய நாள் விரைந்தோடி வந்து விடுவது போலாகிவிடும்.

சித்தி, சித்தி என்று வளைய வரும் அந்தப் பிள்ளை களின் நல்வாழ்வுக்கு அப்பாவின் வீடு பயன்படு மானால் அதில் மதுரவாணிக்குச் சந்தோஷம்தான்.

இப்போது தங்கையின் படிப்பு முடிந்துவிட்டதால் அவளது திருமணம் பற்றிய நமைச்சல் அக்காவுக்குத் தொடங்கி இருக்கக்கூடும்.

அதுபற்றி ஒரு சின்ன உறுத்தல்கூட உனக்கு வேண்டாம். இப்போது அணிந்திருக்கும் சிறு தோடு களும், ஒற்றை சங்கிலியும், வளையலும் போதும் என்று என்னை மணந்து கொள்ள, தகுதியுள்ள ஒருவர் தயார் என்றால் அக்கா மறுப்பேதும் சொல்லப் போவது இல்லை.

ஆகவே, திரும்பிய திசையெல்லாம் பச்சைவிளக்கு எரிதலாகத் தோன்றி விடவும் மதுரவாணியும் ராஜா ராமனிடம் தன்சம்மதத்தைத் தெரிவித்தாள்.

தெரிவிக்கும் போதே அடி மனதில் ஏதோ நெருடலை உணர்ந்து, "ஊரில் என் அக்கா, அத்தான்



இருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு திருமணம் பற்றிய ஏற்பாடுகளைச் செய்யலாம்" என்று முடித்தாள்.

ராஜாராமனும் வழக்கம்போல தன் அளவான புன்னகை புரிந்து தன் மகிழ்ச்சியை வெளிப் படுத்தினான்.

மதுரவாணி ஊருக்குக் கிளம்பிய போது அண்ணன், தங்கை, இருவருமே வழியனுப்ப வந்தார் கள்.

ஒரு முறைக்குப் பல முறையாக, "சன்னல் பக்கம் உட்கார வேண்டாம், கழுத்தை மூடிக்கொள், இரண்டு பவுன் என்றாலும் இன்றைய விலைக்கு ஆறாயிரத்து நானூற்றுப் பத்து ரூபாய் ஆகிறது. டிக்கட் பத்திரம், தொலைத்துவிடாதே" என்று கீறல் விழுந்த கிராம ஃபோன் ரிக்கார்டாக ராஜாராமன் எச்சரித்துக் கொண்டே இருக்கவும், அவளுக்கு சிரிப்பும் எரிச்சலும் ஒருங்கே மூண்டன.

அவள் என்ன சிறு குழந்தையா? இருபத்தோரு வயது முடிந்த பெண் அல்லவா! அதிலும் அவளுடைய பெற்றோர் இறந்தபின் இந்த ஆறு ஆண்டுகளாக அவளது தேவைகள் அத்தனையும் அவளேதான் பார்த்துக் கொள்கிறாள். அவளிடம் போய் இந்த உபதேசமா?

மீண்டும் ராஜாராமன் தொடங்கவும் "ஒன்று கேட்க லாமா?" என்று அப்பாவி போல வினவினாள் மதுரவாணி.

"என்னது?"

"இரவில் தூங்கலாமா?"

பின்னே? தூங்குவதற்காகத் தான் இருபத் தொன்பது ரூபாய் கட்டி 'பெர்த்' வாங்கியிருக்கிறாய்? ஆனால் தூங்கும் போது ஒரேயடியாய் அயர்ந்து தூங்காமல் அரைத் தூக்கமாய்த் தூங்க வேண்டும்."

"இல்லை . . . கழுத்தில் சங்கிலியை அணிந்து கொண்டு தூங்கலாமா என்பதில்தான் சந்தேகம். என்ன இருந்தாலும் இரண்டு பவுன் இன்றைய விலைக்கு ஆறாயிரத்து நானூற்று சொச்சம் ரூபாய் ஆயிற்றே" என்று அவனைப் போலவே பேசிக்காட்டவும் தான் அவளது கேலி ஒருவாறு ராஜாராமனுக்கும் புரியவந்தது.

அண்ணனின் கோபத்துக்கு பயந்து சிரிப்பை அடக்கிக்கொண்டு எங்கோ பார்த்தாள் அகல்யா.

கோபப்படுவதா, அதை அடக்கிக் கொண்டு சிரித்து சமாளிப்பதா என்று ராஜாராமன் திணறிக் கொண்டு இருந்த போது மீண்டும் மதுரவாணியே பேசினாள் "அட்டடா! என்ன மடத்தனம்!" என்று தலையைத் தட்டிக் கொண்டாள். "முன்பே யோசித்து, ஒரு பர்தாவை வாங்கி அணிந்து கொண்டு வந்திருந்தால் பிரச்சனையே இருந்திராது. இல்லை ராஜாராமன்?" என்று சிரித்தபோது அகல்யாவுக்குச் சிரிப்பு அடக்கமாட்டாமல் பீறிட்டு விட்டது.

சினத்தை முழுமையாக அடக்கமாட்டாமல், "வாயை மூடு." என்று தங்கையிடம் சீறினான் அண்ணன்.

தலையை சற்று சரித்து அவனையே பார்த்த மற்றவளிடம் அந்த கோபத்தைக் காட்ட மனமோ, துணிவோ வராமல் "எவ்வளவு முக்கியமான விஷயம் சொன்னேன். புரியாமல் கிண்டலடிக்கிறாயே!" என்று குறைப்பட்டான்.

ஊகூம்.முதல் காரியமாக இவனுக்குச் சிரிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று மனம் எண்ணமிட, அதைக்காட்டாமல், "ஆறு ஆண்டுகளாக இதே சங்கிலி, வளையல், தோடோடுதான் ஆண்டுக்குக் குறைந்தது மூன்று முறை இதே பயணம் செய்து கொண்டிருக்கிறேன், ராஜாராமன். எப்போது எப்படி எச்சரிக்கையோடு இருப்பது என்று அறிந்து அதைக் கடைப்பிடிப்பவள் நான். அதனால் கவலைப்படாமல்



என்னை வழியனுப்புங்கள்." என்று இதமான குரலில் கூறி விடைபெற்றாள் அவள்.

குரலில் இதத்தோடு கொஞ்சம் அழுத்தமும் இருக்கவே அதற்கு மேல் ஒன்றும் சொல்லமுடியாமல் வாயை மூடிக்கொண்டான் ராஜாராமன்.

ஆயினும் நான் நல்லதிற்கு சொன்னால் நீ கேட்கவில்லையே என்கிற பாவனையோடு அவன் நின்றதும் மனதை உறுத்த, இந்த ரயில் எப்போதடா கிளம்பும் என்று தோன்றத் தொடங்கி விட்டது மதுரவாணிக்கு.

ஒருவாறு ரயில் நகரத் தொடங்கியதும், கூடவே நடந்தபடி, "போனதும் கடிதம் எழுது. அவர்களுக்கு வசதியான நாள் கேட்டு தெரிவித்தாயானால் இங்கே திருமண ஏற்பாடுகளைக் கவனிக்க வசதியாக இருக்கும். அதனால் போனதும் முதல் காரியமாக..." என்று சொல்லிக்கொண்டே போனவன் ரயில் வேகம் எடுக்கவும் கவனத்துடன் ஒதுங்கி நின்று விட்டான்.

இருக்கையில் வசதியாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டு சற்று யோசித்தாள் மதுரவாணி. திருமணத்திற்குச் சம்மதம் என்று ஒரு வார்த்தை சொல்லும்முன் இந்த போர் அடிக்கிறானே, இவனோடு ஆண்டுக் கணக்கில் வாழுகிற வாழ்க்கை எப்படி இருக்கும்? வெறுத்துவிடுமா?

காலையில் எழுந்து வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு, ஆளுக்கு ஒரு திசையில் வேலைக்குப் போய்விட்டு, மாலையில் திரும்பி வீடு புகுகிறபோது போரடிப்பதற்கோ வெறுப்பதற்கோ நேரமிராது என்று தோன்றியது அவளுக்கு.

அப்புறமாய்ப் புது மோகம் தீருகிறபோது குழந்தை குட்டி என்று ஆகி விட்டால் அப்போதும் போரடிக்க நேரம் இராதுதான்.

நிம்மதியுற்றவளாக மனதை தமக்கை வீட்டு பக்கம் திருப்பினாள் அவள்.



மதுர வாணியைவிட எட்டு ஆண்டுகள் மூத்தவள் கோகிலவாணி. அவளது பதினெட்டாவது வயதில் வாசு பி. ஏ. வுடன் திருமணம். அடுத்த ஆண்டு முதல் மகள் சுகுணா உதயம். இரண்டு ஆண்டுகள் கழித்து சுகன்யா. அடுத்தும் பெண் பிறந்து விடுமோ என்று அஞ்சி தயங்கினாற்போல ஓர் ஆண்டு அதிக இடைவெளி விட்டுப் பிறந்த பையன் கண்ணன். அவனுக்கும் பிறகு சொகுசாக பிறந்தவன் பாபு. இரண்டு வயது.

இந்தியாவின் ஜனத்தொகைக் கணக்கிற்கும் கோகில வாணியின் குடும்ப நிலைக்கும் பிள்ளைகள் எண்ணிக்கையில் பாதி அதிகப்படி என்பது மதுர வாணியின் எண்ணம்.

ஆனாலும் சித்திசித்தி என்று வளைய வரும் குழந்தைகளைப் பார்க்கையில் அவளுக்கு வெகுவான ஆனந்தம்தான்.

ஆனாலும் அவளுடைய குடும்பம் கச்சிதமாய்தான் இருக்கும். இரண்டே இரண்டு பிள்ளைகள். அவை ஆணோ, பெண்ணோ, எப்படியானாலும் இரண்டு தான்.

இரவு உணவை முடித்துவிட்டுப் படுத்தபடி தனக்கு ஒரு காலத்தில் பிறக்கப்போகும் குழந்தைகளைப் பற்றிக் கற்பனை செய்யத் தொடங்கினாள் அவள்.

சற்று முயன்று ராஜாராமனின் முகத்தை மனக் கண்முன் கொணர்ந்தாள்.

அந்த ஜாடையோடு ஒரு சிறு குழந்தையின் முகத்தை உருவகப்படுத்த முயன்றாள். ஆனால் ராஜாராமனின் சிவந்த முகத்தில் 'ஷேவ்' செய்த இடங்களில் பாசிபிடித்த தரைபோலக் காணப்படும் தாடையும் மேலுதட்டுப் பகுதியும் அவளது கற்பனையைக் குலைத்தன.

சற்று நேரம் முயன்று பார்த்து விட்டுச் சலித்துப் போய் அந்த முயற்சியை அடியோடு கைவிட்டுவிட்டு, திரும்பிப் படுத்துத் தூங்கத் தொடங்கினாள், மதுரவாணி.



## 2

இளங்காலை வெளிச்சம் பரவுகிற வேளையில் விழித்து எழுந்தாள் மதுரவாணி.

அவசரமாகப் பல்துலக்கி, முகத்தை, ஆடையைச் சீர்செய்துவிட்டு, பெட்டியையும், கிட்பாகையும் கதவருகில் கொண்டு வைத்துக் கொண்டு அங்கேயே காத்துநின்றாள்.

இனி விரைவிலேயே அக்காவின் ஊர்வந்து விடும். அந்தச் சிறு ஸ்டேஷனில் ரயில் இரண்டே நிமிடங்கள்தான் நிற்கும் என்பதால் அவசர அவசர மாய் இறங்கியாக வேண்டும்.

கோகிலா வீட்டுக் கடையை டவுனில் வைத்து இருப்பதற்கு அங்கேயே வீடு பார்த்து இருந்திருக்கலாமே என்று தோன்றியது மதுராவுக்கு. இப்படிப் பதறியடித்துக் கொண்டு இறங்காமல் நின்று நிதானமாய் இறங்கலாம் அங்கே வாடகை அதிகம் என்று இங்கே வீட்டை வைத்துக் கொண்டு போரடிக்கிறார்கள்.

பெருமூச்சு விட்டுக் கொண்டு ரயில் நிற்கவும் கதவைத் திறந்து கொண்டு பிளாட்பாரத்தில் குதித்தாள். அவசரமாகச் சாமான்களை எடுத்துக் கொண்டு வேகமாய் நடந்தபடி வெளியே பார்த்தவளுக்கு அப்பாடா என்றிருந்தது.

நல்லவேளையாக அங்கே இரண்டு வண்டிகள் நின்றன. ஒன்றில்லா விட்டால் ஒன்றுகிடைக்கும். மற்றபடி அக்காவீடு வரை இருகரங்களிலும் சாமான்களைச் சுமந்தபடி நடப்பது என்றால் கைகால் ஓய்ந்துவிடும்.

வழக்கம்போல ஒருசிறு வருத்தம் மனதில் இழையோடியது. வாவா என்று அழைக்கா விட்டால் போகிறது வந்துவிட்டாள் என்றபிறகேனும் ரயில் நிலையத்

துக்கு இந்த அக்கா யாரையாவது அனுப்பக்கூடாதா? வீடு போய்ச் சேரும் வரை இந்த வேண்டாத விருந்தாளி உணர்வு உறுத்திக் கொண்டே இருக்கும்.

வண்டிகளை வேறுயாரும் பிடித்து விடக்கூடாதே என்ற வேகத்தில் முதல் ஆளாக டிக்கட்டைக் கொடுத்துவிட்டு ஓடினாள் மதுரவாணி.

ஒருவண்டியின் அலங்காரம் அது தனியாரின் சொந்த உபயோகத்துக்குரியது என்பதைக் காட்டவும், அடுத்த வண்டியை அணுகி, கிட்பாகை உள்ளே வைத்து, "வடக்கு மாடவீதி போகவேண்டும். ஐந்து ரூபாய் தானே வழமை? போகலாமா?" என்றாள், அவசரமாக.

"சரிங்கம்மா" என்று அவள் கையிலிருந்த பெட்டியை வாங்கியவன், சட்டென அதைக் கீழே வைத்து விட்டுப் பணிவோடு கும்பிடு போடவும், தானும் திரும்பிப் பார்த்தாள்.

அவள் பின்னே ஒரு பதினைந்து சென்டி மீட்டர் தூரம் அதிகப்படியாக நெருங்கி நின்ற ஒரு நெடியவன் வண்டியோட்டியின் வணக்கத்தை சிறு தலையசைப்பில் ஏற்று, "அந்தச் சாமான்களை வில் வண்டியில் ஏற்று, முருகா" என்று பணிக்கவும் மதுராவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

"ஏ. . மி. மிஸ்டர், அது என்சாமான். இந்த வண்டி நான் வாடகைக்குப் பேசியிருக் . . . ரவண்டிகாரர், சாமானைத் திரும்பவும் உங்கள் வண்டியிலேயே என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "அவசியமில்லை" என்றது அவனது அமர்ந்த குரல். "நீ உன் அக்கா கோகில வாணி வீட்டுக்குத்தானே போக வேண்டும்? உன்னை அங்கே அழைத்துச் செல்லத்தான் அந்த வண்டி வந்திருக்கிறது" எனவும் மேலும் வியப்புற்று அவனை ஏற இறங்கப் பார்த்தாள் அவள்.

சராசரி ஆண்களை விட உயரம். சாதாரண நிறமாக இருந்திருக்கலாம். வெயிலில் கன்றிக் கறுத்தார்



போலச்சற்று டிகாக்ஷன் அதிகமான, காபிநிறம். வெள்ளையர்கள் பார்த்தால், 'வாட் எ ஸன்டான்', என்று வாய்பிளக்கக்கூடும். இங்கே எரிச்சலுற்றுக் கூறுவதானால் கறுப்பண்ண சாமி என்றே சொல்லக்கூடிய வண்ணம் தான். பெரிய நீளமீசை வெளே ரென்ற சட்டை முக்கால் கையளவில் மடித்து விடப்பட்டிருந்த முழுக்கையை நாலு சென்டி மீட்டர் அகல பார்டர் போட்ட வெள்ளை வேஷ்டி. கழுத்தில் தடிமனான புலிநகச் சங்கிலி. நகமா? பல்லா? பெரிய மோதிரம். பெரியமைனர் போலும்.

சட்டெனப் பிறந்த குறும்புடன் "இதற்குப் பெயர் தான் மஸ்லு வேட்டியா?" என்று அப்பாவிபோல வினவினாள் மதுரவாணி.

விழிகள் பளிச்சிட 'ஊகும்' உதட்டைப் பிதுக்கினான். அவன் "இது வெறும் மில் வேட்டி. மயில் கண் கரை போட்டது. போனால் போகிறது. மில்லு வேட்டி மைனர் என்றாவது அழைத்து ஆறுதல் படலாம் என்று பார்த்தால் நான் மைனருமில்லை". என்று சிரித்தான்.

கருமேகத் திரளினிடையே மின்னல் பளிச்சிடுவது போல அந்தச் சிரிப்பில் அவனது வெண்பற்கள் ஒளிர்வதைக் கண்டு அவளது விழிகள் மீண்டும் ஆச்சரியத்தால் மலர்ந்தன.

அத்தோடு அவளது கேலியை அவன் கண்டு கொண்டதில் வியப்புவேறு. அவனது சிரிப்புக்குப் பதிலாக முறுவலித்து விட்டு. "பாருங்கள் மிஸ்டர், உங்களை எனக்குத் தெரியாது. அதனால் நான் இந்த வண்டியிலேயே" என்று அவள் பேசிக் கொண்டு இருக்கையிலேயே மறுப்பாகத் தலையசைத்து விட்டு, சட்டைப் பைக்குள் இருந்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து வண்டிக்கார முருகனிடம் கொடுத்தான் அவன்.



"உனக்கு வேறு சவாரி வருவதுபோலத் தெரியவில்லை முருகா. இதை வைத்துக் கொள் கிளம்பு" என்று முருகனை அனுப்பவும் அவளுக்கு ஆத்திரம் வந்தது.

"வண்டிக்காரா, நான் கூடுதலாகப் பணம்." என்று அவள் கூறுவதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் வண்டிக்காரன் செல்லவும் அவளது சினம் அதிகரித்தது. அவனை என்னவென்று எண்ணிக் கொண்டான், இந்தப் பட்டிக்காட்டான்?

"உங்கள் வண்டியில் ஏறுவதற்கு நான் நடந்தே போய்க் கொள்வேன்" என்று பெட்டியை எடுக்கத் திரும்பினாள் மதுரா.

"இதோபார். உன் அக்கா வீடு செல்லும் வழி உனக்குத் தெரியுமல்லவா? வண்டி கொஞ்சம் வழி மாறினாலும் இறங்கிக்கொள். சரிதானா? அத்தோடு நானும் இதேவண்டியில் வரப்போவது இல்லை. என் வாகனம் அங்கே"என்று அருகே நிறுத்திவைக்கப் பட்டிருந்த 'புல்லட்'டைக் காட்டினான் அவன்.

பெட்டி பையுடன் நடப்பதை விட வண்டியில் போவது நூறுமடங்கு சுகம்தான். ஆனால் கொடுமைக்கார, பெண்ணாசை பிடித்த கிராமத்துப் பண்ணையார்களைப் பல சினிமாப் படங்களில் பார்த்திருந்த மதுரவாணிக்கு அவனை நம்பமுடியவில்லை.

" உங்கள் வண்டியில் ஏற எனக்குப் பிடிக்கவில்லை என்றால் . . ."என்று மீண்டும் தொடங்கியவளை இடைமறித்து, "கையைக் காலைக் கட்டி வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு போகவேண்டியது தான்" என்று அவன் அலட்டிக் கொள்ளாமல் கூறவும் அவள் அயர்ந்து போனாள்.

ஊகூம். அந்த மாதிரி மாட்டிக் கொள்வதை விட, அவசியப்படும் போது பயன்படுத்தக்கூடிய விதமாகக் கை, கால்களைச் சுதந்திரமாக வைத்துக் கொண்டே வண்டியில் பயணம் செய்வது மேல்...



ஆனாலும் தனக்குப்பிரியமில்லை என்பதைக் காட்டுகிறவள் போல அவனை ஒருதரம் முறைத்துப் பார்த்து விட்டு அவனது வண்டியில் ஏறிக் கொண்டாள் மதுரவாணி. வண்டி பறந்தது.

வண்டித் தூசி மேலேபடாத அளவு தூரத்தில் அந்தப் புதியவனும் 'பைக்'கில் வண்டியைத் தொடர்ந்தான்.

அக்காவின் வீடு இருக்கிற தெரு முனை திரும்பும் வரையிலும் மதுரவாணிக்கு சந்தேகம்தான்.

அப்பாடி என்று மூச்சு விட்டவளாக வண்டிக் கூண்டின் சிறு சன்னல் வழியே அக்கா வீட்டைப் பார்க்கத் தொடங்கினாள்.

வழக்க விரோதமாக கோகிலா வாசலிலேயே நின்றாள். கம்பியை எடுத்துவிட்டுவிட்டு மதுரா கீழே குதித்ததும், "மதுக்குட்டி வாம்மா" என்று வரவேற்றாள்.

அதற்குள் பின்னோடு வந்து சேர்ந்துவிட்ட 'பைக்'காரரைப் பார்த்து "வாருங்கள், தம்பி" என்று அவனையும் வரவேற்றாள். "வாருங்கள் உள்ளே வந்து ஒரு காப்பி குடித்துவிட்டுப் போகலாம்,"என்று உபசாரம் செய்தாள்.

வண்டிக்காரன் சாமான்களை இறக்கி உள்ளே கொண்டு வைப்பதை மேற்பார்வையிட்டபடி அவனும் உள்ளே வருவதை யோசனையோடு கவனித்த, மதுரவாணிக்கு யாரிவன்? அக்காவின் உறவில் இப்படி ஒரு ஆளை அவள் பார்த்ததே கிடையாது . . தங்கையின் குறு குறு பார்வையைச் சந்திப்பதைத் தவிர்த்து தலையைத் திருப்பிக் கொண்டு கோகிலா உள்ளே செல்வது போலத் தோன்றவும் கொஞ்சம் வலித்தது. ஆனால் அடுத்தவினாடி எல்லாம் மறந்து போயிற்று. "சித்தி" என்று குதூகலத்துடன் விழுந்தனர் சுகன்யாவு ம் பாபுவும். "வாங்க சித்தி" என்று பெரிய பெண்,

முறுவலித்தபடி சின்னத்தம்பியைத் தூக்கிக் கொண்டு வந்தாள் கருணா.

தூக்கிவந்த பாபுவை வாங்கிக் கொண்டு, அவர்களுக்காக வாங்கி வந்த பொருட்களைக் கடைபரப்பினாள் மதுரா.

அவரவர் பொருட்களைப் பிரித்தானதும், கொய்யாவின் பழங்களையும், மாமரத்து வரிக்குயிலையும் காண அக்கா மக்கள் அழைக்கவும் சந்தோஷமாகக் கிளம்பினாள் அவள்.

முற்றத்துத் திண்ணையில் நாற்காலியில் அமர்ந்து உள்ளேயே நோட்டம் விட்டுக் கொண்டிருந்த அவன் அவளுக்கு எரிச்சலூட்டத் தொடங்கியிருந்தான்.

தோட்டத்துப் பக்கம் போனதும், "யாரும்மா அது? அந்த 'பைக்'கில் வந்தவன்?," என்று அக்காமகளிடம் வினவினாள்.

"அவர் பெயர் வீரபாண்டியாம் சித்தி. அடிக்கடி வந்து 'அம்மா அப்பாவிடம் பேசுகிறார். என்னவோ, அவரை எங்களுக்குப் பிடிக்காது" என்று முகம் சுளித்தாள் பெண்.

"ஏம்மா?"

"அவர் வந்தாலே பின்னால் போங்கள் என்று அம்மா எங்களை விரட்டுகிறார்களே" என்று சிணுங்கினாள் அவள்.

அப்படி மறைத்து என்ன ரகசியம் பேசுகிறார்கள்!! உள்ளூர யோசனை ஓட, சின்னவளுக்குச் சரியாகப், "பார்த்துக் கொண்டே இரு. இனி அந்தப் பாண்டிஆள் வந்தால் நான் அவரை விரட்டி விடுகிறேன்" என்று கூறித்தேற்றினாள்.

கொய்யாப்பழம் பறித்துத் தின்று, அணில் விரட்டி, ஓடிப்பிடித்து விளையாடி முடித்து ஒருவாறு அவர்கள் வீட்டினுள் சென்றபோது அந்த வீரபாண்டி சென்று விட்டிருந்தான்.



"ஒருவன் வீடுவரை கொண்டுவந்து விட்டால் ஒரு நன்றி சொல்லுவது இல்லையா?" என்றாள் தமக்கை கடிவது போல.

அதிலிருந்த உண்மையை ஒத்துக் கொள்ள மனம் வராமல், "உன் வீட்டுக்கு என்னை இன்னொருவர் கொண்டுவந்து விடவேண்டுமா? அவசியமில்லாமல் மூக்கை நுழைப்பவர்களுக்கு நன்றிவேறு?" என்றாள் தங்கை அலட்சியமாக.

பதில் சொல்லத் தோன்றாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு கோகிலா நிற்கவும், சட்டென இளகி, தமக்கையிடம் ஓடிச் சென்று அவள்கையைப் பற்றி "அந்த ஆளைப்பற்றி நமக்கு என்னபேச்சு; அக்கா? ,விடு அக்கா, என் கடிதம் வந்ததில்லையா? அதில் எழுதிஇருந்தேனே", என்று அவள் பேசுகையிலேயே கையை விடுவித்துக் கொண்டு கோகிலா நகர்ந்தாள்.

"தம்பிக்கு இட்டிலி கூடக் கொடுக்காமல் என்ன விளையாட்டு சுகுணா? பள்ளிக்கு வேறு நேரமாகி விட்டதில்லையா? ஓடு. முதலில் குளித்துக் கிளம்பு" என்று மகளை விரட்டினாள்.

இரண்டு பெண்களையும் பள்ளிக்கு அனுப்புகிற வரை கோகிலா தங்கையின் பக்கமே திரும்பவில்லை.

இருவரும் கையாட்டிவிட்டுச் சென்றதும் மீண்டும், "அக்கா, என் கடிதத்தில் "என்று தொடங்கினாள் மதுரா.

"அதை அப்புறம் பார்ப்போம். முதலில் நீயும் குளித்து விட்டுவந்து சாப்பிடு. நான் பனிரண்டிற்குள் சமையலை முடித்து மாமாவுக்குச் சாப்பாடு அனுப்பியாக வேண்டும்" என்று விலகி நடந்தாள் கோகிலவாணி.

மேலும் இருதரம் முயற்சி செய்த பின் அக்கா வேண்டுமென்றே தன் திருமணப்பேச்சைத் தவிர்க்கிறாள் என்பது மதுரவாணிக்கு உறுதியாயிற்று.

ஆனால் ஏன்?



செலவு ஏதும் அவளது கையைக் கடிக்கக்கூடும் என்று எண்ணுகிறாளா? அந்தக் கவலையே அவளுக்கு வரக்கூடாது என்பதற்காகத் தானே செலவேஇல்லாமல் என் திருமணம் நடக்க ஒருவழி ஏற்பட்டிருக்கிறது என்று எழுதினாள் அவள். பிறகும் என்ன?

அப்பாவின் வீடு விற்றபணம் பற்றி ஏதும் பிரச்சினை எழக்கூடும் என்று பயப்படுகிறளோ? முதலில் அந்த அச்சமே வேண்டாம் என்று ஆறுதல் படுத்த வேண்டும்.

ஆனால் அவளைப் பேசவிட்டால் அல்லவோ அது முடியும். மேலும் மூன்று தினங்கள் இதே மாதிரி கோகிலா கண்ணாமூச்சி ஆடவும் மதுரவாணி பொறுமையிழந்தாள்.

நாளை எப்படியும் அடுப்பை அணைத்து வேலையை நிறுத்தி விட்டாவது அக்காவிடம் பேசியே ஆக வேண்டும் என்று முடிவு செய்த அன்று இரவில், சின்னவர்கள் எல்லோரும் தூங்கிவிட்ட பிறகு, கோகிலாவின் அறைக்கதவு திறந்தது.

ஒரு தயக்கமான நடையுடன் வெளியே வந்த கோகிலா, அங்கேயே சற்றுநேரம் நின்றுவிட்டு, மீண்டும் இயங்கி, பிள்ளைகளோடு படுத்திருந்த தங்கையிடம் சென்று அவளை எழுப்பினாள்.

சத்தமின்றித் தன்னைப் பின்தொடருமாறு ஜாடைகாட்டிவிட்டு அவள் முன்னே செல்ல, என்ன மகா ரகசியம் என்ற வியப்பும் வேடிக்கையுமாகத் தமக்கையைப் பின் தொடர்ந்தாள் மதுரவாணி.

புழக்கடையில் கிணற்றங்கரையில், துணி துவைக்கிற கல்லைக் காட்டித் தங்கையை அமருமாறு கூறி விட்டுத் தண்ணீர்த் தொட்டி விளிம்பில் அவளும் அமர்ந்து கொண்டு தொடங்கினாள் கோகிலவாணி.

அவ்வளவு நேரமும் "என்ன பெரிய மர்மம்?" என்று வியந்து கொண்டிருந்த மதுராவுக்குத் தமக்கை "மதுக்



குட்டி, உன் கடிதம் படித்தேன். அதில் எழுதியிருந்தாயே.." என்று தொடங்கவும் மற்ற தெல்லாம் மறந்து போயிற்று. உற்சாகத்துடன்," கடிதத்தில் முழு விவரமும் எழுதவில்லை அக்கா. இப்போது கேட்டுக்கொள். உனக்கு, ஒரு பைசா செலவு இல்லை. அங்கே படித்த செலவு போக என்னிடம் ஓர் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. இதுவே.. யதேஷ்டம்..."என்று கூறினாள்.

ஒருகணம் பேசாமல் இருந்துவிட்டு, "அது சரிப்பட்டு வராது, மதுரா.."என்றாள் கோகிலா.

"ஏன்?"

"இங்கே.. இங்கே ஒரு மாப்பிள்ளையை அத்தான் பார்த்திருக்கிறார்கள்.." என்று அவள் இழுக்கவும் மதுரவாணிக்கு ஒரே ஆச்சரியம். பரவாயில்லையே! இந்த அளவுக்கு அவள் ஞாபகம் இருக்கிறதே! என்று சொல்லு முன், "ஆசைப்பட்டு கேட்கிறார்கள்" என்று வேறு சொன்னாள் கோகிலா.

"யாரக்கா, அது?" என்றாள் வியப்புடன்.

மீண்டும் கோகிலாவின் குரல் தடுமாறியது "இ...இந்தப்பக்கம் கொஞ்சம் வசதியானவர்.. கொஞ்சமென்ன, நிறையவேதான். அவர்கள் குடும்பப் பெயரில் கிட்டத்தட்ட ஐம்பது ஏக்கரா நிலம் இருக்கிறது. விவசாயத்தில்.."

படித்திருக்கிறாரா?

தமக்கை பேசாதிருக்கவும், ஏதோ தோன்ற "யார் அவர்? எனக்குத் தெரிந்தவரா . . ஒருவேளை. . . இன்று காலையில் என்னை அழைத்துவந்தாரே அந்தக் கறுப்பண்ண சாமியா? என்று குரலில் ஏளனம் தொனிக்க வினவினாள் தங்கை.

ஒப்புவாள்போல மௌனம் சாதித்தாள் கோகிலா.

## 3

வியப்பினால் விரிந்த விழிகளால் தமக்கையின் முகத்தை ஆராய முயன்றாள் மதுரவாணி.

அரை குறையாக வெளிச்சம் தந்த நிலவுக்கு கோகிலா முதுகு காட்டி அமர்ந்திருந்ததால் அங்கிருந்து ஒன்றும் கண்டுகொள்ள முடியவில்லை அவளால். தங்கை கண்டுகொள்ளக் கூடாது என்றே அவள் அப்படி உட்கார்ந்திருப்பாளோ என்ற எண்ணம் வந்தது. அந்த அளவு அக்கா கெட்டிக்காரியா என்று ஆச்சரியப் பட்டாள் மதுரா.

கூடவே வேடிக்கையாகவும் இருந்தது. இருந்திருந்து இந்தப் படிப்பறிவு இல்லாத பட்டிக்காட்டுப் பண்ணை யாருக்கு ஐம்பது ஏக்கர் நிலம் என்றால் பண்ணையாகத் தானே இருக்கவேண்டும். அவனுக்கு மதுரவாணி பி.காம் வேண்டுமா? படித்த பெண் கொஞ்சம் வெள்ளைத்தோல் என்றதும் கிறக்கமாகிவிட்டதா?

அது சாத்தியமாக இருக்கலாம். ஆனால் இந்த அக்கா ஏன்....

ஏன் என்று ஊகித்து லேசாகச் சிரித்து, "அக்கா உனக்கு ஒன்றுமே புரியவில்லை ... ராஜாராமனுக்கு ." என்று அவள் பேசுமுன் எரிச்சலுற்ற குரலில் இடைமறித்தாள் கோகிலா."உனக்குத்தான் ஒன்றுமே புரியவில்லை, மதுரம். இந்தப் பக்கத்தில் வீர பாண்டியைப் பகைத்துக் கொண்டு நாங்கள் கடை நடத்தமுடியாது."என்றாள்.

"அப்படியென்றால் ரவுடியா? கடைப்பக்கம்வந்து கலாட்டா செய்வானா? அப்படி ஒரு ரவுடியை மணக்க வேண்டும் என்று உன்னால் எப்படிச் சொல்ல முடிகிறது?" என்று படபடத்தாள் தங்கை.



பேசமுடியாமல் சிலகணங்கள் சும்மா இருந்து விட்டு," இந்தக்கடை நடக்காவிட்டால். . . இங்கே. . . இங்கே பிள்ளைகள் கதி, எங்கள்நிலைஎல்லாம் அதோகதியாகி விடும். அதனால். . . . . . . என்று தொடங்கிவிட்டு முடிக்கமாட்டாமல் நிறுத்தினாள் கோகிலா.

"அதனால் எங்களுக்கு பதிலாக நீ அதோகதியாகி விடு' என்கிறாயா, அக்கா! அத்தோடு உன்குடும்பம் தான் கெடுவானேன். இந்த வீடு, நிலங்களெல்லாம் இருக்கின்றனவே. அதையெல்லாம். . . அதையெல்லாம் என்னவோ சொல்லுவாயே ...கு..கு குத்தகைக்கு என்று. அப்படிக் குத்தகைக்கு விட்டுவிட்டு சென்னைக்குக் குடும்பத்தோடு வந்து விடுங்கள் அத்தானும் பட்டதாரிதான் ஏதாவது வேலை பார்த்துக் கொள்ளலாம். அதை விட்டு விட்டு ஒரு பட்டிக்காட்டு ரவுடியைக் கட்டிக்கொள் என்கிறாயே. " என்று பொரிந்தாள் மதுரா.

" ரவுடி என்று நான் சொன்னேனா? நீயாக ஏதாவது நினைத்துக் கொண்டு பொரிந்து கொட்டுகிறாய்."

"வாய் வார்த்தையாய்ச் சொன்னால் தானா? அவனை எதிர்த்துக் கொண்டு கடை நடத்த முடியாது என்றால் என்ன அர்த்தம்? கலாட்டா செய்வான் என்றுதானே. கலாட்டா செய்கிறவன் ரவுடி இல்லாமல் யாராம்?"

சட்டெனக் கோகிலாவின் குரல் மாறியது. "அய்யோ, அது அப்படியில்லை, மதுக்குட்டி. இந்தப் பக்கம் அவர் செல்வாக்கானவர். அவருக்குப் பிடிக்க வில்லை என்று தெரிந்தால் யாரும் கடைக்கு வர மாட்டார்களோ என்று நினைத்தேன்_" "நினைத்தால் அது தப்பு. நீ என்ன இந்தக் கிராமத்திலா கடை வைத்திருக்கிறாய்? டவுனில். அங்கே எத்தனையோ கடைகள். அத்தனை பேரும் இந்த ஆளுக்குப் பணிந்து கிடக்கிறார்கள் என்றா சொல்லுகிறாய்?"



"ச்சு. அதெல்லாம். ஒன்றும் இல்லையம்மா." என்றாள் கோகிலா அலுப்புடன். "நம் வீட்டில் சொத்துபத்து என்று ஒன்றும் இல்லை. இவரிடம் பணம், சொத்து இருக்கிறது. கல்யாணம் செய்து கொண்டால் நீ வசதியாக வாழுவாயே என்று பார்த்தேன். அத்தோடு உன்மேல் ஆசை இருக்கிறது என்பதால் நன்றாக வைத்துக் கொள்ளவும் செய்வார். எல்லாம் யோசித்து தான் முடிவு செய்தோம்."

"ஆமாமாம். ரொம்ப நன்றாய்த்தான் வைத்துக் கொண்டு.விடுவான். வண்டியில் வரவில்லை என்றால் கையைக்காலைக் கட்டி வண்டிக்குள் தூக்கிப் போடுவேன் என்கிறான். இவனுக்கெல்லாம் ஆசை, அன்பு என்றால் அர்த்தம் தெரியுமா? அந்த மீசையைப் பார். நீயும் அத்தானும் அருகே நின்றால் எப்படி இருக்கிறது? இந்தக் கருப்பண்ணசுவாமி என்பக்கத்தில் நின்றால் பார்க்க சகிக்குமா? அத்தோடு படிப்பு? பி.காம் முடித்தவள் நான். ஒரு கை நாட்டை எப்படிக் கட்டிக் கொள்ள முடியும்? இல். . வளவு அகல பார்டர் போட்ட வேட்டி கட்டிக் கொண்டு நிற்பதைப்பார். அதுவேட்டி தானா, வீட்டில் யாருடைய சேலையையேனும் கிழித்துக் கட்டிக் கொண்டுவந்து விட்டானா?"

தனது திட்டத்தை காது கொடுத்துக் கேளாமலே தமக்கை ஒதுக்கிய ஆத்திரத்தில் மதுரவாணி மட மட வென்று பேசிக் கொண்டே போனாள்.

"இதோபார் அக்கா. வண்டி நல்லபடியாய் ஓட வேண்டும் என்றால் இரண்டு சக்கரங்களும் சம அளவாய் இருக்க .வேண்டும். நான் படித்திருக்கிறேன். கீட்ஸ், ஷெல்லி, பைரன் என்றால் புரிந்து என்னோடு பேசுகிறவரைத்தான் நான் கட்டிக் கொள்ள முடியும். ஷெர்லாக் ஹோம்ஸ் என்றால் இந்தி நடிகரா என்று கேட்டால் எனக்குத் தாங்குமா? சே. நினைக்கவே சகிக்கவில்லை."



"கடைசியாக நீ என்னதான் சொல்லுகிறாய்?" என்று ஒருமாதிரிக்குரலில் வினவினாள் கோகிலா.

"நீஎன்னதான் சொன்னாலும் அந்த மல்லு வேஷ்டி, மீசைக் காரனை நான் மணந்து கொள்ள முடியாது." என்று முடித்தாள் தங்கை. சிலவினாடி அமைதிக்குப் பின் "சரி" என்றாள் தமக்கை.

'ஓ' என்று மீண்டும் ஆச்சரியமாய்ப் போயிற்று அவள் தங்கைக்கு. இவ்வளவு இலகுவாக முடிவதற்கு இத்தனைவாக்கு வாதம் ஏன்? தமக்கையின் கையைப் பற்றிக் குதுகலமாக நகைத்தாள் அவள். அவள் சிரிப்பில் கலந்து கொள்ளாத கோகிலா, தங்கையின் கையை அழுத்தி "ஆனால் ஒன்று" என்றாள். "என்ன?" என்றாள் தங்கை நிமிர்ந்து. "இதை இப்போதைக்கு மனதிலேயே வைத்துக் கொள். வெளியே காட்ட வேண்டாம். செல்வமும் செல்வாக்கும் படைத்தவன் எப்படிப் போகக் கூடும் என்று சொல்லமுடியாது. அதுவும் வெறுமனே வீடுவரை வருவதற்கே கையைக்காலைக் கட்டி என்கிற... "முரடன்" என்று முடித்தாள் மதுரா.

"ஆமாம் ஆமாம்." என்று தலையாட்டிவிட்டு. "அதனால் மதும்மா, இப்போதைக்கு உன் மறுப்புபற்றி வீரபாண்டிக்கு எதுவும் தெரியவேண்டாம். தெரிந்தால் இந்த. . இந்த சினிமாக்களில் வருகிறமாதிரி உன்னைத் தூக்கிக் கொண்டுபோய் என்னமாவது செய்தாலும் செய்து விடக்கூடும்..."

தங்கை திகைத்து நிமிரவும், "அதனால் சரி சரி என்பது போலவே நடந்து கொள்ளலாம் . . ஊகூம். அதற்காக அவரிடம் வழிய வேண்டும் என்று சொல்ல வில்லை. நாம் மறுக்காத மாதிரி காட்டிக் கொண்டால் அவரும் உனக்குக் காவல் வைக்காமல், உளவு பார்க் காமல் அசட்டையாக இருப்பார் இல்லையா? அப்படி யொரு நாளில் ஓசைப் படாமல் உன்னைத் திரும்பவும் சென்னைக்கு அனுப்பி விடுகிறேன். அங்கே நீ அந்த ராஜாராமனைக் கல்யாணம் செய்து கொண்டு

அங்கேயே தங்கிவிட்டால் வீரபாண்டியால் என்ன செய்யமுடியும்? எனக்கே தெரியாமல் நீ போய் விட்டதாகச் சொல்லி நாங்களும் நல்ல பேர் பெற்று நிம்மதியோடு இருக்கலாம்" என்று விளக்கினாள்.

"எல்லாம் சரியாகத்தான் தெரிகிறது. ஆனால் இவ்வளவு மோசமான ஓர் ஆளிடம் என்னைத் தள்ளப் பார்த்தீர்களே என்பது தான் ஒருமாதிரி உதைக்கிறது..." என்று குத்திக்காட்டி விட்டாள் மதுரவாணி.

"மோசமானவர் தான் என்று இப்போதும் நான் சொல்லவில்லை, மதுரா. மோசமா இல்லையா என்று 'டெஸ்ட்' பண்ணிப் பார்க்க வேண்டாம் என்கிறேன். அவ்வளவுதான். வீட்டில் என்ன நடந்தாலும் கண்டு கொள்ளாமல் ஒதுங்கிக் கொள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். சரி சரி வா, வந்து படுத்துத் தூங்கு. எனக்கும் தூக்கம் கண்ணைச் சுழட்டுகிறது. வழக்கம் போலக் காலையில் வேறு விழித்தாக வேண்டும்," என்று எழுந்து மடமடவென்று வீடு நோக்கி நடந்தாள் கோகிலவாணி.

சற்று நிதானமாகவே தமக்கையைத் தொடர்ந்த மதுரவாணிக்கு ஒரே யோசனை. மோசமா இல்லையா என்று அறிந்த பிறகுதானே திருமணம் பற்றி நினைத்துப் பார்ப்பதே. இப்போது ராஜாராமனைப் பற்றிப் பிரமாதமாக ஏதும் இல்லாவிட்டாலும் மாறாகவும் ஏதும் இல்லை என்று அறிந்த பிறகுதானே, சரி, நமக்கு இது போதுமானது என்று முடிவு செய்தாள் அவள்.

வெறும் பாதையிலேயே கண்களை அகலத்திறந்து வைத்து, பள்ளம்மேடு பார்த்து நடக்கையில் வாழ்க்கைப் பயணத்தில் கண்ணைமூடிக் கொண்டா அடியெடுத்து வைப்பது?

சுகுணா, சுகன்யாவுக்கெல்லாம் நாம் தான் மாப்பிள்ளை பார்த்தாக வேண்டும்போலும். இந்த



அக்கா இப்படித்தானே அவர்களுக்கும் பார்ப்பாள் என்று எண்ணினாள் அவள்.

என்னநடந்தாலும் கண்டு கொள்ளாதே என்று தமக்கை எச்சரித்திருந்ததால் வீட்டில் திருமணக் களை கட்டுவதைக் கவனியாதவள் போல இருந்து கொண்டாள் மதுரவாணி.

ஓரோர் சமயம் அந்த வீரபாண்டி வந்தபோதும் காணாதவள் போல ஒதுங்கிக் கொண்டாள். அவனும் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அதற்காகவும் அவனை உள்ளூர இகழ்ந்தாள் மதுரா. கட்டிக் கொள்ள விரும்புகிற பெண்ணின் மனம் பற்றிய அக்கறையே இல்லை,இவனுக்கெல்லாம் ஆசை ஒரு கேடா?

அன்று வாயிலில் வாழைமரம் கட்டப்படவும், தமக்கையிடம் தனிமையில் விசாரித்தாள் மதுரா.

"நான் கவனமாய்த்தான் இருக்கிறேன், மதுக்குட்டி. இன்றைக்கு நடுராத்திரியில் அங்கே மாப்பிள்ளை வீட்டில் பூசை போடுவார்கள். அவன் ஆட்கள் எல்லோரும் அங்கே போய்விடுவார்கள். அந்த நேரத்தில் இங்கே நீயும் கிளம்பி விடலாம். அதுவரை ஒன்றும் காட்டிக் கொள்ளாதே." என்றாள் கூடப் பிறந்தவள்.

அவள் சொன்னது சரியென்று தோன்றவே, அன்று மாலையில் வீரபாண்டி வந்தபோது கூட வீட்டில் ஏதோ அலங்காரத்தை ரசிப்பவள் போல நடித்தாள் அவள்.

அதை உண்மையென்று நம்பி அவன் மகிழ்ச்சியோடு செல்வதைக் கண்டதும் அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. நாளைக்கு ஏமாந்த சோணகிரியாய் "பே" என்று நிற்கையில் அவனுக்கு எப்படி இருக்கும்!

அன்று வெகுநேரம் கழித்து வாசுவும் அவனுடைய தகப்பனாரும் திரும்பி வந்து படுக்கச் செல்லும் போது மணி பதினொன்றைத் தாண்டி விட்டிருந்தது.



படுக்கச் செல்லுமுன் ஒரு தம்ளர் பாலைக் கொணர்ந்து மதுரவாணியிடம் கொடுத்துக் குடிக்கச் சொன்னாள் கோகிலா.

"எனக்கு எதற்கு, அக்கா? பிள்ளைகளுக்குக் கொடுத்தாலாவது நல்லது." என்று மறுத்த தங்கையிடம் "ஏதோ, கடைசித் தடவையாக என் கையால் தருவது. பேசாமல் குடி. நீ சென்னை சென்றுவிட்டால் அப்புறம் இங்கே தகராறு எல்லாம் எப்போது -பார்க்கப் போகிறோமோ! பிள்ளைகள், குடிப்பதுதான் எப்போதும் இருக்கிறதே. இப்போது நீ குடி. ஒளிந்து மறைந்து செல்லும் போது உடம்புக்கும் தெம்பு வேண்டாமா?" என்று ஏதேதோ சொல்லிக் குடிக்க வைத்தாள்.

பாலைக் குடித்ததும், "சற்று நேரம் படுத்திரு. நான் வீரபாண்டியின் ஆட்கள் எல்லோரும் போனபிறகு சமயம்பார்த்து உன்னிடம் வந்து சொல்கிறேன். அது வரை தூங்குவது போலவே பாவனை செய்." என்று தங்கையைப் படுக்கவைத்தாள் கோகிலா.

அங்கங்கே நடமாடியவர்களில் யார் யார் அந்த வீரபாண்டியுடைய ஆட்கள் என்று அறிந்திராததால் மதுரமும் தமக்கை சொல்லுக்கு இணங்கி படுத்துக் கொண்டாள்.

தூங்கி, அக்கா வந்து எழுப்பும்படி வைத்துக் கொள்ளக் கூடாது என்ற முடிவுடன் ஏதேதோ யோசித்த படி படுத்திருந்த மதுரவாணிக்கு இம்முறை விடுமுறைக்கு வந்ததிலிருந்து மனதை அழுத்திய இறுக்கங்களெல்லாம் மெல்ல மெல்லத் தளர்ந்து உடம்பும் மனமும் லேசாவது போல உணர்ந்தாள். ஏதோ ஒரு தளர்ச்சி. சுகமான தளர்ச்சி.

இந்த வீரபாண்டி யார்? இவனிடம் இப்படி ஒரு பயமா? அவனால் அப்படி என்ன செய்ய முடியும்? தாலி தானே கட்டுவான்? கட்டினால் கட்டி விட்டுப்போகிறான். அதற்காகக் கவலைப்படுவானேன்? அக்காவும அத்தானும் ஏன் வயதானவர்களாகத் தெரிகிறார்கள்? உலகத்



தில் கவலைப்பட்டு சாதிப்பது என்ன? ஒன்றுமில்லை. அதனால் கவலைப்படுவதையே விட்டுவிட்டு சந்தோஷமாக இருக்க வேண்டியதுதானே... என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று இருந்தால் கவலை வருமா?.

என்னென்னவோ தொடர்பின்றிச் சிந்திப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது. ஆனால் அதில் ஏதோ சுகம் தெரியவே எண்ணத்தை அதன் போக்கிலேயேவிட்டு விட்டாள்.

அப்படியே தூங்கி விட்டாளோ என்னவோ மெல்லக் கனவுகள் வரத் தொடங்கின. பெரிய மஞ்சள் நிற பலூனுக்குள் நிற்பதுபோல ஒரு கனவு. அந்த மாதிரி பலூன் வேண்டும் என்றுதான் அன்று கண்ணன் கேட்டான்....

அப்புறமாய் அக்காவும் அத்தானும் அருகில் வந்தார்கள் கனவில்தான்.

"தூங்கி விட்டாளா?" என்று அத்தான் வாசு கேட்க, "தூங்கியிருப்பாள்" என்று அக்கா பதில் சொன்னாள்.

"நாளைக்கு ஒன்றும் தகராறு ஆகிவிடாதே" என்றார் வாசு கவலையுடன்.

என்ன தகராறு? அப்படியே தகராறு ஆனாலும் தான் என்ன? அதற்காகக் கவலைப்படுவது முட்டாள்தனம் என்று தோன்றியது மதுரத்துக்கு. அதை அத்தானிடம் சொல்ல நினைத்தபோது இது கனவு என்பது நினைவு வரவும் சும்மா இருந்துவிட்டாள்.

அதற்குள் கோகிலாவே, "ஒன்றும் இராது." என்று கூறி வாசுவைத் தேற்றிவிட்டாள்.

அப்பாடி, நல்லவேளை கனவில்கூட யாராவது கஷ்டம், கவலை, என்றாலே பிடிக்கவில்லை என்று மதுரவாணி எண்ணியபோது, கோகிலாவின் குரல் தொடர்ந்து ஒலித்தது. "உங்களுக்கு நினைவில்லையா? உங்கள் பெரிய அக்கா மகன் முன்பு வந்தபோது டவுனில் எங்கேயோ இந்த மாத்திரையை வாங்கி வந்து

விழுங்கி, அப்படியே ஆறேழு மணிநேரம் தூங்கி விட்டானே. அப்புறமாய் விழித்த பிறகும் ஏதோ தூக்கத்தில் நடக்கிறமாதிரி நிற்கவைத்தால் நின்று, உட்காரவைத்தால் உட்கார்ந்து, கிட்டத்தட்ட ஒருநாள் முழுவதும் அப்படியே இருந்தானே. அதே மாத்திரை தான். உங்கள் அக்கா கண்டுபிடித்து எடுத்து பாட்டிலோடு தோட்டத்தில் வீசியிருந்தார்கள். நான் எடுத்து வைத்திருந்தேன்_ அதேதான் இது. அதனால் கவலையே படவேண்டாம். நாளைக்குத் தாலி ஏறி விட்டால் அப்புறமாய் அவன்பாடு. ஆனால் நம்மை ஏமாற்றிவிட மாட்டானே?" என்றாள் குரலில் ஐயத்துடன்.

"ஊகூம், சேச்சே, அவன் பேச்சு மாறுகிறவன் இல்லை. இப்போதே தந்திருப்பான். கல்யாணத்தை ஒருமாதம் முன்னே வைத்ததில் அதிகச் செலவு அவனுக்கு. கையில் இருந்த பணம் கல்யாணச் செல வில் ஓடிவிட்டது. எல்லாமே அவன்தானே செய் கிறான். கணக்குப் போட்டால் தாலியே நாற்பது ஆகிறதே! ஏதோ, ஒருமாதம் தாக்குப் பிடித்து விட்டால் எல்லாம் சரியாகிப் போகும்" என்றான் வாசு நம்பிக்கை யுடன்.

"அப்படித்தான் நம்பிக்கையோடு இருக்க வேண்டும்; சபாஷ்டா ராஜா" என்று மனதிற்குள் ஷொட்டுக் கொடுத்தாள் மதுரா. ஆனால் யாருடைய கல்யாணத்தை ஒருமாதம் முந்தி வைத்தார்கள்? எதற்காக? ச்சு. யாருடையதாக இருந்தால் நமக்கென்ன வந்தது?

"என்ன செய்வது? இவள் வேறு கூத்தடிப்பாள் போல் பயமாய்ப் போய்விட்டதே." எனவும் யார் கூத்தடிப்பாள் என்று யோசிக்க, கனவு தொடர்ந்து கொண்டே இருந்தது.

விடியுமுன்னரே யாரோ எழுப்பினார்கள். பல் தேய்த்துக் குளிப்பாட்டினார்கள். தண்ணீர் தலையில்



விழும்போது ரொம்பவும் நிஜம் போலத் தோன்றவே கனவா நனவா என்று கிள்ளிப்பார்க்க முனைந்தபோது கையே காணாமல் போயிற்று. இல்லையில்லை, கை இருந்தது. ஆனால் அது வந்து கிள்ளத்தான் மாட்டேன் என்றுவிட்டது. நிஜம் என்றால் கை அதுபாட்டில் தன்னிஷ்டமாய் இப்படி இருக்குமா, என்ன?

கனவுதான் என்று நிம்மதியுறும்போதே மீண்டும் சந்தேகம்வந்துவிட்டது. குளிப்பாட்டி விட்ட பெண் - அது கோகிலா போலத்தான் தோன்றியது. உடைமாற்ற என்று உள்ளாடை மேல் கைவைத்ததும் உண்டான கூச்சமும் அருவருப்பும் அது மெய்யாகவே தோன்றின.

ஆனால் உடைமாற்ற முயன்றவள், மதுர வாணியின் கூச்சத்தை உணர்ந்து, பெரிய டவலால் சுற்றிவிட்டுவிட்டு, லேசாக ஈரம் குறைந்த பழைய உள்ளாடைகளின் மேலேயே வேற்றாடை அணி விக்கத் தொடங்கவும் வேறு நினைவு வந்தது.

முன்னே அம்மாவும் அப்பாவும் விபத்தில் இறந்தபோது கூட, பலமுறை அதையே கனவுகண்டு, நிஜம் போலவே உணர்ந்து, அழுதுகொண்டே விழித்திருக்கிறாளே!

இது கனவாகத்தான் இருக்கவேண்டும்.... ஆனால் அப்போதெல்லாம் அது சொப்பனமாக இருக்கக்கூடும் என்ற ஐயமே வந்ததில்லை. கனவுக்குள்ளேயே அது கனவா இல்லையா என்று சந்தேகம் வருமா?

பட்டாடையும் நகைகளும் அணிவிக்கையில் மகிழ்ச்சியாகத்தான் உணர்ந்தாள் மதுரா.

"நீங்க அழகா இருக்கீங்க, சித்தி." என்று அருகில் வந்த சுகுணாவிடம் கோகிலா ஏதோ முகம் சுளித்துப் பேச குழந்தை வாடிய முகத்துடன் அகலுவது தெரிந்தது. இந்த அக்கா வரவர முன் கோபி ஆகிவிட்டாள். எல்லோருமாய் வண்டிகளில் ஏறி எங்கேயோ இறங்கி னார்கள்.



என்னகனவு இது. எப்போது எப்போது முடியும் என்று அவள் அலுப்புற்றபோது, அவளை அழைத்துச் சென்று மணவறையில் உட்கார வைத்தார்கள். அட, இதுவேறா?

பட்டுவேட்டி சட்டையுடன் அருகே அமர்ந்திருந்த வனைப் பார்க்க இயலாமல் புகையில் கண்ணைக் கரித்தது. பேசாமல் கண்களை மூடிக் கொண்டாள்.

யாரோ அவளுக்கு உடம்பு சரியில்லை என்றார் கள். யாருக்குச் சரியில்லை?

புகை மூட்டத்தினிடையே அவன் தாலி கட்டிவிட யாரோ அவள் கையில் மாலையைக் கொடுத்து, மாலை யோடு அவளது கைகளையும் பற்றித் தூக்கி அருகில் இருந்தவனுக்கு மாலை அணிவிக்கச் செய்தார்கள்.

சற்று சிரமத்துடனேயே கண்களைத் திறந்து, கூர்ந்து பார்த்த மதுரவாணிக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று.

ஏனெனில் அருகே மணமகனாக அமர்ந்து இருந்த வன் ராஜாராமனில்லை. அவன் வீரபாண்டி!

## 4

தலையைத் தாங்குவது கடினமாகப் பட்டது மதுரவாணிக்கு.

என்னமோ எல்லாமே ஒரே தப்பாகத் தெரிந்தது.

கனவில் கூட இந்த ஆள் - இந்தக் கறுப்ப ண்ணசாமி அவளுக்கு எப்படித் தாலி கட்டலாம்! எப்படி மாலை சூட்டலாம் ஊகூம்.

ஆத்திரத்தோடு திரும்பமுயன்றபோது கால்கள் வசப்பட மறுக்கவே தடுமாறிச் சரியலானாள்.



கீழே விழுமுன் அவளைத் தாங்கி ஒரு குழந்தை போல அவளை உள் அறைக்குத் தூக்கிச் சென்று அங்கிருந்த கட்டிலில் படுக்க வைத்தான் அவன். வீரபாண்டிதான் எவ்வளவு எளிதாகத் தூக்குகிறான்!

ஆனால் அவனை நோக்கி நன்றி சொல்ல மனமற்று, கண்களை இறுக மூடிக் கொண்டாள் மதுரவாணி.

"சுரமா? சூடு தெரிய வில்லையே" "மாத்திரை கொடுத்தாயிற்று" என்று ஏதோ பேச்சுக் குரல்கள் மதுராவின் காதுகளில் விழுந்தன.

"காய்ச்சலோடு அவளைக் குளிக்கச் செய்தீர்களா?" கடிந்தது ஆண்குரல்

"சாஸ்திரம்.." கோகிலாவா?

"பெரிய சாஸ்திரம். இனியேனும் அவளைத் தொல்லை செய்ய வேண்டாம். ஓய்வாகப் படுத்திருக் கட்டும். உங்கள் சடங்குகள் எல்லாம் முடிந்து விட்டதில்லையா?" பொறுமையிழந்த குரல் தான்.

"கங்கணம் அவிழ்க்கவேணும்" என்று யாரோ முணு முணுத்தார்கள்.

"சரிசரி. இங்கேயே அவிழுங்கள். அதற்கு வேறு அவளை எழுப்பி கஷ்டப் படுத்த வேண்டாம்" என்ற குரலுக்குப் பணிந்து ஏதோ மந்திர உச்சாடனம் கேட்க, யாரோ அவள் கையில் கட்டியிருந்த மஞ்சள் கயிற்றை அவிழ்த்தார்கள்.

"அவள் சற்று தூங்கட்டும். எல்லோரும் வெளியே போங்கள்." என்ற குரலுக்குப் பணிந்து காலடிகள் அகன்றன.

அவள் பெரிதும் வேண்டிய அமைதி கிட்டவும் மீண்டும் கண்ணயர்ந்தாள் மதுரவாணி, இது தூக்கத்தில் கனவா, அன்றிக் கனவுக்குள் தூக்கமா என்று குழம்பியபடியே.

வெகுநேரம் கழித்து அவளது உறக்கம் கலைந்த போது, அப்போதும், அவளுக்கு அடித்துப் போட்டாற் போலச் சோர்வாகத்தான் இருந்தது.

மெல்லப் புரண்டபோது கையில் உரசிய பட்டுச் சேலை வியப்பூட்டியது. இது எப்படி சாத்தியம்? ஒட்டிக் கொண்டாற்போல இருந்த இமைகளை வலுக் கட்டாய மாகப் பிரித்து தன்னையே ஆராய்ந்தவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

உடுத்தியிருந்த சரிகைப்பட்டு, அணிந்திருந்த நகை கள், எல்லாவற்றுக்கும் மேலாக கனமான முறுக்குச் சங்கிலியில் கோர்க்கப்பட்ட, அம்மையப்பன் உருவம் பொறிக்கப்பட்டிருந்த திருமாங்கல்யம். பதட்டத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தவளுக்கு அன்றுவரை அறிந்திராத அந்தப்புதிய இடம் மேலும் நெஞ்சைப் பட படக்க வைத்தது.

என்ன இது?

நள்ளிரவு தாண்டியதும் கிளம்பிவிடலாம் என்று அவளுடைய அக்கா, அவனோடு கூடப்பிறந்தவள் சொன்னது நன்றாக நினைவு வந்தது.

அப்புறம்?

ஏதேதோ சம்பந்தாசம்பந்த மற்ற கனவுகள்!

கனவா இல்லையா என்று கனவுக்குள் கனவாய்..... அல்லது அதெல்லாம் கனவே அல்லவோ? பதறி எழுந்தவளுக்குத் தலைமட்டும், தனியான கனத்துடன் தானாக எங்கோ செல்வது போலத் தோன்றவும் சட்டென மீண்டும் அமர்ந்து கொண்டாள். இல்லை கனவில் விழுந்த மாதிரி மீண்டும் விழுந்து விடக் கூடாது. . . . ஆனால் அது கனவுதானா? இல்லைபோல் தோன்றுகிறதே!

மீண்டும் யோசிக்க முயன்றபோது ஒன்றுக் கொன்று தொடர்பு அற்றவைகளாக ஏதேதோ சித்திரங் கள் தோன்றி அவளைக் குழப்பின.



முதலில் முகத்தில் நன்றாகக் குளிர் நீர் அடித்துக் கழுவியாக வேண்டும். இந்த மசமசப்பும் தலைப் பாரமும் குறைந்தால் ஒழுங்காக யோசிக்க முடியும்.

இங்கே பாத்ரூம் எங்கே இருக்கக் கூடும்?

சுற்று முற்றும் பார்த்தாள். ஊகூம். இதுகிராமத்து வீடு இங்கே 'அட்டாச்சுடு பாத்ரூம்'மை எதிர்பார்க்கக் கூடாது.

தலைப்பாரம் தடுமாற வைத்து விடாமல் கவனத் துடன் எழுந்து நடந்து அந்த அறையை விட்டு வெளியேறினாள். எதிரே பெரிய முற்றமும் சுற்றுக் கட்டுத் தாழ்வாரமும் தெரிந்தது.

முற்றத்து வெளிச்சம் மாலை மயங்குகிற நேரம் என்பதை எடுத்துரைத்தது.

இவ்வளவு நேரமா தூங்கினாள்! தூக்கம் தானா அல்லது . . . . . முற்றத்தில் நீர் தெளித்துக் கொண்டிருந் தாள் ஒரு நடுத்தரவயதுப் பெண்.

அவளை அணுகி அவளது குறுகுறுப்பும் ஆர்வமுமான பார்வையைக் கவனியாதவள் போல, "இங்கே பாத்ரூம் எங்கே இருக்கிறது?" என்று வினவி னாள்.

"பாத்ரூமா? . அது..... அப்படின்னா என்னம்மா?" என்று அவள் புரியாமல் கேட்கவும் பட்டிக் காடு என்று உள்ளூரக் கடுத்தது மதுரவாணிக்கு. ஆனால் இவளிடம் ஆத்திரப்பட்டு என்ன பயன்? முகத்தை மாறாமல் வைத்துக் கொண்டு, "குளிக்கிற அறை" என்று விளக்கி னாள். "தண்ணீர் வைத்திருப்பார்களே. முகம் கழுவ வேண்டும்." "இங்கே கூடக் கழுவலாம்மா. தண்ணி இருக்கு. அதோ அங்கணத்திலே... அதோ, ஓரமா பள்ளமா கட்டி ஓட்டைஇருக்கு பாருங்க அதுதான் அங்கணம். அங்கேயும் கழுவலாம் இல்லைன்னாக்க, என்கூட வாங்க, அய்யா குளிக்கிற ரூம்பு காட்டுறேன்," என்று கைவேலையைப் போட்டுவிட்டு கிளம்பினாள் அவள்.

இவள் வழிகாட்டியா, காவலா?

இரண்டையுமே வெறுத்தவளாய், "இல்லை. வழி மட்டும் சொன்னால் போதும். நீ இங்கேயே இருந்து வேலையை முடி" என்றாள் குரலில் லேசான அழுத்தத்தைக் காட்டி.

உடனே பணிந்து, "இப்படி நேராப் போயி, இந்தக் கட்டுதாண்டி, கொட்டகைப் பக்கம் திரும்பி, நேராப்போயி, அப்புறம் சோத்துக் கை பக்கம் திரும்பி நேராய் போனீங்கனா அதுக்கு அடுத்த கட்டுவரும். அங்கே சோத்துக்கைப் பக்கமா நேராப் போனா கடைசி ரூம்பு" என்று தன்னாலான மட்டும் தெளிவாக வழி சொன்னாள் வேலைக்காரி.

மீண்டும் ஒருதரம் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டு அவள் சொன்னவழியே சென்று குளிய லறையை அடைந்தாள் மதுரா. நீண்ட சதுரமாகக் கட்டப்பட்டிருந்த தொட்டியிலும், அருகே ஒரு பெரிய அண்டாவிலும் நீர் நிரப்பப்பட்டிருந்தது. ஒருபுறமாய் மாடத்தில் சோப்புப் டப்பாவும் எதிர்ப்புற மூலையில் இருபுறச் சுவர்களிலுமாக ஆணி அடித்துக் கட்டப் பட்டிருந்த கொடிக்கயிற்றில் ஒரு டவலும் தென்பட்டன.

இது அவன் பயன்படுத்திய டவலாக இருக்கக்கூடும் என்று ஒருகணம் தயங்கினாள் அவள். டவலின் துவைத்து மடித்துப் போட்டிருந்தாற் போலிருந்த தோற்ற மும், பட்டுச் சேலை நீர் உறியாது என்கிற அறிவும் உந்த முகம் கழுவி அந்த டவலிலேயே முகம் துடைத்தாள். கொஞ்சம் தெளிவாய்ச் சிந்திக்க முடியாது போலத் தோன்றியது. வீட்டின் இந்தப் பகுதி முடிந்ததும் திறந்த வெளிக்காற்றும் கிட்டக் கூடும் என்று தோன்றவும் அங்கிருந்த கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

வரிசையாக ஏதோ 'ஷெட்' மாதிரி அமைப்புகளும், அவைகளை அடுத்து பெரிய வைக்கோல் போர்களும்



கண்ணில் பட்டன. அவற்றை அடுத்து ஏதோ பெரிய மரங்கள்.

இலக்கற்று மெல்ல நடந்த போது, "ஏதோ எங்கள் வாக்கை நிறைவேற்றி விட்டோம். இனி நீங்களும் உங்கள் வாக்கைக் காப்பாற்ற வேண்டும்" என்று ஒரு பெண்குரல் கோகிலவாணியின் குரல் கேட்டது. உருவம் தென்படாமல் செவியில் மட்டுமாக விழுந்த அந்தக் குரல் ஏனோ அவளை உறுத்தியது. இது இன்னொரு சமயத்திலும்... ஏதோ முக்கியமான ஒரு நேரத்திலும்.... அந்தக் கனவு... அது தொடங்கியபோதா? இன்னமும் முழுமையாகத் தெளிவுற்றிராத மூளை மெதுவே யோசிக்கையில் அவன் வீரபாண்டியின் குரல் கேட்டது "அதில் உங்களுக்குச் சந்தேகமா? முன்பு நினைத்தது போல ஒருமாதம் கழித்துத் திருமணம் நடப்பதாக இருந்தால் என்னால் திருமணச் செலவும் செய்து உங்களுக்குத் தருவதாகச் சொன்னதையும் சேர்த்தே கொடுத்திருக்க முடியும். நீங்கள் தானே கல்யாணம் சீக்கிரம் நடந்தாகவேண்டும் என்றீர்கள்.... ஒருமாதம் முன்னதாக? ஒருமாதம் முன்னே வைத்ததில்... யாரோ சொன்னார்களே...

"ஆமாம் ஆமாம். எங்களுக்கும் உங்களிடம் மிகவும் நம்பிக்கை தான். வந்து, உங்களிடம் ஒன்றுசொல்ல வேண்டும். மதுரத்துக்குக் கூடப்படித்தவர்கள் உபதேசம் கொஞ்சம் வேண்டாததாய் ஏறி இருக்கிறது. என்னவோ பட்டணவாசம் பெரிது. படிப்பு பெரிது என்று. எவ்வளவோ புத்தி சொல்லி நல்லதனப்படுத்தியிருக் கிறேன். என்றாலும் சிலசமயம் அந்த நினைப்பில் ஒருமாதிரி நடந்து கொண்டாலும் தப்பாக எண்ண வேண்டாம். இப்போது அவளுக்குவெறும் மண்டையிடி தான். சூடு என்று இல்லை சுரம் வந்து விடுமோ என்று மாத்திரை போட்டதில் தூங்கிவிட்டாள் அவ்வளவு தான் அப்புறம்... நான் அடுத்தமாதம் வருகிறேன்...."



"தாராளமாய் வாருங்கள் நான் லாரிக்காரனிடம் இடையில் பணம் வாங்காமல் நிறுத்திவைக்கிறேன். நாற்பது, ஐம்பது நாளில் நீங்கள் கேட்ட ஐம்பது ஆயிரம் சேர்ந்து விடும்" ஐம்பது ஆயிரம்! ஐம்பது ஆயிரம்!! என்ன அநியாயம்! ஐம்பதாயிரம் ரூபாய்க்காக உடன்பிறந்த தங்கையை விற்பதா? எப்படி முடியும்? எப்படி முடிந்தது? முடிந்து விட்டதே!" அப்புறம், இந்தப் பண விவகாரம் மதுவுக்குத் தெரிய வேண்டாம். சின்னப் பெண் அல்லவா, தவறாக எண்ணக்கூடும் . . . தப்பே செய்துவிட்டுத் தவறாக எண்ணிவிடக் கூடாதாமா?

"இல்லை. சொல்லவில்லை. வந்து இப்போது ஏதும் அவசரத் தேவை என்றால் ஆறு ஏழாயிரம் இருக்கக் கூடும் வேண்டுமானால்...

"இல்லையில்லை மொத்தமாகவே கொடுங்கள். சில்லறையாக வாங்கினால் வீணாகிப்போகும். இனி நாங்கள் கிளம்ப ..

நாடகத்தை முழுமையாக நடித்து முடிக்க கோகிலாவாணி தங்கையிடம் பிரியாவிடை பெறவரக் கூடும் என்று மதுராவுக்குத் தோன்றியது.

தனக்கு விஷயம் தெரிந்து விட்டதாகக் காட்டிக் கொள்வதை விடவும் இப்போதைக்குத் தங்கையை முழுமையாக ஏமாற்றி விட்டதாகவே தமக்கை எண்ணிக் கொண்டு இருக்கட்டும் என்று முடிவு செய்து வந்த சுவடு தெரியாமல் வேகமாகத்திரும்பிச் செல்ல முனைந்தாள் அவள்.

இன்னமும் முழுமையாக வசத்துக்கு வந்திராத கைகால்கள் சரியாக ஒத்துழைக்க மறுத்தபோதும் முடிந்த அளவு வேகமாக நடந்து மற்றவர் யாரும் வந்து சேருமுன் பழையபடி அறைக்குள் சென்று சுவரில் சாய்ந்தாற் போலக் கட்டிலில் அமர்ந்து கொண்டாள் மதுரவாணி.

முகம் கழுவியதாலோ அன்றி மாத்திரையின் வேகம் குறையத் தொடங்கியதாலோ மதுரவாணிக்குச் சற்றுக் கோர்வையாகச் சிந்திக்க முடிந்தது.



ஆக, அவள் கனவு என்று நினைத்தது எதுவுமே கனவு இல்லை. போதை மாத்திரைகளைப் பாலில் கலந்து, சந்தேகப்படவேண்டும் என்கிற எண்ணம் கூட இல்லாமல் முற்றும் நம்பிய தங்கையிடம் கொடுத்து அருந்த வைத்திருக்கிறாள் கோகிலவாணி. தங்கை மாத்திரை வேகத்தில் உறங்கிவிட்டாள் என்று எண்ணித்தான் கணவன்,மனைவி இருவரும் பேசியிருக்கிறார்கள் திட்டமிட்டபடி திருமணம் வரை நடத்தி முடித்து விட்டார்கள்.

குளிப்பாட்டி உடைமாற்றியதை நினைக்கையில் அவளுக்கு இன்னொரு வகையிலும் மனம் கலங்கியது. அக்கா உள்ளாடையில் கை வைக்கும் வரையிலும் அவளுக்குச் சுரணையே வரவில்லையே. அப்போதும் அவளைத் தடுக்கும் முயற்சியாக எதையும் செய்யத் தோன்றவில்லையே. இந்தப் போதை மருந்தைக் கோடானுகோடிப்பேர் உட் கொள்ளுவதாகச் சொல்லுகிறார்களே, அவர்களில் எத்தனைபேர் பெண்கள்? அவர்கள் என்னென்ன அவலத்துக்கு அதை உணரக்கூட இல்லாமல் ஆளாகியிருக்கிறார்களோ என்று எண்ணுகையில் உள்ளே வலித்தது அவளுக்கு.

உலகில் எத்...த்தனை அரசாங்கங்கள் ராணுவம், போலீஸ் என்று அத்தனையையும் வைத்துக்கொண்டு இந்தத் தீமையை அடியோடு ஒழித்துக் கட்டாமல் என்ன செய்கிறார்கள்?

வெளியே அரவம் கேட்டதவருகிறவளும் அரவம் தான்.

மனதைக் கட்டுப்படுத்த வெகுவாக முயன்றபடியே விழிகளை மட்டும் திருப்பி அறைவாயிலைப் பார்த் தாள். அவள் எதிர்பார்த்தபடியே வந்தது கோகிலா தான்.

ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த வசனம் போலும். தங்கை ஏதும் கேட்குமுன்னதாக அவளே சொல்லத்தொடங்கி விட்டாள். "மதும்மா, நான் என்ன

செய்யட்டும். சமயம் பார்த்து உனக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது போல. நான் எழுப்ப எழுப்ப நீ எழுந்து கொள்ளவே இல்லை; நானும் திருப்பித் திருப்பி மணிக்கணக்கில் முயன்று பார்த்தேன். முடியவில்லை. அப்புறம்... அதற்குள் வீரபாண்டியன் ஆட்கள்வேறு வந்து விட்டார்களா, என்னால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

"ஏதோ, இன்னாருக்கு இன்னார் என்று அந்த இறைவன் போட்ட முடிச்சை மனிதர்களால் மாற்ற முடியுமா? மாறக்கூடாது என்றுதான் உனக்கு இந்தக் காய்ச்சலைக் கடவுள் கொடுத்தார் போல."

கடவுளா கொடுத்தார்? பாதகி! நீ..... என்ன பொய்!

மதுரவாணியின் கட்டுப்பாட்டை மீறி நெஞ்சடைத்து வயிறு தீயாய்க் காய்ந்தது. முகம் உடம்பு எல்லாம் வியர்த்து ஊற்றியது.

மாரடைப்பு என்பது இதுதானா? இப்போது அவள் செத்து விழுந்துவிட்டால் கோகிலா யாரிடம் எப்படிப் பணம் வாங்குவாள்?

என்னபணம்? ஐம்பது ஆயிரமா? ஐம்பது லட்சம் கொடுத்தாலும் உடன்பிறந்தவளின் வாழ்வை நாசம் செய்யலாமா? உலகத்தில் இருக்கும் ஒரே உறவு என்று உயிரை வைத்த தங்கைக்குத் துரோகம் செய்ய இவளால் எப்படி முடிந்தது? அக்கா, அக்கா, என்று சுற்றிவந்தாளே, இருந்த ஒரே சொத்தைக்கூட விட்டுத் தந்தாளே என்ற எண்ணமே வரவில்லையே!

தங்கையின் வெறித்த பார்வையையும் வியர்வையையும் கண்டு சற்றுக் கலங்கி, "மதுக்குட்டி, என்னம்மா செய்கிறது?" என்று மதுரவாணியின் நெற்றியைத் தொட்டுப் பார்க்க முயன்றாள் கோகிலா.

விலகிக் கொண்டு, "கொஞ்சம் தண்ணீர் வேண்டும்" என்று தமக்கையை அனுப்பி வைத்தாள் மதுரா.



தண்ணீரோடு அவள் திரும்பி வருமுன் முகத்தைச் சீர் செய்து கொண்டாள்.

இருக்கட்டும். யோசித்து ஒருமுடிவு செய்யும் வரை அவளுக்கு விஷயம் தெரியும் என்பது யாருக்கும் தெரிய வேண்டாம். அவர்களை எச்சரிக்கை அடைய விடக் கூடாது. தன் பலத்தை மறைத்து வைத்திருப்பவன் தான் ஜெயிப்பான்.

ஆனால் இனி ஜெயிப்பதற்கு என்ன இருக்கிறது என்று தோன்றிய நிராசையை உதறினாள்.

இருக்கும். ஏதாவது இருக்கும். ஜெயிப்பதற்கு எதுவும் இல்லாவிட்டாலும் ஜெயித்தவர்களைத் தோற்கடிக்க வேணும் ஏதாவது இருக்கும்.

வாயில் வரையிலும் வந்து வழியனுப்பிய வீரபாண்டியிடம் விடை பெற்றுக் கொண்டு, அவனது மெத்தை பரப்பிய வில் வண்டியிலேயே கிளம்பிச் சென்ற தமக்கையைச் சன்னல் வழியே வெறித்துப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்த போதெல்லாம் மதுரவாணிக்கு இதே சிந்தனைதான்.

என்னதான் வெற்றி பெற்றாலும் வெற்றியின் பலன்கிட்டாவிட்டால் அந்த வெற்றி தோல்விதானே? இந்த ஐம்பது ஆயிரம் ரூபாய்ப் பணம் கிடைக்கவில்லை என்றால் கோகிலாவும் தோற்றவள்தானே?

அந்தக் கணத்தில் மதுரவாணி முடிவு செய்தாள். எப்பாடுபட்டாலும் சரி. இந்தப் பணம் கோகிலாவுக்குக் கிடைக்க விடக்கூடாது.

அடுத்து இந்த வீரபாண்டி.

கொஞ்சமும் பொருந்துமா, தனக்குத் தகுதி இருக்கிறதா என்று சற்றும் யோசித்துப் பாராமல், சந்தையில் மாடுபிடிப்பது போலப் பகுத்தறிவுடைய ஒரு படித்த பெண்ணை விலை பேசி மணந்திருக்கும் இவனுக்கும் ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும்தான்.

கட்டாயமாய்.....



## 5

எப்படியும் இருவரையும் பழி வாங்க வேண்டும் என்பதில் உறுதி தோன்றிவிடவே அதற்குரிய வழி வகைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள்.

யாரும் அறியாமல் இங்கிருந்து ஓடிவிட்டால் இருவரின் வெற்றியும் தகர்ந்து விடாதா?

ஆனால் ஓடும் வகை தேடி இங்குமங்கும் பார்த்தபோது பிறர் அறியாமல் ஓடுவது எளிதாகத் தோன்றவில்லை. எளிது என்ன? முடிகிற காரியமாகவே தோன்றவில்லை.

அந்த சன்னல் வழியே அவள் பார்வை எட்டிய வரையிலும் அங்கங்கே ஓரிருவர் – நல்ல திடகாத்திரமான உடலுடன் ஏதாவது வேலை செய்து கொண்டும் நடமாடிக் கொண்டும் இருப்பது தெரிந்தது. இவர்களெல்லாம் இந்த வீரபாண்டியுடைய அடியாட்களாக இருக்கலாம். அவன் தாலி கட்டிக் கொணர்ந்து வைத்திருக்கும் ஒரு பெண் அவள் பாட்டில் வீட்டை விட்டு வெளியேறுவதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா இருப்பார்கள்? இவர்கள் அத்தனை பேர் கண்ணிலும் மண் தூவுவதும் நடக்கிற காரியமல்ல. இதென்ன சினிமாவா, மதுக் குடுவையில் மயக்க மருந்து கலந்து விநியோகிக்கவும், எல்லோரும் குடித்துவிட்டு மயங்கி விழவும்? முன்புறம் மட்டுமன்றி, சற்றுமுன் வீரபாண்டியும் அக்காவும் பேசியதைக் கேட்டு நின்ற பின் பகுதியிலும் சற்றுத் தொலைவில் ஓரிருவர் நிற்பது போலத்தான் தோன்றியது. அத்தோடு பாதை இருப்பதாகவும் தெரியவில்லை.

உடம்பு இருக்கிற நிலையில் ஓடமுடியும் போலவும் தோன்றவில்லை. கை கால்களில் நிதானமே இல்லையே. பழிவாங்க வேண்டும் என்று முடிவெடுப்பது சுலபமாக இருந்த போதும் அதை எப்படி



நிறைவேற்றுவது என்று திட்டமிடுவது கூட அவளுக்கு மிகவும் கடினமாகப்பட்டது.

அப்படியே அவளது முயற்சி வெற்றி பெற்று இங்கிருந்து தப்பினாலும் கூட அப்புறம் எங்கே போவது?

அக்கா வீடோ எதிரியின் பாசறை.

சென்னை வரை சென்று விட்டாலும் கூடத் திருமணம் என்று ஒன்று ஆகி விட்டது என்றபின் ராஜாராமன் துணை நிற்க மாட்டான். அவனுக்குக் கலாட்டா, தகராறு என்றால் பிடிக்காது.

அதுவும்தான் போகிறது தனியே வாழ்ந்து விடலாம் என்றால் அதுவும் சிரமம். ஏனெனில் அவளுக்குக் கிடைக்கப்போவதாக இருந்த வேலை கூட ராஜாராமனுடைய முதலாளியின் உறவினர் ஒருவரின் காலைப் பிடித்து அவன் ஏற்பாடு செய்ததுதான். வருங்கால மனைவிக்கு என்று வேலை கேட்டதாக அவன் சொன்னது உண்டு.

அந்த வருமானம் கிடைக்கும் என்று ஆன பின்தான் அவன் திருமணப் பேச்சை எடுத்ததும். பாயசமும் தொன்னையும் போல ஒன்றில்லாமல் மற்றதில்லை. போகிறது என்று விடுகிற மனமும் அவனுக்குக் கிடையாது.

துணையோ, வருமானமோ இல்லாமல் சென்னையில் எப்படிக் காலம் கடத்த முடியும்?

எங்கே திரும்பினாலும் பாறையில் முட்டுவது போல இருக்கவும் தன்னால் ஒன்றும் முடியாதா என்று கூடத் தோன்றி அவள் மனம் கலங்கியது. கிட்டத் தட்ட ஆறு ஆண்டுகளுக்குப் பின் கண்ணோரம் கரித்து அழுகை வரப் பார்த்தது.

வெகு சிரமப்பட்டு அழுகையை அடக்கினாள்.

ஊகூம். இல்லை. இது இந்த மனத்தளர்ச்சி அந்த மாத்திரையின் வேலை. அதன் சக்தியால் உடம்புடன்

மனமும் சோர்ந்து போனதால் மூளைக்கும் யோசிக்க முடியவில்லை. அவ்வளவுதான். ஒரு நாள் ஓய்வு எடுத்துக் கொண்டால் எல்லாம் சரியாகிப் போகும். அதுவும் ஒன்றும் கஷ்டமில்லை. உடம்பு சரியில்லை என்பதால் குறைந்த பட்சம் இன்று பிரச்சனை இராது.

எவ்வளவு மட்டமாக நடந்து கொண்டாலும் அவனும் மனிதன்தான்.

அழுத்தமான காலடிகள் அறையை நெருங்குவது புரியவும் அவசரமாக எழுந்து அமர்ந்தாள் மதுரவாணி.

வந்தது அவன்தான். வீரபாண்டி.

வாயிலிலேயே அவளை நோக்கியவன், "இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று விசாரித்தான்.

மெல்ல எழுந்து நின்று "ப ... பரவாயில்லை" என்று முணுமுணுத்தாள் அவள்.

"பசியாற வருகிறாயா?"

மனது கலங்கியிருந்த அந்த வேளையிலும் அந்த வார்த்தையை அவளால் ரசிக்க முடிந்தது.

என்ன அழகான பதம்! 'பசித்துப் புசி' என்பார்கள். சாப்பிடுவது, உண்பது எல்லாம் பசி இருந்தாலும் இல்லாவிட்டாலும் மேலே மேலே திணிப்பதற்கும் பயன் படுத்தக் கூடிய வார்த்தைகள்தான். ஆனால் பசியாற வா என்றால் எவ்வளவு சரியான பதப்பிரயோகம்!

தாலி கட்டிய மனைவி தன்னைப் பற்றி முதல் தடவையாக நல்லதாக நினைக்கிறாள் என்று அறியாமல், "ஒரு வார்த்தை சொல்ல இவ்வளவு யோசிக்கிறாயே? படித்த பெண் உனக்கு என்னிடம் இவ்வளவு வெட்கமா?" என்று ஒரு செல்ல கண்டிப்புடன் உரைத்தான் அவன்.

வெட்கத்தினால் தான் பேசாதிருப்பார்களா? வெறுப்புக் கூட பேச்சை தவிர்க்குமடா, முட்டாள். என்று



தொண்டையில் துடித்த வார்த்தைகளை வாங்கிக் கொண்டு பேசாமல், "வா போகலாம்" என்று நடந்த அவனைப் பின் தொடர்ந்தாள் மதுரவாணி.

மாலையில் வேலைக்காரி காட்டிய அங்கணத் தருகே வாளியில் நீரும் பக்கத்தில் சொம்பும் இருந்தன. அவனைப்பின்பற்றி தானும் கைகழுவிக் கொண்டு எதிர்ப்புறம் இருந்த அறைக்குள் சென்றாள்.

இரண்டு சிறு சதுரப்பாய்கள் விரித்து முன்னே இலை போடப்பட்டிருந்தது. பாயின் நுண்ணிய வேலைப்பாடு மதுரவாணியின் கருத்தைக் கவர்ந்தது.

அவள் மனதை உணர்ந்தவன் போல, "இந்தப் பாய்கள் பனை மரத்தின் குருத்து ஓலைகளால் பின்னியது. பூ வேலைக்காகத் தேவைப்படும் நிறத்தில் சாயம் காய்ச்சிக் கொள்வார்கள். வீட்டுப் பெண்களே பின்னி விடுவார்கள்" என்று விளக்கம் கூறினான் வீரபாண்டி.

பாயைத் தொட்டுப் பார்த்து விட்டு அமர்ந்து கொண்டாள் அவள்.

அருகிலிருந்த பாயில் அமர்ந்து, "உனக்கு இரவில் பலகாரமா, சோறா? பலகாரம் என்றால் இட்டிலி, தோசை இருக்கும். நான் சோறுதான் உண்பது." என்றான் அவன்.

"தோசை" என்றாள் அவள் சுருக்கமாக.

வயதான ஒரு பெண்மணி குறிப்பறிந்து பறிமாறினாள். மதுரவாணிக்குப் பசிதான். நாள் முழுவதும் சாப்பிடவில்லையே. ஆனாலும் மெத்து மெத்தென்றிருந்த போதும் தடிமனாக இருந்த தோசைகளில் இரண்டாவதை முடிக்குமுன் மதுரவாணி திணறிப் போனாள்.

சுடச் சுட மூன்றாவது தோசையுடன் பறிமாறியவன் வரவும் அவசரமாக இலை மேல் கவிழ்ந்து தடுத்தாள்.



"இன்னும் இரண்டாவது சாப்பிடுங்கம்மா. இவ்வளவு கொஞ்சமாக சாப்பிட்டா உடம்பு என்னத்துக் காவும்" என்று வற்புறுத்திய பணியாளிட மிருந்து வீரபாண்டிதான் அவளைக்காத்தான்.

"விட்டுவிடு தாயம்மா. அவளுக்கு உடம்பு சரி யில்லை அல்லவா? போதும் என்றால் விடு. நீ வேணுமானால் கை கழுவி விட்டுப் போம்மா. அசதியிருந்தால் படுத்துக் கொள். ஆனால் சாப்பிட்ட உடனேயே படுக்ககூடாது என்பார்கள். அதனால் ஓர் ஐந்து நிமிடம் உட்கார்ந்து விட்டு படு" என்று கூறி அனுப்பினான்.

தப்பித்தேன், பிழைத்தேன் என்று மீண்டும் தன் பழைய அறைக்குள் புகுந்து கொண்டாள் மதுரவாணி. இவனுக்கு மட்டும்தான் சாப்பிட்ட உடனேயே படுக்கக் கூடாது என்று தெரியுமாக்கும்! பெரிதாகச் சொல்ல வந்து விட்டான் என்று தனக்குள்ளேயே எரிச்சல் பட்டாள்.

ஆனால் ஒன்று அவனே இருதரம் உடம்பு சரியில்லாதது பற்றிக் குறிப்பிட்டது மனதிற்குக் கொஞ்சம் நிம்மதியாகவும் இருந்தது. இரவு முழுவதும் அமைதியாக யோசிக்கலாம்.

அறைக்குள் இருந்த விளக்கை அணைத்துவிட்டு இவளின் போர்வையில் மறைந்து நின்று வெளியே எட்டிப் பார்த்தாள். ஆள் நடமாட்டம் அப்படியே தான் இருந்தது. இடை வெளிவிட்டு, விட்டு. அவள் ஆராய்ந்த போதும் கடைசியில், பெருமளவு ஆள் அரவம் அடங்கி விட்ட பிறகும் இங்கிருந்து இரவில் வெளியேறுவது முடிகிற காரியம் இல்லை என்கிற முடிவுக்குதான் அவள் வர நேர்ந்தது. ஆட்கள் படுக்கச் சென்று விட்ட போதும் சுற்றிச் சுற்றி வந்த நாய்களை என்ன செய்வது? மேலே விழுந்து பிடுங்குமோ என்னவோ, குரைத்தாலே ஆட்கள் விழித்து விடமாட்டார்களா?



அத்தோடு புதிய இடத்தில் இருளில் வழிவகை அறியாமல் செக்குமாடு போல மீண்டும் இங்கேயே வந்து மாட்டிக் கொள்ள நேர்ந்தால் அது மகாக் கேவலம்.

ஒன்று நிச்சயமாகத் தப்பிச் சென்று விட வேண்டும்.

அல்லது அப்படி ஒரு முயற்சி அவள் செய்கிற விஷயமே யாருக்கும் – முக்கியமாக வீரபாண்டிக்குத் தெரியக்கூடாது. முயன்று தோற்றாள் என்று தெரிந்து விட்டால் இப்போது உள்ள மரியாதை போய்விடக் கூடும். ஒருவேளை நூற்றில் ஒரு– பத்தில் ஒரு வாய்ப்பாக அவள் இங்கேயே தங்கும்படி ஆகிவிட்டால் அந்த மரியாதையேனும் அவளுக்கு நிலைத்திருக்க வேண்டும்.

கடைசித் தடவையாக சன்னல் வழியே வெளி மைதானப் பகுதியை ஆராய்ந்து பார்த்து, இன்றிரவு நிச்சயமாய் ஒன்றும் முடியாது என்ற முடிவுக்கு வந்து சோர்வுடன் படுத்தாள் மதுரவாணி.

பகலில் உறங்கிவிட்டதாலோ என்னவோ, இப்போது தூக்கம் வர மறுத்தது.

கண்களைமூடி, உடலைத் தளர விட்டு அசையாமல் படுத்திருந்தால் கூட தூக்கத்துக்கு சமமான ஓய்வு உடலுக்கு கிடைத்துவிடும் என்று முன்பு படித்தது. நினைவு வரவே அதேபோலக் கண்மூடிப் படுத்திருந்த போது அறைக்குள் யாரோ வருவது போலத் தோன்றவே திடுக்கிட்டாள்.

அறையடித் தடிமனான அந்த மரக் கதவை இழுத்துத் தாளிட வலுவற்று, துணைக்கு யாரையும் அழைக்க மனமும் அற்று, கதவை அப்படியே விட்டுவிட்டு படுத்த மடத்தனத்தை நொந்தபடி அவசரமாக எழுந்து நோக்கியவளுக்கு மெய்சிலிர்த்தது.

வெளி மைதானத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் வெளிச்சம் சன்னல் வழியே அறைக்குள்

வருமிடத்தில் போய் நின்று வந்திருப்பவன் இன்னான் என்று காட்டிக் கொண்டவன் வீரபாண்டிதான்.

வேரோடினாற் போல நின்றவளை நெருங்கி, "உன்க்கு. . . அவ்வளவாக உடம்பு சரியில்லை என்று எனக்குத் தெரியும், கண்ணு. ஆனால். . . என்னால் அங்கே. . . முடியவில்லை. கண்ணு, உனக்கு இமிசை இராமல் பார்த்துக் கொள்ளுகிறேன். . . என்ன?" என்று அவளது சில்லிட்டிருந்த கைகளைப் பற்றினான்.

அவனது பெரிய கைளை உதறிவிட்டு ஓடிவிட வேண்டும் போலத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு மதுரவாணி வேகமாக யோசித்தாள்.

உடம்பு சரியில்லாதவள் என்கிற நிலையில் கூட வந்து நிற்கிறானே, இவனெல்லாம் மனிதன்தானா என்கிற ஆத்திரத்தைப் பெரு முயற்சி செய்து அடக்கி கொண்டு யோசித்தாள்.

இவனிடமிருந்து இப்போது தப்புவது சாத்தியம் தானா? இப்போது அவன் மறுத்தால் போய் விடுவானா?.. ஆனால் அவன் அவளது சம்மதத்தைக் கூட கேட்கவில்லையே! கேட்பானேன்? கேவலம் விலை கொடுத்து வாங்கிய பொருள்தானே.

அத்தோடு உடம்பு சரியில்லை என்று அறிந்தும் ஒரு பெண்ணை அழைப்பவன் ஒரு மறுப்பில் விலகி விடவா போகிறான்? ஆறடி உயரத்தில் அதற்குச் சரியான தேகக்கட்டுடன் இருக்கும் இவனை எதிர்ப்பது தான் சாத்தியமா?

சற்றுமுன், எங்கே திரும்பினாலும் பாறையில் முட்டுவது போல உணர்ந்தது நினைவு வந்தது.

ஒருவேளை.. ஒருவேளை அக்கா கூறியதில் இது ஒன்று உண்மையாகி, அவளுக்குரியது என்று கருதப் பட்ட வாழ்வு இதுவாகவே இருக்குமோ?

அப்படியிருந்தால் இதை ஒரு ரசாபாசத்தில் தோல்வியில் - பலப் போராட்டம் என்றால் தோல்வி



நிச்சயம் தானே - தொடங்குவது எந்த அளவு புத்திசாலித்தனம்? இவனிடம் மறுத்து திமிறி, போராடி, அவனுள் வக்கிரத்தைக் கிளப்பி வேதனையை இழுத்துக் கொள்வதை விட....

அதற்காக மனதை அடியோடு மறைத்து இவனிடம் கொஞ்சிக் குழைவதும் அவளால் முடியாத காரியம் என்பதோடு அதற்குரிய தகுதியும் இவனுக்கு இல்லை.

மவுனமாகவே நின்ற மனைவியை மெல்ல அருகேயிழுத்து வீரபாண்டி அணைத்தபோது அவள் மறுப்பேதும் காட்டவில்லை.

ஆனால் வெகுநேரம் கழித்து அவளது விழிகளில் கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் பெருகியது.

இந்தப் பட்டிக்காட்டு பண்ணையார் மட்டும் இவ்வளவு மென்மையாக நடந்து கொள்ளாமல் கொஞ்சமேனும் முரட்டுத்தனம் காட்டியிருந்தால் இவன் மேல் உள்ள வெறுப்பை இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்வது எளிதாக இருந்திருக்குமே என்று மதுரவாணிக்குத் தோன்றியது.

## 6

இரவு வெகுநேரம் தூக்கமின்றிக் கலங்கிவிட்டு ஒருவாறு கண்ணயர்ந்த மதுரவாணி, காலையில் விழித்தபோது வீரபாண்டி நல்ல வேளையாக அங்கே இல்லை என்று தோன்றியது.

முன் இரவில் அவனை எதிர்க்கும் துணிவின்றி, இது தான் விதியோ என்று பணிந்ததை எண்ணி அவமானமாக இருந்தது. இன்னா செய்தாரை ஒறுக்க அவர் நாண நன்னயம் செய்து விடுகிற வள்ளுவர்த் தனமோ. அறைகிறவனுக்கு மறுகன்னம் காட்டுகிற ரகமனமோ இல்லாததால் ஆத்திரம் வந்தது.



எப்படியாவது வீட்டைவிட்டு வெளியேறினாலும் பிறகு உணவு, உறைவிடத்துக்குத் தனியேகிடந்து போராட வேண்டுமே என்றார். அதுவும் வெறுப் பாகவே இருந்தது. அப்படி ஒதுங்கிப் போவது தண்டிப்பது ஆகுமா? அதைவிட உள்ளிருந்தே உறுத்தினால் என்ன?

ஒரு மனைவி நினைத்தால் இருபத்தி நாலுமணி நேரமும் துன்பம் தர முடியுமே! பிடிக்காததைச் சமைத்து வயிற்றில் அடிக்கலாம். வாய்வார்த்தையால் மனதில் அடிக்கலாம். வீண்செலவு செய்து பணத்தைப் பாழாக்க லாம்...

என்னென்னமாதிரி பழிவாங்கலாம் என்று யோசித்தபடியே எழுந்தாள் மதுரவாணி.

அவளது அசைவுக்காகக் காத்திருந்தவன் போல வீரபாண்டி உள்ளே வந்தான். தாழ்வான நிலைப்படி இடித்துவிடாமல் குனிந்து வந்தவன், "ஆக, விழித் தாயிற்றா? பள்ளி எழுச்சிக்கு திருப்பாவை, திருவெண் பாவை பாட யாரை அழைப்பது என்று எனக்கு கவலையாகிப் போயிற்று" என்று சிரித்தான்.

வெற்றிச் சிரிப்பா என்று புகைந்த போதும், திருப்பாவை, திருவெம்பாவை காலையில் பாடுவது என்று இவனுக்கு எப்படித் தெரியும் என்று வியப்பாக வும் இருந்தது.

அவனது சிரிப்பையோ, கேலியையோ கண்டு கொள்ளாமல் ஒதுக்கி, "நான் பல்துலக்கிக் குளிக்க வேண்டும்" என்று முணுமுணுத்தபடி அவளது பெட்டி யருகே சென்றாள். "செய்" என்று திரும்பி தாயம்மாவை விசாரித்தான் வீரபாண்டி. 'அம்மா' வுக்குக் குளிக்க வென்னீர் எடுத்து வைக்கச் சொன்னான்.

பெத்த உபசாரம் தான் என்று எண்ணியவள் வென்னீரை மறுத்து விட்டுப் பல்துலக்கியபோது,



தண்ணீர் சொம்புடன் அருகிலேயே நின்று வள வளத்தாள் தாயம்மா.

வீடு இன்றுதான் லெட்சுமி களையோடு இருக்கிற தாம். இனி இவள் மடமடவென்று பிள்ளைகளைப் பெற்றுப் போட்டு, வெறிச்சோடிக் கிடக்கும் இந்தப் பெரிய வீடு முழுமையும் நிரப்ப வேண்டுமாம்.

முதலில் அவளுடைய அருமையான 'அய்யா' வின் பேர் சொல்ல ஓர் ஆண் பிள்ளையைப் பெற்று விட வேண்டுமாம். அய்யாகூட சொல்லி இருக்காவளாம், ரெண்டு ஆம்பிளை பிள்ளை, ரெண்டு பொம்பிளைப் பிள்ளையின்னு...

சட்டென மதுரவாணியின் சலனம் நின்றது. பரவாயில்லை. நன்றாகவே இவனைப் பழிவாங்க முடி யும் போலிருக்கிறதே! நாலு பிள்ளைகளுக்கு ஆசைப் படும் இவனுக்கு ஒரு பிள்ளைகூட இல்லாமல் செய்து விட்டால்?

குளிக்கப் போவதாகக் கதவை மூடிக் கொண்டு யோசித்தாள். இந்த வீரபாண்டி அவளது பணத்தினால் அவளுடைய கணவன் என்கிற உரிமையை விலைக்கு வாங்க முடிந்தது. வாங்கி விட்டான். ஆனால் அவளது வயிற்றில் அவளது ரத்தமும் சதையுமாக உருவாகக் கூடிய ஒரு குழந்தைக்குத் தந்தையாகக் கூடிய தகுதி அவனுக்குக் கிடையாது. இப்படி ஒரு 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' தனத்துக்கு ஒரு வாரிசை அவள் சுமக்கப் போவது இல்லை. நோ. நெவர். பிள்ளை, பிள்ளை என்று அவன் ஏங்கித் தவிக்கட்டும்.

குறைந்த பட்சம் இதையேனும் அவள் சாதித்தாக வேண்டும்...எப்படியாவது..எப்படிச் சாதிப்பது? இந்தப் பட்டிக்காட்டில் அவளுக்குத் தேவையானதை எப்படி வாங்குவது?

அவசரமாகக் குளித்துவிட்டு அவள் வந்தபோது வெளியே செல்லத் தயாராக இருந்தான்.

தயாராக என்றால் பாண்ட், ஷர்ட், ஃபுல்சூட் என்று இல்லை. வழக்கமான வேட்டி, முக்கால் கை சட்டைதான். ஆனால் அழுக்கு இல்லாமல் இருந்தது. அத்தான் வாசுவுக்கு எவ்வளவோ தேவலை.

அவனிடம் யாரோ ஒரு எடு பிடி போல ஒருவன் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தான்.

சட்டைக் கையை அளவாக மடக்கிவிட்டபடியே, "இன்னும் ஏன் என்னிடம் கேட்கிறாய் வேலு அதுதான் அம்மா வந்துவிட்டாளில்லையா?" என்ற வீரபாண்டியின் குரலில் துள்ளல் இருந்தது.

அம்மாவா? யார் அந்த 'அம்மா' என்று யோசித்தபடி வந்தவளுக்கு அந்த வேலு, அவள் அருகே வந்து நின்று, "அம்மா" என்று அழைக்கவும் வேடிக்கையாக இருந்தது.

ஆனால் அது மெய்தானே. அவள்தானே புதிதாக வந்திருக்கும் அம்மா! வந்திருக்குமா? இல்லை. வாங்கப்பட்டிருக்கும் அம்மா என்பதுதான் சரி.

"என்ன?" என்றாள் சற்று எடுப்பாகவே.

"சாமானுங்கம்மா..." என்று இந்த வேலு இழுக்கையில் வீரபாண்டியே வந்துவிட்டான் "இவன் பெயர் வேலு, கண்ணு. சாப்பாட்டுக்கு என்னென்ன வேண்டும் என்று லிஸ்டு கொடுத்தால் இவன் வாங்கி வருவான். இன்று உனக்கு என்ன சாப்பிடவேண்டும் என்று இருக்கிறதோ, அதை வாங்கிவரச் சொல்லு" என்றான்.

அவளது பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைப்பது போல உணர்ந்தாள் மதுரவாணி, "சாப்பாட்டுக்கு மட்டும் தான் வாங்குவாரா?" என்று மெதுவாக வினவினாள்.

"அவனிடம் ஒருமையில் பேசு" என்று தாழ்ந்த குரலில் கூறி விட்டு, "இவன் எல்லாமே வாங்கி வருவான், கண்ணு. சோப்பு, பவுடர், ஸ்னோ, கண்மை... எது வேணுமானாலும் எழுதிக் கொடுத்து அனுப்பு.



டவுனுக்குப் போய் வாங்கிவருவான். பணத்தைப் பற்றிக் கவலைப் படாதே. கணக்குப் பிள்ளையிடம் வாங்கிக் கொள்ளுவான். சாப்பாட்டு விஷயமும் சேர்த்து எழுதிக் கொடுத்துவிடு வரட்டுமா?" என்று கிளம்பினான் வீரபாண்டி.

"வந்து..."

சட்டெனத் திரும்பி, "என்னம்மா?" என்று குரலில் மென்மையுடன் வினவினான் வீரபாண்டி.

"இங்கே. . இங்கே உங்களுக்கு. . . மற்றவர்களுக்கு என்ன பிடிக்கும் என்று எனக்குத் தெரியாதே..." என்று இழுத்தாள் அவள்.

"அதனால் என்ன?" என்றான் அவன் இலகுவாக. "உனக்குப் பிடித்ததை வாங்கச் சொல் இனி உனக்குப் பிடித்ததைதான் இங்கே எல்லோரும் சாப்பிட்டாக வேண்டும். எது வேண்டுமோ சொல்லியனுப்பு" என்று முடிவு போல கூறிவிட்டுக் கிளம்பினான்.

லேசாகத் தொண்டைக்குள் அடைத்தது மதுரவாணிக்கு. சமாளித்துக் கொண்டு, "வந்து. . ." என்று மீண்டும் இழுத்தாள் மதுரம்.

சலித்துக் கொள்ளாமல் திரும்பிவந்து, "என்ன கண்ணு?" என்று கேட்டான் அவன்.

கண்ணாம் மூக்காம். என்ன உருக்கம்! "எனக்கு அளவு ஏதும் தெரியாதில்லையா?" என்ற போது ஏதோ, வார்த்தை அளவிலேனும் அவனை மடக்கி மறுத்து விட்ட திருப்தி உண்டாயிற்று அவளுக்கு.

"ஆ-மாம். அதுசரிதான். எனக்குத் தெரியும். ஆனால், பார்கண்ணு, இன்றைக்குத் தென்னைக்கு உரம் வைக்கவேண்டும். கூட நின்று பாராவிட்டால் சரியாகக் கலக்க மாட்டார்கள் சரியாகப் பள்ளம் தோண்டி வையாமல் மேலாகப் பரத்தி மண்தூவி விட்டு விடுவார்கள். இவ்வளவு செலவு செய்து வைக்கிற உரம் பாதி வீணாகி விடும். அதனால் ஒன்று செய்.



இன்றைக்குத் தவிசைக் கூப்பிட்டு அளவு கேட்டுக் கொள். நாளை நான் கற்றுத் தருகிறேன் வரட்டுமா?"

வாசு அத்தான் வேலை, தொழில் என்று இப்படிப் பேசி அவள் கேட்டதே இல்லை!

ஏதோ தோன்றவும், "சாப்பிட்டீர்களா?" என்று கேட்டு விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.

ஆனால் அவன் பளிச்சென முகம் வெகுவாய் மலர, "வேலு, நீ போய்த் தவிசுப் பிள்ளையை அழைத்துவா" என்று வேலையாளை அனுப்பிவிட்டு அவள் அருகில் வந்தான். "பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக என் அம்மா கேட்டது. இப்போது நீ அதே கேள்வி கேட்பது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது, தெரியுமா?" என்றவன் மதுரவாணியின் முகத்தை ஏந்தி நெற்றியில் முத்தமிட்டான்.

என்ன கேட்டேன் என்று யோசித்தவளுக்கு பதிலே போல, "நான் உண்டுவிட்டேன். நீயும் ஏதாவது சூடாகக் கொண்டுவரச் சொல்லிப் பசியாறு. வரட்டுமா?" என்று மீண்டும் ஒருதரம் அவசரமாகக் முத்தமிட்டுவிட்டு அவன் வெளியேறவும் அவளுக்குக் கொஞ்சம் மனம் நெகிழ்ந்தது.

ஆனால் இந்த நெகிழ்ச்சியினால் அவள் அவர்கள் இருவரையும் – அவள் விரும்பிய வாழ்வைக் கெடுத்த இருபேரையும் மன்னித்து விடப் போவது இல்லை. அவரவர் விரும்பியதை எட்டாக் கனியாக்கப் போகிறாள்.

அதற்கு முதல்படியாக, அந்த மாத்திரையின் பெயரை சாமான் லிஸ்டில் எழுதி, "இதை மருந்துக் கடையில் வாங்கு" என்று வேலுவைப் பணித்தபோது அவள் குரலில் பிடிவாதம் இருந்தது.

அடுத்தபடியாக அவளுக்குத் தாலிகட்டிய அவனிடம் இணக்கமாகப் பேசிப்பழகத் தொடங்கினாள்.

அவளுக்காக உயிரைவிடத் தயாரானவனாக வீரபாண்டி நடந்து கொண்டதால் அவளுக்கு அது



எளிதாகவே இருந்தது. ஆனால் அவளே எதிர்பார்த்திராத வகையில் அந்த இணக்கம் அவளுக்குச் சுகமாகவும் இருந்தது.

கோகிலாவின் கணவன் வாசு, அவர்களுக்கு சொந்தமான பாத்திரக் கடையில் அவ்வப்போது சிறு பொழுது மட்டுமே கல்லாவில் அமர்வதுண்டு. ஆனாலும் அவன் அறைக்குள் வரும்போது வியர்வை நெடியும் சிகரட் புகையுமாக மதுரவாணி அங்கிருக்க முடியாமல் வெளியேறி விடுவாள். ஆனால் வயலில் கூட இறங்கி வேலை செய்கிறவன் என்று சொல்லப்படுகிற வீரபாண்டி, வீடு வந்ததும் செல்லும் முதல் இடம் குளியல் அறைதான். பீடி, சிகரட், வெற்றிலை எந்தப் பழக்கமும் இல்லாதிருந்த அவனது சுத்தம் அவளுக்கு வெகுவாகப் பிடித்தது.

அவளிடம் அவன் காட்டிய அன்பு அவளை இன்னமும் அதிகமாகப் பாதித்து இளக வைத்தது.

முதல்நாள் மாலையில் ஒரு பானத்தைக் கொண்டு வந்து குடித்துப் பார்க்கச் சொன்னான்.

நன்றாகப் பிசையப்பட்டிருந்த மாம்பழத் துணுக்குகளைக் கண்டதும் பாட்டிலில் அடைக்காத ஃப்ரெஷ் மாம்பழச் சாறு தானே என்று அருந்தத் தொடங்கியவளுக்குப் புதிய சுவை தெரியவும் விழிகள் விரிந்தன.

அவள் முகத்திலேயே பார்வையைப் பதித்திருந்த வீரபாண்டி முறுவல் செய்து சொன்னான். "பதனீர் மாலைப்பதனீர் இறக்கியதில் மாம்பழம்." என்று தொடங்கியவன் அவள் முகத்தில் குழப்பத்தைக் காணவும் மேலும் சிரித்து, "பனைமரம் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

"நன்றாய் பதனீர், பனைவெல்லாம், கருப்பு கட்டி எல்லாம் பனைப் பொருட்கள் என்பது கூடத் தெரியும்" என்று ரோஷத்தோடு தொடங்கியவள், "ஆனா

மாலைப்பதனீர், இறக்குவது இதெல்லாம் தெரியாது" என்று முடித்தாள.

"முதலிலிருந்து சொல்லுகிறேன் கேள். பனை மரத்தில் காய்ப்பதற்குமுன் பாளை வரும். அதை லேசாக சீ வி, ஒரு மரக் கருவி கொண்டு இருக்கி விட்டால் அதில் ஒரு இனிப்பு நீர் கசியும். அதுதான் பதனீர். சீவிய பாளைக்கு நேராக மண்கலயங்களைக் கட்டிப் பதனீரைச் சேகரிப்பார்கள். இந்த இனிப்பு நீர் புளிக்காமல் இருப்பதற்காக கலயத்தில் லேசாகச் சுண்ணாம்பு தடவுவார்கள். தடவாவிட்டால் கள்ளாகி விடும். மேலே இருந்து இறக்கிக் கொண்டு வருவதால் பதனீர் இறக்குவது என்பார்கள். ஒரு நாளைக்கு ஒரு தரம் – காலையில்தான் பொதுவாகப் பதனீர் இறக்குவது. மாலையிலும் குடிப்பதற்கு வேண்டுமானால் மிகவும் கொஞ்சமாக சுண்ணாம்பு தடவி வைப்பார்கள். இந்தப் பதனீரோடு மாம்பழம், இளம் நுங்கு பிசைந்து சாப்பிட்டால் மிக ருசியாக இருக்கும்" என்று விளக்கினான் அவன்.

அவள் படிக்கவென்று ஆங்கிலப் பத்திரிகை வரவழைத்தான். ஆடுபுலி ஆட்டம் கற்றுக் கொடுத்து விட்டு, வேண்டுமென்றே அவளிடம் தோற்றான்.

ஒருநாள் பெற்றவர்கள் மற்றவர்கள் அவளை அழைக்கும் விதம் கேட்டு அறிந்தான். மதுக்குட்டி, மதுரா என்பன பழக்கப்பட்டவை என்று அறிந்து வாணி என்பது அவன் மட்டுமே அழைக்கப் போகும் பெயர் என்றான். வாணிக் கண்ணு, வாணிச்செல்லம்... சர்வம் வாணிமயம்.

பெயரைப் பற்றிய பேச்சின் போது "அது என்ன வீரபாண்டி என்று பெயர் வைத்திருக்கிறார்கள்?" என்று வினவினாள் மதுரவாணி.

"வீரபாண்டியன். அழைக்க வசதியாக அது வீரபாண்டி என்று சுருங்கிவிட்டது. என் பாட்டி



அதையும் சுருக்கி வீராண்டி என்பார்கள்" என்று சிரித்தான் அவன்.

அவனது சிரிப்பில் லயித்தபடியே, "பேராண்டி வீரபாண்டியா?" என்று தானும் நகைத்தாள் அவள். அவனோடு இணைந்து நகைப்பது இலகுவாக இருந்ததும் அவளுக்கு ஓர் ஆச்சரியம்தான்.

கூடவே மூளை வேகமாக வேலை செய்தது. அவள் மதுரவாணி. மதுரா. அவன் பாண்டியன். மதுரையை ஆண்ட பாண்டியன். பரவாயில்லை பெயர் பொருத்த மாகத் தான் இருக்கிறது. மதுரா பாண்டியன். பி. யூ . . . ட்டிஃபுல்!

அவள் முகத்திலேயே பார்வையைப் பதித்திருந்த அவன் என்னவென்று கேட்கவும் மதுரா திகைத்தாள். இவனிடம் என்னவென்று விளக்குவது?

மதுரைப் பாண்டியர்களைப் பற்றியோ, தஞ்சைச் சோழர்களைப் பற்றியோ, வஞ்சிச் சேரர்களைப் பற்றியோ இந்தப் படிக்காத பட்டிக்காட்டுப் பாண்டியனுக்கு என்ன தெரியக் கூடும்?

இழப்பின் வருத்தத்தை உள்ளூர மறைத்து, "வந்து... ப. பழைய.. முன் காலத்தில் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு தமிழ் நாட்டை ஆண்ட ராஜாக்களைப் பாண்டியர்கள் என்பார்கள்." என்று கணவனுக்கு விளக்கமுற்பட்டாள்.

"அப்படியா?!" என்று ஆச்சரியம் போல அவன் கேட்கையில் அவனது விழிகளின் பளபளப்பு வேறு எதையோ உணர்த்தவும், "உ. . உங்களுக்குத் தெரியும்! தெரியும் தானே?" ஆர்வத்தோடு வினவினாள் மதுரவாணி.

லேசாகச் சிரித்துவிட்டு, "இந்த அளவுகூடத் தெரியாமல் இருக்குமா சொல்லு? நானும் பத்துவரை படித்திருக்கிறேன் தானே." என்று வீரபாண்டியன் கூறவும் அவளுக்கு உள்ளே ஏதோ பாரம் விலகினாற் போல மனம் லேசாயிற்று.



"பிறகு ஏன் படிக்கவில்லை?" என்று வினவினாள்.

"அப்பா நோய்ப்பட்டுப் போனார். வயல் வரப்பை பார்க்க வேறு ஆளில்லை. ஏதோ, எழுதப் படிக்க, ஆங்கிலத்தில் ஒரு கடிதம் வந்தால் புரிந்து கொண்டால் போதாதா என்கிற எண்ணம். போகட்டும். முக்கியமான விஷயத்தை இடையில் விட்டுவிட்டோமே அன்றைக்கு மதுரை மாநகரைப் பாண்டியர்கள் ஆண்டார்கள். இன்றைக்கு இந்த மதுர வாணியை இந்தப் பாண்டியன். ...அடடா, இங்கிருந்து எப்படி ஆள்வது? அறைக்குள் போகலாமா?" என்று அவன் கண் சிமிட்டிக் கேட்கவும் அவளுக்கு வெட்கமாகிப் போயிற்று.

அதன்பின் கணவனின் பேச்சில் கூடுதல் கவனம் செலுத்தினாள் மதுரவாணி. அவன் அவ்வப்போது கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், வில்லிபாரதம் போன்ற நூல்களிலிருந்து ஏதாவது மேற்கோள் கூறுவதைக் கேட்கையில் அவள் மனம் பூரித்துப் போகும். ஷெல்லியும் கீட்சும்தான் புலவர்களா? கம்பரும், புகழேந்தியும், வில்லிப்புத்தூராரும் எந்தவகையில் குறைந்து போனார்கள்.?

ஒருநாள் இரவில் பேசிக் கொண்டு இருக்கும் போது அவன் திடீரென்று வாய்விட்டு சிரித்தான். என்ன வென்று கேட்ட மனைவியிடம், "என்னமோ சரி யில்லை என்கிற உணர்ச்சி இருந்து கொண்டே இருந்தது. என்னவென்று இப்போதுதான் புரிந்தது" என்று தொடங்கி விவரம் சொன்னான். "இன்று பகலில் உன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேனா, விதை நெல்லுக்குப் பணம் கொடுத்த ஒருவருக்கு கடைசியாக வைக்கோல் வண்டியை அனுப்பி விட்டு வந்திருக்கிறேன். தொடக்கநிலை விதை நெல்லுக்கு பதிலாக கடைசி நிலை வைக்கோலை போய் ஊகூம் நீ என்னை ரொம்பவும் தான் ஆட்டிவைக்கிறாய்" என்று மேலும் நகைத்தான் வீரபாண்டியன்.



உள்ளூர மகிழ்ந்தபடி, ஒற்றைவிரலால் அவனது நெற்றியைத் தொட்டு, "இங்கே மறை கழன்று விட்டது என்று நினைப்பார்" என்றாள் அவள் கேலியாக.

"நினைப்பது மட்டுமா? கொஞ்சம் பெரியவர், 'என்னடா' என்று நேரிலேயே வந்து நின்று இதே மாதிரிக் கேட்டும் விடுவார். எனக்கென்ன? நான் பாட்டில் மறையைக் கழட்டி விட்ட ஸ்க்ரூடிரைவர் இவள்தான் என்று உன் பக்கம் கைகாட்டி விடுவேன்" என்றான் அவன் இலகுவாக.

"அப்புறம் நிஜமாகவே மறை கழன்றே விட்டது என்று முடிவே எடுத்துவிடுவார் அவர்" என்று கலகலவென்று சிரித்தாள் மனைவி.

இருவரும் சிரித்து முடித்ததும், "ஆனால் நான் சொல்வது உண்மைதான், வாணிக் கண்ணு" என்றான் அவன் சீரியசான குரலில். "முன்னேல்லாம் நான் இப்படி இருந்ததில்லை. முடியாது என்றால் முடியாது தான். உனக்கு கஷ்டம் என்றால் எனக்கு என்னவென்று லேசில். . . லேசில் என்ன, விட்டுக் கொடுப்பதே இல்லைதான் ஆனால் இப்போது எனக்கு யாராவது கஷ்டப்பட்டால் சகிக்க முடிவது இல்லை தங்கம். நான் மகிழ்ச்சியோடு இருக்கிறேன். ஏதாவது செய்து என்னைப் போலவே மற்றவர்களையும் மகிழ்ச்சியோடு வாழவைக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அன்பு மனிதரை என்னமாய் மாற்றி விடுகிறது!" என்று வியந்தவன், "எப்படியோ என் தலைக்குள் முடுக்க வேண்டியதை முடுக்கி, தளர்த்த வேண்டியதைத் தளர்த்தி ஒரு நல்ல மனிதனாக என்னை விளங்கச் செய்யும் ஸ்க்ரூ டிரைவர் நீதான் என்றுதான் நான் நினைக்கிறேன்." என்று உள்ளார்ந்த குரலில் உணர்ச்சிப் பெருக்குடன் அவன் பேசியபோது மதுரவாணிக்கு உள்ளே என்னவோ செய்தது.

சமாளிக்கும் முயற்சியாகக் கேலியில் இறங்கி, "அடேயப்பா! உபமான உபமேயங்கள் எல்லாம்

தண்ணீர் பட்டபாடு போலத் தெரிகிறதே! இதையே தொடர்ந்து உருவக அணியாய், என் இனிய ஸ்க்ரு டிரைவர் என்று என்னை அழைக்கத் தொடங்கி விடாதீர்கள், கவிஞரே!" என்று கூறிச் சிரித்தாள்.

"கவிஞரே என்றாயில்லையா? ஒரு பாடல் சொல்லட்டுமா? "அன்பெனப்படுவது யாதெனில் எல்லோரும் இன்புற்றிருக்கச் செயல்" எப்படி இருக் கிறது?" என்று கேட்டான் அவன்.

"ஆகா! இரவல் சரக்கு திருக்குறளை அவிழ்த்து விட்டு விட்டுக் கவிஞர் என்று பெயர் தட்டிக் கொள்ளப் பார்க்கிறீர்களா?" விழிகள் மலர அவனை நோக்கி விட்டு வேறு புறம் திரும்பினான் வீர பாண்டியன்.

ஏதோ குறுகுறுக்க அவசரமாக யோசித்துப் பார்த்துவிட்டு, "ஊகூம். இல்லையே. திருக்குறளில் இப்படிப் பாட்டு கிடையாதே... பின்னே... வா..வ்! நி.. நிஜமாகவே உங்களுடையது! மெய்யாகவே நீங்கள் கவிதான்!" என்று உளமாரப் பாராட்டினாள் மதுரா.

சிறுகலக்கமும், பெருமையுமாக முறுவலித்து, "நீ என்ன அர்த்தத்தில் சொல்லுகிறாயோ, தெரிய வில்லையே? கவி என்றால் குரங்கு என்றும் ஓர் அர்த்தம் உண்டே.." என்று இழுத்தான் அவன்.

"சேச்சே. உங்களைப் போய்க் குரங்கு என்பேனா? மாட்டவே மாட்டேன். அப்புறம் குரங்கின் மனைவியும் குரங்கு என்றாகிவிடுமே. அதனால்தான் ஆ" என்று குறும்பு பேசியவள் அப்புறம் அவன் அணைப்பில் திணறிப் போனாள்.

படித்து பட்டம் பெறாதபோதும் தன்கணவன் அறிவாளி என்கிற கர்வம் மதுரவாணிக்கு உண்டா யிற்று. அவனைப் பற்றி அவளுக்கிருந்த பெரும் குறை களில் ஒன்று அடியோடு மறைந்து போயிற்று. ஆனால் மற்றொன்று அப்படியே இருந்தது. அதுதான் அவனது மாடுபிடிவேலை.



# 7

வீரபாண்டியன் மதுரவாணியை எவ்வளவு தான் அன்பில் குளிப்பாட்டியபோதும், அதிலே அவளும் அகமகிழ்ந்து நெகிழ்ந்தபோதும். கணவனது அந்த ஒரு பிழையை அவளால் மன்னிக்கவோ மறக்கவோ முடியாததால் அந்தமாதமும் சாமான் லிஸ்ட்டில் அந்த மாத்திரையின் பெயர் இடம் பெற்றது.

வேலு மருந்துக் கடையில் மாத்திரை வாங்கிக் கொண்டு கிளம்பியதும் அதே கடைக்கு லேசாக இருமியவண்ணம் ஒரு பெரியவர் வந்தார். வீரபாண்டி யனுடைய உறவுமுறைக்காரரான அவர் சிறு கவலை யுடன், "போகிறவன் வீரபாண்டி வீட்டு வேலைக்காரன் தானே? யாருக்கு என்ன உடம்பாம்?" என்று கடைக் காரரை விசாரித்தார்.

கிழவருக்கு மிகவும் பழக்கமானவர் கடைக்காரர் எனவே தயக்கமில்லாமல், "ஒருவருக்கும் ஒன்றுமில்லை இது... என்று குரலைத் தணித்து விவரம் சொன்னார்.

சற்றுத் திகைத்து நின்றுவிட்டு, "படித்த பெண்ணாமில்ல? அப்படித்தான் இருப்பாள்".

என்று தன் இருமலுக்குரிய மருந்தை வாங்கிக் கொண்டு போனார் பெரியவர்.

வேலு வாங்கிவந்த மாத்திரை அட்டையைக் கண் மறைவான இடத்தில் பத்திரப்படுத்திய மதுரவாணி அடுத்து முடிக்க வேண்டிய பழியில் கவனத்தைச் செலுத்தினாள். விரைவிலேயே கோகிலவாணி பணத்துக்காக வருவாளே..

அன்றிலிருந்து விவசாயத்தில் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்டாள் அவள். அவள் கேட்பதே சந்தோசம் போல அவனும் சலிக்காமல் பதில் சொன்னான்.



"இன்று நானும் உங்களோடு வயலுக்கு வருகிறேனே....." என்று அவள் கொஞ்சலாகக் கேட்ட போது அதையும் வீரபாண்டியன் மறுக்கவில்லை, வழக்கமான பைக்கை விடுத்து வண்டிபூட்டச் சொன்னான். உடன் வந்தான் அவ்வளவே. அங்கே சென்றதும் ஒரு பெரியமரத்தின் நிழலில் அவளை அமரச் செய்து விட்டு, சட்டையைக்கழற்றி விட்டு, லுங்கிக்குமாறி அவனும் வயலுக்குள் இறங்கவும் அவளுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவன் வயல் வேலை செய்கிறவன் என்று தாயம்மாமூலம் கேள்விப் பட்டிருந்த போதும், வீட்டில் அவ்வளவு சுத்தமாக இருப்பவன், வயலில் சகதியிலேயே இறங்கிவேலை செய்யக்கூடும் என்று அவள் நினைத்ததில்லை.

சகதி என்று பாராமல் அங்குமிங்கும் நடந்து மற்றவர்கள் செய்த வேலையைக் கவனத்துடன் அவன் கண்காணிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்குச் சற்று நேரத்தில் போரடித்தது. வீரபாண்டியனின் ஆலோசனைப்படி கையோடு கொண்டு வந்திருந்த புத்தகத்தில் மனம் லயிக்க மறுத்தது.

சற்று நேரம் நடக்கலாம் என்று எழுந்து சென்றவள் வரப்பின்மேல் கால்வைத்த போது வீரபாண்டியன் வேகமாக வந்து அவளைத் தடுத்தான். "ஊகூம். கூடாது, கண்ணு. நெல்வயலின் வரப்பின்மேல் செருப்புக் காலோடு நடக்கக் கூடாது, கண்ணு. வயிற்றுக்குப் படியளக்கும் அன்னலட்சுமி விளையும் பூமிபார், அதனால் அப்படி ஒருமரியாதை" என்று கனிவான குரலில் விளக்கியபோது மறுக்கத் தோன்றவில்லை அவளுக்கு.

திரும்பிப் போய்விடலாமா என்று அவள் யோசித்த போது, அவளது தயக்கத்தை வேறுவிதமாய்ப் புரிந்து, "வேணுமானால் நான் தூக்கிச் செல்லட்டுமா?" என்று அவளருகில் நெருங்கினான் கணவன்.

ஓர் எட்டு பின்னடைந்து, "எல்லோரும் பார்க்கிறார் கள்." என்று தனிந்த குரலில் எச்சரித்தாள் மனைவி.



"பார்த்தால் என்ன? என்பெண்டாட்டி பூமாலை அணிவது போல அவளைச் சுமப்பதே எனக்குச் சுகம்"என்ற போது அவளுக்கு வந்தகாரியமே மறந்து விடும் போல் ஆயிற்று.

ஆனாலும் பிடிவாதமாக, மதிய உணவின் போது; அவனிடம் நிலம், பயிர், அதற்காகும் செலவு, வரவு என்பனவற்றில் ஆர்வம் காட்டிப் பேசி விவரம் அறிந்து கொண்டாள்.

பேச்சினூடே அவளது கவனம் சகதி தெறித் திருந்த லுங்கிமேல் பாய்ந்தது. கூடவே அவனது சுத்தம் நினைவு வர அதைக்குறிப்பிட்டு, "இந்தச் சகதியில் அருவருப்பு இல்லாமல் நீங்கள் இறங்கியது ஆச்சரிய மாயிருந்தது" என்றாள்.

"கூடவே நின்று கண்காணித்தால் தான் வேலை சுத்தமாகச் செய்வார்கள், வாணிம்மா, உடையவன் பாராவிட்டால் பயிர் ஒருமுழம் கட்டை' என்று பழ மொழியே இருக்கிறது' தெரியுமா? முழம் என்றால் அளவு தெரியுமா? சுமார் அரை மீட்டர். இப்போது களை பிடுங்கியிருக்கிறார்கள் பார், ஒன்றிரண்டை விட்டு விட்டால் பயிரின் சத்தை அது உறிஞ்சிவிடும். அப்புறம் பயிர் எப்படி வளரும்? அதனால் தான் கூடவே நிற்கிறேன்." என்ற விளக்கினான் வீரபாண்டியன்.

உள்ளேததும்பிய பெருமையும் ஆர்வமும் கண் ணில் பிரதிபலிக்க அவனை நோக்கினாள் மதுர வாணி

"ஊகூகும், இந்த நேரத்தில் இந்தப் பார்வை பார்த்தால் "நான் எப்படி வயல் பக்கம் போவது? இதை ராத்திரிவைத்துக் கொள்" என்று எழுந்தவன் பிறர் அறியாமல் அவளது கன்னத்தை வருடி விட்டுப் போனான்.

விவசாயம், வருமானம் பற்றி அவள் அக்கறை காட்டியது வீரபாண்டியனுக்கு மிகவும் மகிழ்ச்சி

யளித்தது. 'இன்று வாழை இலை விற்றபணம் இந்தா',இன்று பதனீர் விற்றபணம் இவ்வளவு உள்ளேவை."என்று அங்கிருந்த பழைய கால இரும்புப் பெட்டியைத்திறந்து மூடும் விதம் சொல்லிக் கொடுத்து, அதன் சாவியையும் பணத்தையும் அவள் கையில் கொடுத்தான்.

அன்று தக்காளி லாரிக்காரன் மொத்தமாக ஐம்பது ஆயிரத்தைக் கொடுத்துவிட்டுப் போனதுமே மதுரவாணி உஷாரானாள். எப்படிப் பேச்செடுப்பது என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த போது வீரபாண்டியனே தொடங்கினான்.

அன்றிரவு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன் போலஇருந்தவன்," நீ படிப்பதற்கு எவ்வளவு செலவாகி யிருக்கும்?" என்று விசாரித்தான்.

"ஏன் கேட்கிறீர்கள்?" என்று திருப்பிக் கேட்டாள் மதுரவாணி

"இல்லை_ உன் வீட்டில் நீ மட்டும் பெரிய படிப்பு படித்திருக்கிறாய் அதற்கான செலவை அது உன் அக்கா செலவு செய்ததாக ஏன் இருக்கவேண்டும்? அதைத்திருப்பிக் கொடுத்துவிடலாமே என்று நினைத்தேன். ஆனால் ஆற்றில் போடுவதானாலும் அளந்து போடவேண்டும் என்பார்களே அதனால் தான் விவரம்கேட்டேன்." என்றான் அவன்.

அவன் முகத்தில் லேசான அவமானக் கறையக் காணவும், ஓகோ, அப்படி வருகிறீர்களா,சார்? என்று எண்ணிக் கொண்டாள் மதுரா. பெண்டாட்டி மோகத்தில் பணப் பொறுப்பை அவளிடம் ஒப்படைத்தாயிற்று. இனி இந்தப் பணத்திலிருந்து உனக்குப் பேசிய விலை, என்று பெருந்தொகையைக் கேட்பது எப்படி சாத்தியம்? வேறு கதைதான் சொல்லியாக வேண்டும்!உள்ளே இருந்த ஏளனத்தை வெளியே காட்டாமல் "எனக்காகப் பணம் செலவானதே இல்லையே" என்று கொஞ்சும் குரலில்



மிழற்றி, நாட்டிய பாணியில் நெளிந்து நின்று கையை விரித்தாள் அவள்.

"அதெப்படி? பட்டப்படிப்பு, ஹாஸ்டல் வாசம்வேறு?" என்று குழப்பமுற்றான் அவன்

முத்துப் பற்களை மோகனமாகக் காட்டி, "உபகாரச்சம்பளம், உபகாரச்சம்பளம் என்று ஒன்று உண்டாம். அதை நன்றாகப் படிக்கும் பிள்ளைகளுக்கு –அது பெண்ணென்றாலும் கூடக் கொடுப்பார்களாம். ரொம்ப நன்றாகப் படித்ததால் ஒரு தனிப்பட்ட உபகாரப் பணமும் கிடைத்து, ஹாஸ்டல் செலவும் அதிலேயே அடக்கம்!" என்று கிளுக்கிச் சிரித்தாள் மனைவி.

"பின்னே?" என்றான் அவன் திகைப்புடன்.

"என்னது பின்னே?" என்று அப்பாவியாய் விழிகளை அகல விரித்தாள் அவள்.

அவன் பேசாமல் இருக்கவும், "அப்படிப் பைசா செலவு இல்லாமல் படித்த போதும், பாவம். அக்கா சம்சாரி. நமக்குத்தான். அதிகப்படித் தகுதியாக படிப்பு இருக்கிறதே என்று அப்பா வைத்து விட்டுப்போன ஒரே சொத்தான வீட்டைக்கூட அக்காவுக்கே விட்டுக் கொடுத்து விட்டேன்" என்றாள் வெகுளிபோல.

சட்டென வீரபாண்டியனின் முகத்தில் கடுமை ஏறியது "தக்காளி வியாபாரி தந்த ஐம்பது ஆயிரத்தில் உனக்கு என்னவேண்டும் சொல்லு வாங்கலாம்" என்றான் மனைவியிடம்.

"ஐ! ஐம்பது ஆயிரம் ஆகா!" என்று துள்ளினாள் மதுரா. "அப்படியானால் எனக்கு ஒரு . . ஊகூம் வேண்டாம்" என்று குழப்பமுற்றவள் போல நிறுத்தி னாள் அவள்.

"பரவாயில்லை,சொல்லு நீ ஆசைப்பட்டது எனக்கு தெரிந்தாக வேண்டும். ம் ம். . சொல்லு கண்ணம்மா" என்று கெஞ்சி கூத்தாடி அவன் வேண்டியபின் சொல்ல மனமற்றவள் போல ஒருவாறு சொன்னாள் அவள்.



"வந்து... என் அம்மா வைரத்தோடு போட்டிருந்தார் களாம். அக்கா திருமணத்தில் அதையும் கொடுக்கும்படி ஆயிற்றாம்•இந்தத் தோடாவது உனக்கு. மிஞ்சுமென்று எண்ணினேனே என்று அழுவார்கள். . . அதுபோல எனக்கும் ஒரு தோடு."

"எவ்வளவு ஆகும் சொல்லு?"

"அம்மாவினது போல என்றால் இன்றைய விலைக்குக் குறைந்தது நாற்பத்து ஐந்து ஆகுமாம்.

"அவ்வளவு ஆகுமா?!"

"அதுதான் சொல்ல வேண்டாம் என்று பார்த்தேன் சொல்லு சொல்லு என்று நீங்கள் தான் கட்டாயப் படுத்தினீர்கள்" என்று குற்றம் சாட்டிவிட்டு, "ச்சு அவரவர்க்குக் கொடுத்து வைத்தது தானே கிடைக்கும். அக்கா எப்போதும் அதிருஷ்டக்காரி. அவளுடைய அம்மாவுடையது, என் அம்மாவுடையது என்று எல்லாம் அவளுக்கே கிடைத்தது. . . சரி. . விடுங்கள். நமக்குக் கட்டுபடியாகாது என்கிறபோது அதற்கு நான் ஆசைப்பட்டதே தப்பு" என்று ஆணின் பலவீனத்தைப் குத்தினாள். ஒரு பெருமூச்சுவிட்டு, "போகிறது. அம்மாவின் ஆத்மா என்ன, இதையே வா நினைத்து ஏங்கப் போகிறது? அம்மா வருத்தப்படும் போதெல்லாம், நானும் ஒரு நாள் வைரத் தோடு போடுவேன், பாருங்கள் என்று சொல்லித் தேற்றுவேன். . ச்சு பரவாயில்லை விடுங்கள்" என்று வாடிய முகத்தை நாடக மேடை மறைப்பாக அவனுக்குக் காட்டாமல் மறைக்க முயலுபவள் போலக் காட்டி எழுந்தாள் அவள்.

அவளது சோர்ந்த முகமும் ஓய்ந்த நடையும் தாளாமல் மறுநாளே திருச்சிக்கு மனைவியை அழைத்துச் சென்று கோபால் தாஸ் கடையில் ஒன்றரை காரட்டில் ஒரு ஜோடி தோட்டை வாங்கிக் கொடுத்தான் வீரபாண்டியன்.



அதற்கு மறுநாள் மாலையில் தங்கையைப் பார்த்துப் போவது என்கிற போர்வையில் வந்துசேர்ந்த தமக்கையிடம் தலையை இருபுறமும் திருப்பிப் பெருமையுடன் காட்டினாள் மதுரவாணி.

"தக்காளி லாரிக்காரன் பணம் மொத்தமாக வந்ததா, அதில் வாங்கினோம். மொத்தமும் இதற்கே சரியாகிவிட்டது." என்று கூறித் தமக்கையின் முகம் வாடுவதைக் கண்டு ரசித்தாள்.

மூட்டை கட்டிப் போகலாம் என்று வந்தவள் ஆயிற்றே! முகம் வாடாமல் என்ன செய்யும்? வாடட்டும் நன்றாக வாடட்டும்.

ஓரக் கண்ணால் பார்த்து ரசித்தவளுக்கு வேறு ஞாபகம் வந்தது. கோகிலா வீட்டில் வைரத் தோடு கேட்கிறார்கள். . . என்று கணவர் சொன்னதும் காதுத் தோட்டைக் கழற்றிக் கொடுத்து விட்டு பெற்ற மகளை அணைத்து இந்தத் தோடாவது உனக்கு மிஞ்சும் என்று எண்ணினேனே என்று தாயார் கண்கலங்கியதும், அக்காவுக்குத் தானே கொடுத்திருப்பது, இதற்கு அம்மா அழுவானேன் என்று அந்த வயதில் புரியாமல் நினைத்ததும், இப்போது சில தினங்கள் வெகு சிலதினங்கள் முன்பு வரை அதைப்பற்றிய நினைப்பு கள் இல்லாமல் இருந்ததும் கூட நினைவு வந்தன. மதுக்குட்டி என்கிற அழைப்பிலேயே உருகிப்போகிற தங்கைக்கு என்ன துரோகம் செய்து விட்டாள்! படட்டும்!

வீரபாண்டியனோடு தனித்துப் பேசத் தமக்கை முயற்சி செய்வாள், இங்கே பேச முடியாவிட்டால் வயல் வரப்பிலேனும் சந்தித்துப் பேசுவாள் என்பதை ஊகித்து, இங்கே பேசுவதே மேல் என்று அதற்கு வாய்ப்புக் கொடுத்தாள் மதுரவாணி.

"இன்னமும் காபியை காணோம்? நான் போய்ப் பார்க்கிறேன்" என்று எழுந்து ஒரு கட்டு தாண்டிச் சென்றவள் மறு வாயில் வழியே மீண்டும் வந்து கதவுப் பக்கம் மறைந்து நின்று உள்ளே நடந்த பேச்சைக்

கவனித்தாள். ஒட்டுக் கேட்பதுதான். ஆனால் அந்த நிலையில் அது தப்பல்ல விவரம் அறியும் வழி என்றே நினைத்தாள்.

". . . தருகிறேன் என்று நிச்சயமாய்ச் சொன்னீர்களே" என்று கோகிலாவின் குரல் குற்றம் சாட்டியது.

"அவள் படிப்புக்கு நீங்கள் செலவு செய்ததாகத்தான் நீங்களும் சொன்னீர்கள். ஆனால் அவள் உபகாரச் சம்பளத்தில் அல்லவா.."

"அற்காகத் தராமல் இருந்து விடுவீர்களா? வாக்குக் கொடுத்தீர்களே? அதை நம்பி நாங்கள் ஏதேதோ செலவை ஏற்று விட்டோமே. இப்போது என்ன செய்வது? என்றாள்" கோகிலாவாணி அழுகுரலில்.

சில வினாடி மவுனத்தின் பின், "அடுத்து தேங்காய்ப் பணம் வரும். அடுத்தமாதம் வாருங்கள் எப்படியாவது. . ." என்று வீரபாண்டியனின் குரல் கூறவும், அதற்கு மேல் பேச விடக் கூடாது என்று தீர்மானித்தவளாக, அழுத்தமாக காலடி எடுத்து வைத்தபடி, "இன்னும் காபி வர. அட இதோ வந்து விட்டாளே தாயம்மா, என் அக்காவுக்கு நானே கொண்டு போகிறேன் கொடு" என்று வாங்கிச் சென்று தமக்கையிடம் கொடுத்தாள்.

சற்றுப் பொறுத்து, "அடுத்தமாதம் உன்னைப் பார்க்க வருகிறேன்" என்று தங்கையிடம் கூறி, வீரபாண்டியனை ஒரு தரம் பார்த்து விட்டு கிளம்பிச் சென்றாள் கோகிலவாணி.

கணவன் சொன்ன 'எப்படியாவது' மதுரவாணியின் மனதை உறுத்தியது. அதற்கு கடன் வாங்கியாவது என்கிற அர்த்தமோ என்று எண்ணியவள் கம்பராமாயணத்துக் கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தனின் பேச்செடுத்து பேசி, எக்காரணம் கொண்டும் கைமாற்றாகக் கூட கடன் வாங்குவது இல்லை என்று கணவனைச் சத்தியம் செய்ய வைத்தாள்.



கோகில வாணிக்குப் பணம் கொடுக்கக் கூடாது என்று நேரடியாகக் கணவனிடம் சொல்ல அவளுக்கு மனமில்லை. சொன்னால் அதற்குக் காரணம் சொல்லியாக வேண்டும். உண்மை வெளிப்படும்போது தெளிவான நீர்த்தடாகமாகச் செல்லத் தொடங்கி இருக்கும் வாழ்வு தடைப்பட்டு விடும் என்று நிச்சயமாய் நினைத்தாள். அதனால் அவனோடு ஒட்டி உறவாடியே தமக்கையைப் பழிவாங்க முடிவு செய்தாள்.

கணவனோடு ஒட்டுவது குதூகலமாகவும் இருக்கவே, ஒரு கல்லில் இரு மாங்காய் என்று அதையே தொடர்ந்தவளுக்கு ஓரிரு உண்மைகளும் புலனாயின.

சலசலவென்று நீரோடிய வயலோர வாய்க்காலும், கிலுகிலுத்த இளம் தென்றலும், காற்றுக் கேறப ஒய்யாரமாய் அசைந்தாடிய பச்சைப்பயிறும் மதுரவாணியை மிகவும் கவர்ந்திருந்தபடியால் கணவனோடு அடிக்கடி வயல்புறம் செல்ல வந்தாள் அவள். மனைவியிடம் அளவுகடந்த ஆசைவைத்திருந்த வீரபாண்டியனும் அவளை விரும்பியே அழைத்துச் சென்றான்.

அப்படி செல்லும் போது, வீரபாண்டியன் மற்றவர்களோடு வயலில் இறங்கி விட்ட பிறகு, கொண்டு செல்லும் புத்தகம் போரடித்துப் போனால் அவள் காலாற நடப்பது உண்டு.

அப்படிச் செல்லுகையில் ஒரு தரம் புது தினுசான ஜாதாப் பூக்களைப் பார்த்து ரசித்தபடியே சற்றுப் புதர் அடர்ந்திருந்த பகுதியில் நடந்து சென்றாள்.

திடுமென அசையாமல் "அப்படியே நில் வாணி," என்று அன்றுவரை அவள் அறிந்திராத அழுத்தத்துடன் வீரபாண்டியனின் குரல் கேட்கவும் திகைத்து நின்றாள் அவள்.

ஏனென்று புரியாமல் சுழன்ற பார்வையில் சுமார் நாலே எட்டு தூரத்தில் படத்தை விரித்து நின்ற நல்ல பாம்பு படவும் அவள் வெலவெலத்துப் போனாள்.



## 8

பதட்டமற்ற ஒரு நிதானமான. அசைவுடன் அவளை நெருங்கிய வீரபாண்டியன்," பயப்படாதே" என்று முணுமுணுத்துவிட்டு இடதுகையில் இருந்த ஒரு துணியை வேகமாக அசைத்தபடி அவளுக்கும் பாம்புக்கும் இடையே வந்து அவளை மறைத்து நின்றான்.

வேகமாக ஆடிய துணியிடம் பாம்பு கவனத்தைத் திருப்பிய வினாடியில், வலதுகையிலிருந்த கல்லை ஓங்கி வீசினான்.

தலையிலோ கழுத்திலோ அடிவாங்கிய பாம்பு மின்னலெனப் பாய்ந்து மறைந்தது.

மயங்கி விழாத குறையாக நின்ற மனைவியைச் சட்டெனத் தாங்கித் தூக்கி வந்தான். கணவன் சூழநின்ற வேலையாட்களைப் பற்றிய எண்ணமே இல்லாமல் ஒண்டியவளை அணைத்து ஆறுதல் படுத்தினான்.

மதுரவாணியின் பயம் தெளிய அதிக நேரம் ஆகவில்லை. அன்றுவரை தெளிவாக அறிந்திராத பேருண்மை ஒன்றை ஐயம் திரிபற அறிந்து கொண்ட உடனேயே அவளுக்குப் பாம்பைப் பற்றிய நினைவு கூட மறந்துவிட்டது.

பாம்பு இருப்பதை அறிந்து எச்சரித்ததோடு நின்று விடவில்லை அவளுடைய கணவன். பாம்பு அவளைத் தீண்டிவிடக்கூடாது, மாறாகத் தன்னைத் தீண்டினாலும் பரவாயில்லை என்று உயிரைத் திரணமாக மதித்து, பாம்புக்கும் அவளுக்கும் இடையே வந்தானே! வெறும் மோகத்தின் அடிப்படையில் அவளிடம் மயங்கியிருப்பவனால் அது முடியுமா? இத்தகைய காதலை இவ்வளவு நாளாக அவள் உணர்ந்து கொள்ளவே இல்லையே! கடவுளே! என்னமாதிரி அன்பு! இந்த அளவு மீறிய அன்பினால்தான் அவளை இழக்க மனம் இன்றி விலை கொடுக்கக்கூட முன் வந்தானோ, என்னவோ?



இத்தகைய அன்புக்குப் பிரதியாக அவள் என்ன செய்திருக்கிறாள் என்று எண்ணிப் பார்க்கையில் மிகவும் கழிவிரக்கம் கொண்டாள் அவள்.

இந்தமாதிரி அவனுக்காக உயிரைக் கொடுக்கும் துணிவு அவளுக்கு வருமா? சந்தேகம் தான்.

உயிரைக் கொடுப்பது இருக்கட்டும்; அவனை எத்தனைமுறை, எத்தனை விதமாக ஏளனமாய் நினைத்திருக்கிறாள்!

கறுப்பண்ணசாமி; பட்டிக்காட்டுப் பண்ணையார் என்றெல்லாம் பெயர் வைத்தாளே; வெள்ளைத்தோலிலும் படிப்பிலும் கிறங்கி விட்டான் என்றாளே.

அவனது இந்த உயிருக்கும் மேலான அன்பை வெறும் மிருகத்தனம், மோகம் என்று கொச்சையாக நினைத்து வெறுத்தாளே.

கணவனோடு இணங்கி அவள் வாழத் தொடங்கியதே, ஒரு மோசமான சூழ்நிலையில், 'மேக்கிங் தி பெஸ்ட் ஆஃப் இட்' என்கிற மாதிரிதானே. பிறகும் அவனது அறிவையும் திறமையையும் பார்த்து, ஏதோ பரவாயில்லை என்கிற மாதிரியான ஒரு சந்தோஷம். அவ்வளவுதானே.

விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பத் தொடங்கி விடுகிற கெட்டிக்காரத் தனம் மட்டிலுமேதானே.

வீரபாண்டியனின் உண்மைக் காதலை வியாபார வாய்ப்பாகக் கண்டு அவனை விலைபேசியது கோகிலவாணியின் குற்றம்.

அதுபுரியாமல் கணவனிடம் உள்ளூரப் பெரு மதிப்பின்றிப் பழகி வந்ததை எண்ணி மதுரவாணியின் மனம் மறுகியது. எல்லாவற்றுக்கும் ஈடுகட்டுவது போல வெளிப்படையாகவே அவனிடம் மிகுந்த அன்பு காட்டத் தொடங்கினாள் அவள்.

விளைவாக, ஏற்கனவே அவளிடம் உயிராயிருந்தவன் மேலும் கிறங்கிப் போனான்.

ஆயினும் இத்தகைய கணவனிடம் ஒப்படைத்ததற்காகக் கூட மதுரவாணி தன்னுடைய சகோதரியை மன்னிக்கத் தயாரில்லை.

ஆனால் கணவனின் அன்பின் தீவிரத்தை உணர்ந்தபிறகு அவனுக்குச் சமமான அன்பு செலுத்தாதபோது அவன் வருந்தி உழைத்து ஈட்டிய பொருளைத் தனக்காகச் செலவு செய்ய மனம் வராமல், தென்னந்தோப்புப் பணம் வந்ததும் அதைத் தேசீய சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்ய ஏற்பாடு செய்தாள்.

கோகிலவாணி வந்ததும், அதைப் பெருமையுடன் அறிவித்தாள்." நாட்டுக்கும் நல்லது; நமக்கும் நல்லது என்றுநான்தான் முதலீடு செய்யச் சொன்னேன். கையில் இருந்தால் இவர் கண்டவர்களுக்கும் கொடுத்து வீணாக்கி விடுவார்."என்று அந்தக் கண்டவர்களில் ஓர் அழுத்தம் கொடுத்துக் கூறவும், கோகிலவாணியின் தலை விருக்கென நிமிர்ந்தது.

சில கணங்கள் தங்கையைக் கூர்மையுடன் நோக்கியவள் விஷயத்தை வேறுமாதிரி புரிந்து கொண்டாள். வீரபாண்டியன் பணம் தருவதைத் தடுப்பவள் தங்கைதான். தன் சொத்து குறைந்து விடும் என்று தடுக்கிறாள் என்று எண்ணினாள்:

மதுரவாணியின் தலை மௌனமாய்ச் சிலும்பவே, ஆத்திரமுற்று, "மதுரம் உனக்கு இது நல்லதல்ல." என்று எச்சரித்தாள்.

அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள் மதுரவாணி. பெரிய பெரிய உத்தமிகளின் சொல்லே பலிப்பது இல்லையாம். இந்தம்மாள் மிரட்டுகிறாளே!

சற்றுமுன்னர்தான் திரும்பிவந்து உடம்பு கழுவச் சென்றிருந்த வீரபாண்டியன் சலவை ஆடை அணிந்து திரும்பி வந்தான்.

மனைவியின் அருகில் அமர்ந்து, "பாருங்கள், இப்போது முதலீடு செய்தால் அரைசதவீதம் அதிகவட்டி



தருவதாக வாணி பத்திரிகையில் படித்துச் சொன்னாள். அதைவிடுவானேன் என்று தேங்காய் பணத்தை அதில் முதலீடு செய்யப் போகிறோம் உங்களுக்குப் பிறகு பார்க்கலாம்." என்றான் பிசிரற்று.

மனைவியின் போதனை என்பது நன்றாகவே தெரிந்தது. ஆனால் இப்போது பணம் இல்லை என்பதை விடத் தங்கையின் பார்வையும் உதட்டோர ஏளனப் பிதுக்கலும் கொதிப்பூட்ட, "கொஞ்ச நாளைக்கு முன் ராஜாராமன் உன்னைத்தேடி வந்தார், மதுரம்" என்றாள் கோகிலவாணி. "எந்த ராஜாராமன்?" என்று சாவதானமாக விசாரித்தாள் தங்கை.

"உனக்கு எத்தனை ராஜாராமன்களைத் தெரியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இவர் உன் திருமணச் சேதி கேட்டதும் ரொம்பவும் அதிர்ந்து போனார்.... யாரோ ராஜாராமன் திருமணத்துக்குக் கேட்டதாக நீ கூட எழுதியிருந்த ஞாபகம்... எனக்கு வருகிறதே.....என்றாள் கோகிலா

"பேசுவது அக்கா என்பதால் நான் பிழைத்தேன் வேற்று ஆட்களாக இருந்து உங்களைப் போல் பேசியிருந்தால் இவர் என்னைத் தப்பாகவே எண்ணியிருப்பார் இல்லையா அத்தான்?" என்று கொஞ்சலாக வினவினாள் மதுரவாணி. அவனை அத்தான் என்று மதுரவாணி அழைத்தால் வீரபாண்டியனுக்கு உச்சி குளிரும். மனைவியின் கையைப் பற்றி அழுத்தி, "சேச்சே உன்னைத் தப்பாக நினைப்பதா? உன் அழகிற்கு உன்னைமணக்க விரும்பாதவர் இருப்பதுதான் அதிசயம்." என்றான் பெருமையாக.

"ஆனல்" என்று கோகிலவாணி தொடங்க, "அந்தக்கடிதத்தில், அந்தத் திருமணத்துக்கு, ஆதரவு தெரிவித்து நான் எழுதியிருந்தது உண்மையே." என்று ஒத்துக் கொண்டு தமக்கையையே திகைக்க வைத்தாள் மதுரவாணி. தொடர்ந்து," எப்படி அக்காவுக்கு ஒரு பைசா செலவு வைக்காமல் படித்தேனோ, அதேபோல



என்திருமணமும் அக்கா கையைக் கடிக்காமல் இருக்க வேண்டும் என்று நினைத்து அப்படி எழுதினேன். ஆனால் இங்கே நீங்களும் அதேபோலவே செய்து விட்டீர்களே" என்று கண்ணில் பாராட்டுதலுடன் அவள் கணவனைப் பார்க்க கோகிலவாணி அடியோடு தொய்ந்தாள்.

கிளம்புகிறபோது, "உங்கள் வாழைத் தோட்டத்தில் தார் போட்டிருப்பதை வரும் வழியில் பார்த்தேன். தார் இறக்கும் போதாவது கொஞ்சம் அப்போது மொத்தமாக வருமல்லவா? அதில் கொஞ்சமாவது... "என்றபோது கோகிலாவிற்குக் குரலே எழும்பவில்லை. தங்கை முன்னிலையில் பிச்சை யெடுப்பது போல உணர்ந்த போதும் அவளுக்கு வேறு வழியும் இல்லாதுபோயிற்று, "ரொம்பவும்... தேவைப்படுகிறது..."

"சரிசரி. கவலைப்படாதீர்கள்," என்று அவளை அனுப்பிவிட்டு "எப்படியும் ஒருலட்சம் வரும், வாணி. பாதி கொடுக்கலாம்," என்றான்

ஒரு லட்சமா?

மதுரவாணி யோசனையில் ஆழ்ந்தாள். ஒரு லட்சம் ரூபாயைக் கோகிலவாணிக்குக் கொஞ்சமும் கொடுக்க விடாமல், வீரபாண்டியனுக்குப் பயன்படும் விதமாக எப்படிச் செலவு செய்வது? இவ்வளவு பணத்தை வைத்து அவனுக்கு என்னவாங்குவது?. அவளது அடிமனம் இதே ஆராய்ச்சியில் இருந்ததாலோ என்னவோ, கிளம்புகையில் இன்று கூலிக்கணக்கு முடித்துவிட்டு வருவேன் என்றதையோ, மதியவாக்கில் கணக்குச் சிட்டைகளோடு கணக்குப் பிள்ளை ஒற்றைமாட்டு வண்டியில் சென்றதையோ கவனத்தில் கொள்ளவில்லை அவள்.

வழக்கமாக வீரபாண்டியன் திரும்பிவரும் ஆறு ஆறரை தாண்டி மணி ஏழு எட்டு என்று செல்லவும் அவள் தவியாய்த் தவித்துப் போனாள்.



எந்தச் சத்தம் கேட்டாலும் கணவனின் 'பைக்"தானா என்று ஓடி ஓடிச் சென்று பார்த்து ஏமாந்தாள். எவ்வளவு தான் அதிகவேலை செய்தாலும் இருட்டியபின் வயலில் என்ன செய்யமுடியும்?

ஒரே ஒரு காற்றுமழை இரவில் வாழை மரங்களுக்குக் கயிறு கட்டவென்று வீரபாண்டியன் ஆட்களோடு சென்றதுண்டு ஆனால் இன்று காற்றோ மழையோ இல்லையே பின்னே?

தாங்கமாட்டாமல் வெளிவாயில் படல் வரை சென்று பார்த்தபோது தான் வழக்கமாக வீட்டோடு நின்று மாடுகளைப் பராமரித்து மற்ற எடுபிடி வேலை செய்யும் இருவரையும் கூடக் காணவில்லை என்பது தெரிந்தது.

என்ன ஆகியிருக்கும்? யாருக்காவது. என்னவாவது... இல்லை யாருக்காவது என்றால், அவர்களுக்கு உதவ என்று வீரபாண்டியன் தங்கிவிட்டிருந்தாலும், மற்றவர்களில் ஓரிருவராவது திரும்பி வந்திருப்பார்கள். அவர்களிடம் அவள் கவலைப்படுவாளே என்று சேதி சொல்லி அனுப்பியிருப்பான் அவள் கணவன். அவன் பொறுப்புள்ளவன். அப்படியானால் அவளுடைய அருமைக் கணவனுக்குத்தான் ஏதோநேர்ந்திருக்க வேண்டும். மற்றவர்கள் எல்லாம் மேய்ப்பவன் இல்லாத ஆட்டு மந்தைபோல அங்கேயே செய்வது அறியாமல் குய்யோ முறையோ என்று அவனைச் சுற்றிக்கொண்டு இருக்கிறார்களா? கணவன் இருக்கும் இடம் தேடி ஓடத்துடித்த கால்களோடு மனதையும் வெகு முயற்சி செய்து கட்டுப்படுத்தினாள் மதுரவாணி. இல்லையில்லை எதுவுமிராது. அப்படி என்ன நேரமுடியும்? தன்னையே தைரியப்படுத்திக் கொள்ள முயன்றவளுக்கு இப்போது எத்தனையோ நேரமுடியும் என்று தோன்றியது.

அவன் சிநேகிதன் ஒருவன் வரப்பில் "பைக்" விடுவான் என்பானே, அதுபோலத் தானும் ஓட்ட

முயன்று விழுந்து கழுத்து முறிந்து அய்யோ, அம்மா.. எங்காவது அடிபட்டிருக்கலாம்

அப்புறம் அந்தப்பாம்பு.... கடவுளே, அடிபட்ட நல்ல பாம்பு பொல்லாதது, கடியாமல் விடாது என்பார்களே கரவு வைத்து அவனைக் கொத்திவிட்டதோ?

எண்ணாதது எல்லாம் எண்ணி மனதைப் புண்ணாக்கியபடி திரும்பி வந்தபோது, நாய்களைப் பர்த்துக் கொள்ளும் கிழவன் அவளைப் பரிதாபத்துடன் பார்ப்பது போலத் தோன்றியது.

அவன் ஏதேனும் சொல்லக் கூடுமோ என்று ஒருகணம் தயங்கி நின்றவள் அவன் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்து கொள்ளவும் விடுவிடென்று உள்ளே வந்து சேர்ந்தாள். அவளுக்குத் தெரிந்து போயிற்று. அவளுடைய அருமைக் கணவனுக்கு என்னவோ ஆகிவிட்டது. அவனை அவள் இனி உயிரோடு பார்க்கவே போவதில்லை என்பது போல மனதில் தோன்றவும் உலகம் இருட்டிக் கொண்டுவர அப்படியே மயங்கிவிழுந்தாள். தானாகவே எழுந்தவள், மிகவும் சிரமப்பட்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டு, வீட்டோடு வேலைக்காரியான தாயம்மாவை அழைத் தாள். "இன்றைக்கு அய்யாவுக்கு எந்த வயலுக்குச் சாப்பாடு அனுப்பியிருக்கிறது, தெரியுமா?" என்று விசாரித்தாள்.

வழிகாட்ட இவளை அழைத்துக் கொண்டு அங்கேயே சென்று பார்த்துவிட வேண்டும் என்பது மதுரவாணிக்கு.

ஆனால், "எனக்குத் தெரியலம்மா..." என்று கையை விரித்தாள் தாயம்மா. "கீ ளக்கரயா, பேவிளையா, சோனங்குடி தென்னங்தோப்பா... ஒண்ணும் புரியிலை யேம்மா. இந்தக் கலவாணிப்பய வேலு கூடச் சாப்பாட்டக் குடுத்துட்டு திரும்பி வராம அங்கனயே நின்று போயிட்டான்.." என்று அங்கலாய்த்தாள்.

வேலுவும் ஏன் வரவில்லை?



பெரிய மூச்சுகளை எடுத்து, சற்று சமனப் படுத்திக் கொண்டு" தாயம்மா,இந்த நல்லபாம்பைக் காயப்படுத்தி னால் அது.. "என்று தொடங்கிய எசமானியை இடை மறித்து, "யம்மா, யம்மா, ராவுல அதுபேர் சொல்ல புடாதம்மா. வந்துவிடுமாம். ஆனா ஒண்ணு. நீங்க இப்ப சொன்னியளோ, அதெ அடிச்சா முளுசா சாவடிச் சிரணும். இல்லாட்டி வருமம் வச்சி காவு எடுத்திடுமாம். மெய்யாலும் சத்தியம்மா. நானு என் கண்ணாலப் பாத்தது. மூணாம் வருசம்..."என்று நீட்டி முழக்கிக் கொண்டு தொடங்கியவள், எசமானியம்மாள் எங்கோ கவனமாய் எழுந்து அறைக்குள் செல்லவும் வாயை மூடிக் கொண்டு தன்னிடத்துக்குச் சென்று முடங்கி னாள். இப்போது மதுரவாணிக்குச் சர்வ நிச்சயமாய்த் தெரிந்து போயிற்று.

அதே பாம்புதான் காத்திருந்து, சமயம் பார்த்து, அவளுடைய ஆருயிர்க் கணவனைப் பலி கொண்டு விட்டது. அய்யோ, அவனைப்பிரிந்து அவளால் எப்படி உயிர் வாழ முடியும்?

கடவுளே! எத்தனை தடவை அவனோடு வயலுக்குப் போயிருக்கிறாள் இன்றும் போயிருந்தால் அந்தப் பாம்பின் வஞ்சத்துக்குத் தன்னுயிரைப் பலி கொடுத் தாவது அவனைக் காப்பாற்றியிருப்பாளே!

மின்னல் வெட்டினாற் போலப் பளீரென்ற ஒரு பேரொளி, அவளது உள்ளமெல்லாம் பாய்ந்து, ஆங்கே மறைந்திருந்த ரகசியத்தைத் தூலாம்பாரமாகக் காட்டி யது.

அன்று வீரபாண்டியன் செய்தது போலவே, அவனுக்காக அவனைக் காக்க உயிர் கொடுக்க இன்று மதுரவாணி தயார் என்றால் என்ன அர்த்தம்?

அவனுக்குச் சற்றும் குறையாத அதே தீவிரத்துடன் அவளும் அவனை நேசிக்கிறாள் என்பது தானே அதன் பொருள்?



அவனது அன்பு அவளை அவ்வளவுதூரம் மாற்றிவிட்டதா என்று எண்ணுகையிலேயே உள்ளுர வேறு தோன்றியது.

முதல் முறை பார்த்தபோதே வீரபாண்டியனின் சிரிப்பு அவளைக் கவரத்தானே செய்தது!"

'பசியார என்ற ஒருவார்த்தையைத் தேடிப் பிடித்து மனது மெச்சிக் கொண்டதே? அப்புறம் அந்த முதல் இரவு'

அன்று கூட அவள் தோல்விக்கும், அதன் விளை வான பின்னைய வேறு பாட்டிற்கும் அஞ்சிப் பணிவ தாக நினைத்ததே தவறுதான். அவனோடான உறவை அடியோடு வெறுத்திருந்தால் பலப்போராட்டம் மட்டும் தானா தப்பும் வழி? மயக்கமுற்றது போல நடித்திருந்தால் போதாதா? இவனோடு வாழலாம் என்று உன் மனது முடிவு செய்து விட்டதின் விளைவுதான் அன்றைய மறுப்பின்மை என்றே அவளுக்கு இன்று தோன்றியது. அவனிடம் நல்லவைகளையே தேடிக் கண்டுபிடித்து மனதுள் பாராட்டியதன் காரணம் இவ்வளவு காலம் தாழ்த்து இப்போதல்லவா புரிகிறது!

என்ன பைத்தியக்காரத்தனம்" காதலுக்கு உரிய வனை இழந்த பிறகுதான் அவன் மீது கொண்ட காதலையே அறிந்து கொள்வது என்றால் இது எவ்வளவு பெரிய கொடுமை! இல்லை, அவனுக்கு ஒன்றும் நேர்ந்திராது என்று எவ்வளவோ மனதைச் சமாதானம் செய்துகொள்ள முயன்றாலும், மற்றபடி மணி ஒன்பதாகியும் அவனோ மற்றவர்களோ வீடு திரும்பாதிருக்க வழியில்லை என்பதால் அவள் வெகுவாகத் திடம் குலைந்து போனாள்.

காட்டாற்று வெள்ளம் போலக் கட்டுக்கு அடங்காமல் அழுகை பொங்கியபோது வெளியே ஓசை - புல்லட்டின் ஒலி இல்லாமல் வண்டி மாட்டுச் சத்தம் மட்டும் கேட்டது.

அவன்தான் வருகிறானா அல்லது அவனைக் .. கொ...கொண்டு வருகிறார்களா?



அச்சமிகுதியில் அப்படியே உறைந்து போயிருந்த அவளால், வெளிப்படல் திறந்து வண்டி உள்ளே வரும்சத்தம் கேட்டபிறகும் எழுந்து சென்று பார்க்க முடியவில்லை.

மூச்சு கூட விடமுடியாமல் அவள் இறுகிப்போய் அமர்ந்திருந்த போது அமுத மழையே போல அவள் காதுகளில் வீரபாண்டியனின் குரல் தேனாய் விழுந்தது.

வண்டியின் கால்மிதியில் ஒரு கால்வைத்து வீர பாண்டியன் இறங்கியபோது "தம்பி அய்யா," என்று அழைத்தான் மாயாண்டிக் கிழவன்.

'தம்பி' என்கிற அடைமொழி சேர்த்து அழைப்ப வன் மாயாண்டி மட்டும் தான். தந்தைகாலத்து ஆள். உழைக்கும் வலு இல்லாமல் வீட்டோடு கிடந்து நாய்களைக் கவனிப்பவன். "என்ன மாயாண்டி?" என்று கேட்டவனிடம், "இன்னிக்கி நேரமாவுன்னு வீட்டவ்க கிட்ட சொல்லலியாய்யா? இங்கிட்டிக்கும் அங்கிட்டு க்கும் நூறு வாட்டி நடந்தவ" என்றான்.

"ஓ" என்ற வீரபாண்டியனின் குரலில் துள்ளல் இருந்தது . "நீ சொல்லியிருக்கலாம் மாயாண்டி," என்று கேட்ட குரலிலும் கனிவுதான் இருந்தது.

"எங்கய்யா, இந்த பல்லில்லாத பட்டிக்காட்டுக் கிளட்டுப் பய பேசரது அம்மாளுக்குப் புரியாதே."என்று காரணம் கூறிய மாயாண்டி, "போய்யா மொதல்ல பின்ளையை சமாதானப் படுத்துய்யா. குளிப்பு சளிப்பை பெறவு பாத்துக்கய்யா" என்று முதலாளிக்கு ஆலோ சனை வழங்கினான். சிரித்து விட்டு வேகமாக மனைவியை நாடிச் சென்றான் வீரபாண்டியன்.

அவளது அறைக்குள் அவன் சென்றதும் வெறி கொண்டவள் போல அவன்கழுத்தைக் கட்டிக் கொண்டு கரகரவென்று கண்ணீர் வடித்தாள் மதுர வாணி. "என்னம்மா... எ ஏய்.. விடும்மா. ஒரே வியர்வை நாற்றம். குளித்து விட்டு வருகிறேன்.... என்று விலகமுயன்றான் அவன்.

"ஒருமண்ணும் வேண்டாம்". என்று வெடித்தாள் மதுரவாணி. அவனை மேலும் இறுக அணைத்துக் கொண்டு, "வர இவ்வளவு நேரமா?" என்று விசும்பினாள்.

ஒட்டிக் கொண்டு நின்றவளின் முதுகை வருடி ஆசுவாசப்படுத்தியபடி, "இன்று கூலிக்கணக்கு முடிக்க வேண்டும் என்று சொல்லி விட்டுத் தானே கண்ணு போனேன்" என்றான் அவன்.

"அதற்கு இவ்வளவு நேரமா?" என்று மேலும் தேம்பினாள் மனைவி.

அவள் வெகுவாகக் கலங்கிப்போயிருப்பதை உணர்ந்த வீரபாண்டியன், அவளைக் கையால் ஏந்திச் சென்று அவளை அணைத்தாற் போலவே கட்டிலில் அமர்ந்து, "இது வருடாந்திரக் கணக்கு, வாணிம்மா. ஆண்டு முழுவதும் வேலையாட்களுக்குக் கொடுக்கிற சம்பளம், அவர்கள் வாங்கிய அதிகப் பற்று எல்லாவற்றையும் கணக்கிட்டு முடிக்க வேண்டும். இங்கெல்லாம் பொங்கல்தான் பெரிய பண்டிகை. தொழிற்சாலைகளில் தீபாவளி போனஸ் மாதிரி, நான் நம் ஆட்களுக்குப் பொங்கல் போனசாக ஒருதொகை கொடுப்பேன். பற்றுக் கணக்கு இருந்தால் அதைக் கழித்துக் கொண்டு கொடுக்கவேண்டும். அவரவருக்கு வரக்கூடிய தொகையை இன்று பார்த்துச் சொல்லி விடுவது. எல்லோரும் சுளுவாக வந்து திரும்பக் கூடிய இடமாக நடுவில் சவுக்கண்டியில் வைத்துப் பார்த்து முடித்துவிட்டு வரத்தான் இவ்வளவு நேரம்" என்று விவரம் கூறிவிளக்கினான்.

"நான் பயந்தே போனேன்," என்றவளின் பிடி இன்னமும் இறுக்கமாகவே இருக்கவும், முறுவலித்து, "என்னபயம்? நான் என்ன, விமானத்திலா பயணம் செய்கிறேன்? அல்லது சிங்கம், புலிவாழும் காடு சென்றேனா? என்னபயம்?" என்று அவள் கன்னத்தை வருடினான். தன் பயத்தையெல்லாம் அவள் சொல்லவும் வாய்விட்டு நகைத்தான். "பாரம்மா, முதலில் தெரிந்துகொள். பைக் ரிப்பேர். அதோடு



வரப்பில் 'பைக்'ஓட்டி நான் சர்க்கஸ் வேலை செய்வது இல்லை. அப்புறம் என்னது? பாம்பு. . . அடிபட்டபாம்பு பழிவாங்குவது என்பதெல்லாம் சும்மாகதை. அதற்கெல்லாம் அன்றன்றைய உணவு, செரிப்பு, தூக்கம், குறிப்பிட்ட காலத்தில் செக்ஸ் அவ்வளவுதான். இதற்குப் போய் இப்படி நடுங்குவார்களா?" என்று செல்லமாகக் கடிந்தான்.

"ம்? இந்தப்பூதநல்லூர் வீரபாண்டியனை மட்டும் கடிக்கவே கூடாது என்று இந்தப்பக்கத்துப் பாம்புகளுக்கு உத்திரவு போட்டிருக்கிற விஷயம் தெரியாமல் போனது என் தப்புதான். "பெரிய… தாய் அளக்கிறீர்களே, அன்று என்னைக் கொத்தவந்த பாம்பு உங்களை மட்டும் ஒன்றும் செய்யாமல் ஒதுங்கிப் போய்விடுமாக்கும்" என்று கோபமும் கேலியுமாகத் திருப்பினாள் அவள்.

அவனுக்கு மேலும் சிரிப்புதான் வந்தது. இந்தக் கோபமும் பயமும் அவன் மேல் உள்ள அன்பினால் வந்தது அல்லவா? "கண்ணு கண்ணு." என்று தலையசைத்து விட்டுச் சொன்னான் "மண்புழு மாதிரி இந்தப் பாம்புகள் கூட விவசாயிகளுக்கு நண்பன் தான், வாணிம்மா. பயிர்களை அழிக்கும் எலிகளை உண்டு ஒழிப்பவை. அத்தோடு மனிதர்களைக் கண்டாலும் இவைகளுக்குப் பயம் தான். புதர் அடர்ந்த இடங்களில் கூட, ஒருகுச்சியால் லேசாகத் தட்டிக் கொண்டே போனால் இவைதானாக விலகி ஓடிவிடும். எதிர்பாராமல் குறுக்கிட்டால் மட்டும்தான் ஆபத்து. அன்று கூடப் புதர்ப் பக்கம் போகிறாயே, உனக்கு விஷயம் தெரியாதே என்றுதான் ஓடிவந்தேன். வந்தது நல்லதாயிற்று" என்று வீரபாண்டியன் விளக்கவும் அவன் மனைவியின் முகத்தில் லேசாக அசடுவழிந்தது. ஒன்றுமே இல்லாததற்குப்போய்ப் பயந்து நடுங்கியது— அவளை உணர்ந்து கொண்டாற்போல அவளது மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு,"கலக்கம் எல்லாம் தீர்ந்ததா? இனிக்குளிக்கப் போகலாமில்லையா? பார்,





என்னோடு சேர்ந்து இப்போது உன்மேலும் வியர்வை நாற்றம்.." என்று எழ முயன்றவன், அவள் கைகளைத் தளர்த்தக்கூட இல்லாமல் அப்படியே அசையாமல் கிடக்கவும் வியப்புற்றுப் பார்த்தான்.

சிப்பி இமைகள் விசிறியாய்ப் படிந்திருந்த கன்னங்கள் செம்மையுறத் தொடங்கியிருந்தன. முகம் மலர்ந்து விகசிக்க மனைவியை நோக்கிக் குனிந்தான் அவன்.

அன்றைய உறவால் ஒரு பரிபூரணத்துவம் இருந்ததை இருவருமே உணர்ந்தனர்.

மறுநாள் மீண்டும் மாத்திரை தொடங்க வேண்டிய நாள். மாத்திரை அட்டையைக் கையால் எடுத்து மதுரவாணி அதையே வெறித்துப் பார்த்தபடி சற்று நேரம் நின்றாள். அப்படியே வீட்டின் பின்புறம் சென்று, அங்கே எரிந்து கொண்டிருந்த கோட்டை அடுப்பில் அட்டையை விசிறி எறிந்தாள்.

புரியாமல் விழித்த தவசுப் பிள்ளையிடம், "வேண்டாத மாத்திரை" என்று கூறி முறுவலித்தபடியே திரும்பினாள். அன்று மாலையில் தலையைத் தடவியபடியே வந்தான் வீரபாண்டியன். பெரியகோலி அளவு வீக்கத்தைக்காட்டி, "வரும்போது வண்டிச்சக்கரம் ஒரு நொடியில் அதாவது ஒருசிறு பள்ளத்தில் இறங்கி ஏறிய போது வண்டிக் கூண்டில் முட்டிக் கொண்டேன்" என்றவன் மனைவியை அருகே இழுத்துச் சொன்னான்" எல்லாம் உன்னால் வந்தது. நேற்றைய இரவையே நினைத்துக் கொண்டு இருந்தேனா, வண்டி நொடியில் இறங்கியபோது கவனமாயிருக்கத்தவறி இடித்துக் கொண்டு விட்டேன்" என்று அவன் சிரிக்கவும், குறிப்புணர்ந்து அவள் முகம் சிவந்தது.

கூடவே அவளது குழப்பத்துக்கும் ஒருமுடிவு தெரிந்து விட்டது. அந்த ஒரு லட்சத்துக்கான உருப்படியான செலவு ஒரு டீசல் எஞ்சின் பொருத்தப்பட்ட செகன்ட் ஹான்ட்கார்.



## 9

**கா**லம் வெகுவேகமாகக் கடுகி ஓடுவது போலத் தோன்றியது மதுரவாணிக்கு.

வீரபாண்டியனை இனி உயிரோடு பார்க்கப் போவதே இல்லை என்று நேற்றுத்தான் கண்ணீர் சிந்தியது போல் இருக்கிறது , அதற்குள் நாற்பது நாட்கள் பறந்து விட்டனவே என்று எண்ணியபடியே வாழைத் தாருக்காக வந்த பணம் ரூபாய் ஒருலட்சத்து ஒன்றையும் இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டு சாவியை இடுப்பில் சொருகினாள் அவள்.

எதை எதையோ எண்ணுகையில் அவளது இதழ்களில் தன்னை மீறி முறுவல் பூத்தது. வாழ்க்கை இவ்வளவு குதுகலமானதாக இருக்கக் கூடும் என்று அவள் எண்ணியதே இல்லையே! சென்னையும் அதன் அவசரமும் தொலைதூரத்தில் மங்கி மறைந்து போயினவே! இந்தக்கிராமத்து வீடும் நிலமும் பயிரும், பெட்ரோல் புகையற்ற காற்றும் அம்…ம்…மா!

என்ன சுகம்! கண்ணில் விழுந்த தூசிபோல ஒரே ஒருசின்ன உறுத்தல். அதை அடியோடு நீக்கிவிடத் தான் வழிதேடிக் கொண்டிருந்தாள். தங்கை கணவனிடம் பணம் பெறலாம் என்கிற எண்ணத்தை அடியோடு மறந்து விடுமாறு கோகில வாணியிடம் சொல்லி விஷயத்தை முடித்து விட வேண்டும்.

கணவன் வீரபாண்டியன் முன்னிலையில் உடன் பிறந்தவளிடம் கறாராகப் பேச அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கோ இப்போது உலகமே அன்புமயமாக இருக்கிறது. இந்நேரத்தில் மனைவி மட்டும் ஏன் இப்படி என்று கிளறத் தொடங்கினான் என்றால், அவள் மனதில் குப்பையென்று ஒதுக்கி விட்டவற்றை வீடு முழுவதும் வாரி இறைக்க நேர்ந்து விடுமோ என்கிற தயக்கம் அவளுக்கு.

கோகில வாணியின் வீட்டுக்கு சென்று சொல்லி விடலாம் என்றால், 'சித்தி சித்தி' என்று பிரியமாய்ச் சுற்றி வரும் குழந்தைகளைப் பார்த்து தனக்கே மனம் இளகிவிடுமோ என்று அதற்கும் மனமில்லை.

இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பவள் போல அன்று கோகில வாணியே, வீரபாண்டியன் வீட்டில் இல்லாத நேரத்திலேயே வந்து சேர்ந்தாள்.

உரம் பூச்சி மருந்து வாங்குவதோடு, சில பாக்கி வசூல் பண்ணுவதற்காகவும் டவுனுக்குச் செல்ல வேண்டி இருப்பதாகக் கூறி அங்கே ஏதாவது வாங்க வேண்டுமா என்று கேட்ட வீரபாண்டியனிடம் டவுனில் கார் புரோக்கரைப் பார்த்து வருமாறு சொல்லி அனுப்பியிருந்தாள் அவள்.

"உன் அக்காவுக்கு பணம்.. என்று தயங்கியவனிடம், "அக்கா எங்கே ஓடிவிடப் போகிறாள்? எப்போது வேண்டுமானாலும் கொடுத்துக் கொள்ளலாம். அப்படி என்ன கடனாபட்டிருக்கிறோம்? இல்லையே. அத்தோடு அவளுக்குக் கடை இருக்கிறது. நிலம் நீச்சலில் வருமானம் இருக்கிறது. இதற்கென்ன அவசரம்? பாருங்கள், நம் ரோடில் மாட்டு வண்டியில் ஒருதரம் சென்று வருமுன் தலையில் நாலு இடத்தில் வீங்கி விடுகிறது. அன்றைக்கு எனக்கு ரத்தம் கூட லேசாக கசிந்தது. சொன்னால் வருத்தப்படுவீர்கள் என்று நானே மருந்து போட்டு ஆற்றிக் கொண்டேன். நாம் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டாவது அடுத்தவளுக்கு - அக்கா என்றாலும் அவள் வாசு அத்தான் குடும்பம் தானே! அவர்களுக்குப் போய் ஏன் கொடுக்க வேண்டும்? இப்போது நம் தலையைக் காப்பாற்றக் கார் வாங்கிக் கொள்ளலாம். அடுத்த நெல் அறுவடையாகிறபோது அக்காவைப் பார்ப்போம்." என்று இல்லாத கதையெல்லாம் சொல்லி அவனை ஒப்புக் கொள்ளச் செய்து அனுப்பி வைத்தாள். அவளுக்கு தலையில் அடிபட்டது என்று கேட்டபின் அவன் மறுப்பு சொல்லவும் இல்லை.



நெல் அறுவடையானதும் பண்ணை ஆட்களுக்கு அவனது திட்டப்படி போனஸ் கொடுக்க அந்தப் பணம் தேவைப்படும் என்பதால் இந்தப் பணத்தைக் காப்பது தான் முக்கியம் என்று உணர்ந்து ஆயிரம் சொல்லி அவனை ஒப்ப வைத்தாள்.

இனிக் கோகிலவாணியிடம் இங்கிருந்து பணம் பெயராது என்று எப்படித் தெரிவிப்பது என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையில் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற் போலக் கோகில வாணியே வந்து சேர்ந்தாள்.

பஸ் நிறுத்திலிருந்து மதுரவாணியின் வீடு வரையிலான ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்ததாலோ, அன்றி அவள் வீட்டிலிருந்து தங்கை வீடு வரை உள்ள ஏழு கிலோ மீட்டர் தூரத்தையும் நடந்தே கடந்ததாலோ, முகம் கழுத்தெல்லாம் துளிர்த்து வழிந்த வியர்வையைச் சேலை முந்தானையால் துடைத்துக்கொண்டே வந்த தமக்கையைப் பார்க்கையில் மதுரவாணிக்குக் கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருந்தது. என்னமாய் மெலிந்திருக்கிறாள்! உள்ளிருக்கும் கபடம் தான் உடம்பைக் கெடுத்துவிட்டதா? உட்காரச் சொல்லி, மின் விசிறி ஸ்விட்சைப் போட்டு விட்டு தாயம்மாவை அழைத்து மோர் கொண்டுவரச் செய்து, தமக்கையிடம் கொடுத்தாள்.

மோரை மறுத்து விட்டுச் சற்று நேரம் மூச்சு வாங்கிக் கொண்டாள் கோகிலா. சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வந்தாள். "வாழைத்தார் வெட்டியாயிற்று என்று கேள்விப்பட்டேன். இப்போதாவது பணம் கிடைக்குமா?."

புருவங்களை உயர்த்தினாள் தங்கை, "என்னவோ கொடுத்துவைத்த மாதிரிக் கேட்கிறாயே அக்கா?" என்றாள் ஏளனமாக. "தெளிவாகச் சொல்லுகிறேன் கேட்டுக்கொள். உனக்கு கொடுப்பதற்கு இங்கே பணம்

இல்லை. வாழைத்தார் விற்ற பணத்தில் நாங்கள் கார் வாங்கப் போகிறோம்" என்று அறிவித்தாள்.

உதடு துடிக்க எழுந்து நின்று, "நீ உன் புருஷனைப் பொய்யனாக்குகிறாய், மதுரம்." என்றாள் கோகிலா ஆத்திரத்துடன்.

"இல்லை சந்தையில் மாடு பிடிப்பது போல மனைவியை விலை கொடுத்து வாங்குகின்ற கேவலத்தைச் செய்யவிடாமல் அவரைத் தடுக்கிறேன் அவ்வளவுதான்." என்றுகூறி ஒரு குறுங்கட்டிலில் அலட்சியமாக அமர்ந்து கொண்டாள் மதுரவாணி.

தமக்கை அயர்ந்து நிற்பதைக் கண்டு ஏளனமாகச் சிரித்தாள்.

"மது ......மதுரம்....உனக்குள் ...." என்று திக்கினாள் தமக்கை.

"எனக்கு என்னென்ன தெரியும் என்று கேட்கிறாயா? மாப்பிள்ளையின் அடியாட்கள் விலகிப் போனதும் உன்னைத் தப்ப வைத்து விடுகிறேன் என்று போனவள் மயக்க மருந்து கொடுத்து என்னை மயங்க வைத்துத் திருமணத்தை நடத்தி முடித்தது தெரியும். இதற்கு கைக்கூலி ஐம்பதினாயிரம் ரூபாய் என்பதும் தெரியும். எப்படித் தெரியும் என்று யோசிக்கிறாயா? வேண்டாம் வேண்டாம் ஏற்கனவே சூழ்ச்சி மேல் சூழ்ச்சியாக அதிக வேலை செய்து அலுத்துப் போன மூளை அது. அதற்குப் போய் இன்னொரு வேலை கொடுப்பானேன்? அதையும் சொல்லுகிறேன் கேட்டுக் கொள்.

"இந்தக் கல்யாணத்திலிருந்து நள்ளிரவில்தான் தப்பிக்க முடியும் என்று நீ சொன்னது அடி மனதில் வலுவாக இருந்ததால் என்று நினைக்கிறேன். நீ தந்த மருந்து கலந்த பாலைக் குடித்த பிறகும் எனக்கு முழு மயக்கமோ, தூக்கமோ வரவில்லை. நீயும் அத்தானும் என் அருகில் நின்று பேசியது எனக்கு நன்றாகவே கேட்டது. ஆனால் மருந்து வேலை செய்யத் தொடங்கி



விட்டதாலோ என்னவோ நீங்கள் இருவரும் பேசியது என்னைப்பற்றி என்பதே எனக்கு மனதில் படவில்லை. உன் திட்டப்படி இங்கு வந்து திருமணம் முடிந்த பிறகு பின் கொல்லைப் பக்கம் சென்று இவரிடம் பணம் கேட்டாய் பார், அதைக் கேட்டபிறகு தான் நீ எவ்வளவு பெரிய நயவஞ்சகி என்பதை நான் முழுமையாகப் புரிந்து கொண்டேன்.

"அப்போதே உன் கைக்கூலி பணம் உன் கைக்கு ஒரு நாளும் வரவிடக்கூடாது என்று உறுதியும் கொண்டேன்" என்று முடித்தாள் மதுரவாணி.

உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டு தலை குனிந்தபடி அசையாமல் அமர்ந்திருந்தாள் கோகில வாணி.

கல்லுளிமங்கி என்று ஆத்திரம் அதிகமாயிற்று. மதுரவாணிக்கு இவளை எப்படியாவது காயப்படுத்திக் கண்ணீர் விட வைக்க வேண்டும். "உனக்கு நினைவிருக்கிறதா, அக்கா? என் அம்மா உன்னைப் பெற்றவள் இல்லை. ஆனால் ஒரு சிறு வேறுபாடு காட்டியிருப்பார்களா? வயிற்றில் பிறந்த மகளுக்கு என்று எதையும் வைத்துக் கொள்ளாமல் தன் நகைகளையும் உனக்குத்தானே கொடுத்தார்கள்? அப்பாவின் கிராஜுவிட்டி பணம் உன் கல்யாணக் கடனுக்குத் தான் போயிற்று. அப்பாவின் வீடு விற்ற பணத்தில் கூட செகரட்டரி கோர்சுக்காக ஒரு பத்தாயிரம் தவிர எல்லாவற்றையும் உனக்குத் தானே தந்தேன். எல்லாமே என் அக்கா என்று வாழ்ந் திருந்தேனே. நீ என்னை ஒரு பட்டிக்காட்டு பண்ணை யாரிடமா ஒப்படைத்தாய்? என் படிப்பு, பழக்கவழக்கம் எதற்காவது பொருந்துமா என்று ஒரு கணம் யோசித் தாயா?"

மெல்ல நிமிர்ந்த போது கோகிலாவின் முகத்தில் வேதனை தெரிந்தது. "எனக்கு மட்டும் பழைய நினைப்பே இல்லாமல் போய் விடுமா,மதுரம்?



சிற்றன்னை என்கிற எண்ணம் இல்லாமல் நம் அம்மா என்னைப் போற்றி வளர்த்ததும், இவர்கள் வீட்டில் வைரத்தோடு கேட்கிறார்கள் என்றதும் கடைசி நகையான அதையும் கழற்றித் தந்ததும் மறக்கக் கூடியதா? அக்கா, அக்கா என்று நீ என் பின்னாலே சுற்றியதுதான் ஞாபகம் வராதிருக்குமா? ஆனால் இதையெல்லாம் மனதில் எண்ணி மகிழக்கூட எனக்கு வாய்ப்போ, நேரமோ இல்லாமல் போனதம்மா. மதுரம், எனக்குத் தாலிகட்டியவரைப் பற்றி நானே எப்படிப் பறை சாற்றுவேன்? குடும்பம், செல்வநிலை, என்று பார்த்தவர்கள் குணம் பாராமல் விட்டுவிட்டார்களே! சூதாடுவதில் தருமபுத்திரரின் நேர் வாரிசு அம்மா, உன் அத்தான். எதை எல்லாம் இழந்து...குடியிருக்கும் வீடுகூட அடங்கிருக்கிறது, தெரியுமா? அப்பாவின் வீட்டை அமுக்கிக் கொள்ள எனக்கு மட்டும் ஆசையா? நம் வீட்டில் நீ பார்த்த உன் அக்கா அப்படிப்பட்டவளா?' இனிச் சூதாடுவதே இல்லை என்று உறுதி மொழிந்ததால் நம்பினேன். அதுவும் போயிற்று. உன் முகத்தில் விழிப்பதற்கே எப்படிக் கூசினேன் தெரியுமா?"

"இப்போது மெய்யாகவே திருந்தி விட்டதாகச் சொல்லுகிறார். பிள்ளைகள் மேல் சத்தியம் செய்திருக் கிறார். கடையைக் கூட என் பெயருக்கு மாற்றிவிட்டார். அப்பாவைத் துணைக்கு வைத்து நீயே செய். நான் பணத்தைத் தொடாமல் வெறும் எடு பிடியாக இருக்கிறேன் என்கிறார்.

"ஆனால் கடைகாலியாக அல்லவா இருக்கிறது! கடை நடத்தப் பணம்? நானும் அவரும் மட்டும் என்றால் வந்த விலைக்கு கடையை விற்று ஓய்த்து விட்டு, வீட்டிலிருந்தே நூல் நூற்றும் அப்பளம் இட்டும் காலத்தை ஓட்டியிருப்பேன். ஆனால் சூதாட்டத்தி லிருந்து இவரைக் கவர்ந்து இழுப்பதாக எண்ணி எண்ணியே நாலு பெற்று விட்டேனே. அதுகளை வளர்த்து உருப்படியாக்க வேண்டுமே என்றுதான்.



மதுக்குட்டி, நான் ஒன்றும் உன்னை ஓர் அயோக்கியனிடம் தள்ளி விடவில்லையே. உனக்கும் நல்ல வாழ்வு தானே என்றுதான்..."

இளகத் தொடங்கியிருந்த மதுரவாணியின் மனம் தமக்கையின் கடைசி வாக்கியத்தில் கடினமாயிற்று.

"அயோக்கியனாக இருந்திருந்தால் மறுத்திருப்பா யாக்கும்!" என்று ஏளனமாகக் கேட்டாள்.

கோகிலவாணியின் முகம் கன்றுவதைத் திருப்தி யுடன் கண்டு, "என் கணவர் நல்லவராக இருப்பது என் நல்ல விதி. ஆனால் நல்லவர் என்று நெற்றியிலா எழுதியிருக்கும்? அவர் குணம் தெரியுமுன்னமும் மேக்கிங்தபெஸ்ட் ஆஃப் இட்" என்று நான் எப்படி யெல்லாம்...சரிசரி. என்பாடு உனக்கெதற்கு?

"யோசி, அக்கா உன் திருமணத்தின்போது படிப்பு, தோற்றம் என்று அத்தனை பார்த்தார்களே! அத்தானை உன்னிடம் காட்டி, பிடித்திருக்கிறதா, பிடித்திருக்கிறதா என்று எத்தனை தரம் கேட்டு முடிவெடுத்தார்கள்! ஆனால் நீ எனக்குச் செய்தது என்ன? உனக்கு ராஜா ராமனைப் பற்றி எழுதினேன். அதன் பிறகு என் படிப்புக்கும், பழக்கங்களுக்கும் எந்த வகையில் பொருத்தம் என்று இவரிடம் என்னை விலை பேசினாய்?"

"அந்த வார்த்தை சொல்லாதே" என்று அலறி விட்டாள் தமக்கை.

"ஏன்? உள்ளதைச் சொன்னால் உடம்பு எரிகிறதோ? படிப்புக்குச் செலவு செய்ததாகச் சொன் னாயாமே! என்ன பொய்! ஒரு நயாபைசா ஒரே ஒரு பைசா என் படிப்புக்காக நீ செலவு செய்தது உண்டா? நினைவிருக்கிறதா. அப்பா அம்மா விபத்தில் போன தும் காரியத்துக்கு வந்தார்களே, உன் மாமியார், அப் போது. இனி இந்தப் பொண்ணு பாரம் வேறே வந்து நிற்குமே என்றார்களே, பிற்பாடு உன்னிடம் குத்திப் பேசுவார்களே என்று அந்த ஒரு காரணத்திற்காக நான்

எப்படி உழைத்துப் படித்து அந்த உபகாரச் சம்பளங்களை வாங்கினேன். தெரியுமா? செலவு. செய்தாளாம். மற்றதை விடு. இந்தக் காலத்தில் எப்படி எல்லாம் வாழ்கிறார்கள்? ராஜாராமனோடு நான் நெருங்கிப் பழகியிருந்தால் சாவது தவிர வேறு எனக்கு ஏதுவழி? அதையெல்லாம் ஒரு கணம் நினைத்துப் பார்த்தாயா? உனக்கு வரக்கூடிய பணம்தானே பெரிதாகிப் போயிற்று. ராஜாராமன் பெயரை வைத்து மிரட்டவேறு செய்தாயே. என் வீட்டிலிருந்து உனக்கு ஒரு துரும்பு வரவிடுவேன் என்று நினைத்தாயா? சீ ச்சீ "

"மதுக்குட்டி, இந்தப் பணம் வராவிட்டால் என் கதி அதோ கதியாகி விடும்மா." என்றாள் கோகிலா வேதனையோடு.

"எனக்கு ஏதோ போதை மருந்து கொடுத்தாயே, அரை மயக்கத்தில் எனக்கு நடப்பதைப் பார்த்து என் மனம் எப்படித் துடித்தது என்று உனக்குத் தெரியுமா? இந்த மாதிரிக் கசாப்பு வேலை செய்துவிட்டு மதுக்குட்டியா? நீ எப்படி நாசமாய்ப் போனால் எனக்கென்ன?"

" மது. . மதும்மா, அப்படிச் சொல்லாதே. நான் உன் அக்கா"

"அக்காவா? அப்படியானால் நான் உன் தங்கை. உறவு முறை சரிதானே? தங்கையாகிய என் கதியைப் பற்றிக் கணம் கூடக் கவலைப்பட்டிராத உன்னைப் பற்றி எனக்கு மட்டும் ஏன் கவலை? எக்கேடோ கெட்டு ஒழியுங்கள்" என்றாள் மதுரவாணி மிகவும் கடினமான குரலில்.

இனி இவளிடம் பேசிப்பயன் இல்லை என்று கண்டு, திரும்பிச் சோர்வுடன் செல்லத் தொடங்கினாள் கோகிலவாணி.

சகோதரியின் ஓய்ந்த தோற்றமும், சோர்ந்த நடையும் பார்க்கையில் மதுரவாணியின் நெஞ்சுக்குள் ஏதோபிசைந்தது. இது அவள் செய்த பிழைக்குத்



தண்டனைதானே. உப்பைத் தின்றால் தண்ணீர் குடிப்பது போல, தப்பு செய்தால் தண்டனையும் அனுபவித்துதான் ஆகவேண்டும் என்று தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டாள் மதுரவாணி.

மனது இருக்கும் நிலையில் சும்மா இருப்பதைவிட எதாவது வேலையில் இறங்குவது நல்லது என்று தோன்றியது.

கணவனின் அறையில் அலமாரிச் சாமான்கள் உளம்பிக் கிடப்பதாக அவன் சொன்னது நினைவுவர அங்கே சென்றாள்.

அவனுக்காக ஒரு வேலை செய்தால் அதிலேயே மனம் அமைதி பெற்றுவிடும்.

ஒருக்களித்துச் சாத்தியிருந்த அந்தத் தடிமனான மரக் கதவைத் தள்ளித்திறந்த போது கட்டிலின் பக்கம் அசைவு தெரியவும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அங்கே, கண்களிலிருந்து ரத்தம் தான் கசிகிறதோ எனும்படியாகச் சிவந்த விழிகளால் அவளையே நோக்கியபடி அமர்ந்திருந்தவன் வீரபாண்டியன்!

இவன். . இவன் இங்கே எப்போது வந்தான்? அக்காவிடம் பேசியதில் என்னவெல்லாம் கேட்டான்? கடவுளே என்று அயர்ந்துபோய் நின்றாள் மதுரவாணி.

## 10

**பை**க் பழுதுபட்டு இருப்பதும் அது இன்னமும் சரியாகி வீடு வந்து சேராததும் ஒரு பெரிய தொல்லையாகப்பட்டது வீரபாண்டியனுக்கு.

பஸ்ஸில் கூட்டத்தின் நடுவே வியர்வை கசகசக்க நிற்பது வெறுப்பாக இருந்தபோதும் அவனை அறிந்தவர் ஒருவர் எழுந்து இடம் தந்தபோது உட்காரமறுத்து விட்டான்.



முதலிலேயே இடம் பிடித்து உட்கார்ந்திருந்த அவர் நின்று சிரமப் படுகையில் தான் ஜம்மென்று உட்கார்ந்து வருவது நியாயம் இல்லை என்று தோன்றியது அவனுக்கு.

முன்பு இதே மரியாதைகளை, ராஜதோரணையில் ஏற்றது நினைவு வர வேடிக்கையாகவும் இருந்தது. மரியாதை கொடுத்து விட்டுக் கஷ்டப்பட்டவர்களை எண்ணி வேதனையாகவும் இருந்தது

எல்லாம் ஐந்தடி நான்கங்குல உயரம் உள்ள ஒரு சிறு பெண்ணினால் விளைந்த மாற்றம்! அந்தப் பெண்ணைப் பற்றி எண்ணத் தொடங்கியபிறகு பீதிப் பயணத்தில் அவனுக்குச் சிரமமே தோன்றவில்லை.

பயிருக்கு வேண்டிய உரத்தையும், பூச்சி கொல்லியையும் நேரடியாக வயலுக்கே அனுப்ப ஏற்பாடு செய்து, பணத்தைக் கொடுத்துவிட்டு, மதுரவாணியின் விருப்பம் போலக் கார்புரோக்கரை நாடிச் சென்றான்.

பாவம், பட்டணத்தில் சீரான தார்ரோடுகளுக்குப் பழக்கப்பட்ட பெண். கிராமத்து பாட்டைகளின் மேடு பள்ளம் புரியவில்லை. வண்டிச் சக்கரம் பள்ளங்களில் இறங்கி ஏறும்போது வண்டிக்கூண்டில் தலை இடிபடாமல் வாகாக வைத்துக் கொள்ளும வித்தை புரியவில்லை.

கூண்டில் இடிபட்டு அன்று ரத்தம் கசிந்ததாமே பாவம், எப்படி வலித்திருக்கும்? அவளுக்கு முட்டியது தனக்கே வலிப்பது போல உணர்ந்து வருந்தினான் வீரபாண்டியன்.

இனி அவளைக் காரில் தான் அழைத்துச் செல்ல வேண்டும். அவனால் முடியாதது இல்லையே. என்ன, ஒரு லட்சத்தையும் இதில் போடாமல் கொஞ்சம் விலை குறைவாகப் பார்க்கவேண்டும். நெல் அறுக்கும் வரை மற்றசெலவு இருக்கிறது. மேலக்கரைவயலில் வாழைக் கன்று நடவேண்டும். உரம் அடிக்கப்பணம் வேண்டும்.



டீசல் வண்டிக்குப் பதிலாகப் பெட்ரோல் வண்டி வாங்கினால் விலை குறைவாக இருக்கும். தினச் செலவு கூடுதலாக ஆகும் என்றாலும் அப்படி எவ்வளவு தூரம் ஓட்டிவிடப் போகிறோம். வயலுக்கும் டவுனுக்கும் தான். பார்த்துக் கொள்ளலாம். இதில் மீந்தது மற்ற தேவைக்கு ஈடுகட்டும்.

பட்டணத்துப் பெண் அல்லவா? போனஸ்மாதிரி வேறு செலவு இல்லாத தொகை என்று எண்ணி விட்டாள். மெல்லக் கற்றுத் தரவேண்டும் கணவன் தொழிலைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் அவளுக்கு இருப்பது அவனது அதிருஷ்டம் தான்.

ஒரு காலத்தில் உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு மிஞ்சாது என்பார்களாம். இப்போது இந்த ரசாயன உரம், பூச்சி கொல்லி என்று அதுதும் விலைதான் என்றாலும் மணியும் நிறையத்தானே காண்கிறது.

வயலை நினைக்கையிலும் அவன் மனம் மனைவியிடம் தான் வந்து நின்றது. வயலுக்குச் செல்லும் போது அவளை அடிக்கடி உடன் அழைத்துச் செல்வதைச் சிலர் கேலிபேசுவது அவன் அறிந்த விஷயம்தான். ஆனால் வேலைநடுவே அவளைப்பார்க்கும் போது உண்டாகும் ஆனந்தம் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்?

அவ்வப்போது அவளும் அவனைப் பார்த்துக் கொண்டிருக்க, இருவர் கண்களும் கலக்கையில் உண்டாகும் புளகாங்கிதம் பற்றி உணர்ந்தால் அன்றிச் சொல்லிப் புரிவது அரிது. அகநானூற்றுப் பாடல்களை நம் கவிஞர்கள் எப்படி அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள் என்பது அப்போதுதானே நமக்கே புரிகிறது

இவ்வளவு ஆசைப்படுகிறோமே படித்திருக்கும் இந்தப் பெண் கிராமத்து வாழ்க்கை பிடிக்கவில்லை என்று சொன்னால் என்ன செய்வது என்று முன்பு வீரபாண்டியன் சிந்தித்தது உண்டு. கவலைப்பட்டதும் உண்டு

ஆனால் முதலில் இருந்த ஓரிருநாள் வெட்கத்தின் பின்தானே அவனுக்குக் கிடைத்தது எப்பேர்ப்பட்ட மாணிக்கம் என்று அவன் அறிந்தது.

அவளை விட அவன் படிப்பில் குறைவு. அழகிலோ அவள் ரதி. அப்படியிருந்தும் அவன்மீது உயிரை வைத்திருக்கிறாளே. அவன் எவ்வளவு கொடுத்து வைத்தவன்.

அன்று அவள் பயந்து அழுததும் பின்பு அணைத்ததும். . . யாரோ பல முறை அழைப்பது கேட்டுத்திரும்பிப் பார்த்தான் வீரபாண்டியன்.

ஒன்றுவிட்ட மாமன் செல்லச் சாமியின் கடையில் அவனுடைய உறவின் முறைப் பெரியவர்கள் சிலரும் சேர்ந்து அமர்ந்து பேசிக்கொண்டிருக்கக் கண்டான். "வணக்கம், மாமா" என்று அவர்களை அணுகினான்.

பொதுவான குசல விசாரிப்பின் போது அவர் களில் ஒருவர் "என்னப்பா பாண்டி, உன் கல்யாணம் முடிந்து ஐந்தாறு மாதங்கள் இருக்குமே, எதாவது விசேஷம் உண்டா?" என்று கண்சிமிட்டி விசாரித்தார்.

"இன்னும் இல்லை, மாமா" என்று சிறுகூச்சச் சிரிப்புடன் அவன் கூறியதும் கோபத்துடன் கூறுக்கிட் டார் அவனுடைய ஒன்று விட்டதாத்தா "இவன் கிட்டே போய் இதல்லாம் என்ன கேள்வி நடேசு, இவங்கல்லாம் இந்தக் காலத்துப் புள்ளைகள். அவள் கருத்தடை மாத்திரை முழுங்கிக் கொண்டு இருக்கும் போது பிள்ளையாவது குட்டியாவது" என்றார்.

"தாத்தா" என்ன பேச்சு இது?" என்று அவன் அதிரவும், "என்னடா ஒன்றும் தெரியாத மாதிரி நடிப்பு ? வேலு வந்து மருந்துக் கடையிலே மாசாமாசம் வாங்கிக் கிட்டு போகிறது உனக்குத் தெரியாதாக்கும்?" என்று எரிந்துவிழுந்தார்.

சிரமப்பட்டுச் சிரித்து மழுப்பி விட்டு அங்கிருந்து அகன்றான் வீரபாண்டியன்.



அவனால் இதைக் கொஞ்சமும் நம்ப முடிய வில்லை. அவனுடைய அருமை மனைவியா?

இப்படி....எப்படி...?

கார்புரோக்கரை மறந்து, மருந்துக்கடைக்குச் சென்றான். வழக்கமாக வாங்குகிறகடை. பண்ணை ஆட்களின் மருத்துவச் செலவை இப்போதெல்லாம் அவனே ஏற்பதால் வருமானம் அதிகமானதோடு, பணமும் உடனடியாகக் கைக்கு வந்து விடுகிற காரணத்தால் மரியாதையுடன் முகமன் தெரிவித்தார் கடைக்காரர். அவர் வாங்கிவரச் சொன்ன சோடா கலரை மறுத்துவிட்டு "வந்து . . . வேலு, மாதாமாதம் வாங்கிப் போகிறானா?" என்று ஒருவாறு கேட்டுவிட்டான். "ஆ. . . மாம், தம்பி . . . ஆனால் என்ற அவரது பதிலினால் விளைந்த வேதனையை கடைக்காரர் அறியாமல் மறைத்து "என்ன ஆனால்?" என்று விசாரித்தான்.

"எதுக்கு தம்பி இதெல்லாம்? பேசாம முதல்ல ஒரு பிள்ளையைப் பெத்துகிட்டு அப்புறமாய் இந்த மாத்திரை மற்ற கண்ணராவிகளையெல்லாம் பயன்படுத்திக் கொள்வது தானே" என்றார் அவர்.

வெற்று முறுவலுடன் விடைபெற்றவனுக்கு வேறு ஒன்றுமே ஓடவில்லை.

இன்னமும் அவனால் இதை நம்பமுடியவலை. அவனிடம் உயிரையே வைத்திருக்கும் அவனுடைய அன்பு மனைவி, அவனுடைய பிள்ளையை சுமக்க மறுப்பானேன்? அதையும், அவனுக்கு மறைத்துச் செய் வது தான் அவனுக்குத் தாங்கமுடியாததாய் இருந்தது.

திட்டமிட்டு வந்த வேலை எதையும் செய்ய மனமற்று வீடு திரும்பினான். ஐந்தரை மணி பஸ்சு குத்தான் வண்டி கொண்டு வரச் சொல்லியிருந்ததால் பஸ் நிறுத்தத்திலிருந்து வீட்டிற்கு நடக்க வேண்டி யிருந்தது.



ஓடிவந்த நாய்களையோ, எழுந்து நின்ற மாயாண் டிக் கிழவனையோ கவனியாமல் வழக்கம் போல் செருப்பை வாயிலில் கழற்றி விட்டு உள்ளே சென்றான்.

கொடியிடையும் அதற்குச் சரியாக நீண்ட பின்னலும் அசைய எதற்கோ பின்புறம் சென்று கொண்டிருந்தாள் அவன் மனைவி. இந்த அழகிய மேனியின் ஒவ்வொர் அங்குலமும் அவன் அறிந்தது தான். ஆனால் அதற்குள்ளிருக்கும் அவளது உள்ளம்? அந்த உள்ளத்தில் உள்ளதில் ஓர் அணுவளவு கூட அவன் அறிந்திருப்பதாகத் தோன்றவில்லையே!

அப்போதிருந்த மனநிலையில் மனைவி உட்பட யாரையும் பார்க்கவோ, பேசவோ பிரியமற்று அவனது அறைக்குள் சென்று அமர்ந்தான்.

சற்று நேர அமைதிக்குப் பின் மதுரவாணியின் குரல் கேட்டது, "உட்கார் அக்கா" என்று.

அதற்குமேல் இடி மேல் இடியாக அவன் தலையில் விழுந்தது.

கணவனை அங்கே சற்றும் எதிர்பார்த்திராத மதுரவாணிக்கும் பெரிய ஷாக்தான். யார் அறியாமல் தமக்கையை குத்திக் குதற வேண்டும் என்று எண்ணித் தடையற்றுப் பேசி முடித்தாளோ. அவள் முதலிலிருந்து முடிவுவரை அவள்ளவையும் கேட்டிருக்கிறான்! கணவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை உணர்ந்து அவனைத் தேற்றும் வகையை அவள் யோசித்தபோது அவனே பேசினான்.

"கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக்கு முன்பாக, ஒருதரம் டவுனில் தேங்காய் போட வந்த போது நான் உன்னை முதன் முதலாக பார்த்தேன் மதுரவாணி" என்று உணர்ச்சி துடைத்த குரலில் தொடங்கினான்.

மதுரவாணியா! அந்த அழைப்பில் நெஞ்சுக்குள் வலிக்க "முதலில் நான்," என்று அவள் ஏதோ சொல்லத்



தொடங்கிய போது கையை உயர்த்தி அவளை அடக்கி னான் வீரபாண்டியன்.

"நீயாக யோசித்து நீயாக முடிவு செய்து ஏதேதோ பேசினாய். இப்போது என் விளக்கத்தை சற்றுக் குறுக்கே பேசாமல் கேள். அந்தக் குறுங்கட்டிலில் உட்கார்ந்து கேள்."

அடுத்தவர் பார்வையில் கூட அருகிலேயே அமர் கிறவன் ஐந்தடி தள்ளிக் கிடக்கும் ஆசனத்தில் அமரச் சொல்லுகிறான்! வேதனையை விழுங்கிக் கொண்டு அவன் சொன்னதைச் செய்தாள் அவள்.

"அப்போது நீ உன் அக்கா பிள்ளைகளுடன் ஓடைக்கரையில் ஓடி விளையாடிக் கொண்டு இருந்தாய். உன்னைப் பார்க்க ஆவலில் மறுநாளும், அதற்கு மறுநாளும் ஒரு வாரம் தொடர்ந்து – நீ வருவது நிற்கும் வரை வந்தேன். அதற்குள் நான் யாரையேனும் மணப்பது என்றால் அது உன்னைத்தான் என்று தீர்மானித்தும் விட்டேன். ஒரு வேளை உன் பாதையில் குறுக்கிட்டு, உன்னைச் சீண்டி, கிறுக்குத் தனம் செய்து, கட்டிப் பிடித்து ஐ லவ் யூ சொல்லியிருந்தால் உனக்கு ஒப்பதலாயிருந்திருக்குமோ என்னவோ..."

"அப்படிச் சீண்டியிருந்தால் உங்கள் கன்னம் பழுத்துப் போயிருந்திருக்கும்." என்று கோபத்துடன் குறுக்கிட்டுச் சொன்னவள் உடனேயே கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

அவனது உதடுகளில் லேசாகத் தோன்றிய புன்னகை உடனே மறைய அவன் தொடர்ந்தான். "நம் நாட்டை பொறுத்த வரை காதலும் களவோழுக்கமும் சங்க காலத்தோடு மறைந்து போன சமாசாரம் என்று நினைத்து, உன் வீட்டுப் பெரியவர்களிடம் – உன் அக்கா, அக்கா கணவரிடம் சென்று பெண் கேட்டேன்.

"ஆனால் என் காதலை – அது கைக்கிளைக் காதல் என்பது இப்போது தெரிகிறது. . . இல்லை தயவு செய்து இப்போது எதுவும் சொல்ல வேண்டாம். . ."என்றவன்

கண்களையும் விரல்களையும் இறுகமூடித் திறப்பதை, ஒரு செய்கையற்ற வேதனையுடன் மதுரவாணி பார்த்துக் கொண்டு இருக்கும்படி ஆயிற்று. அவளது அன்பைப் பற்றிச் சொல்ல விடாமல் அன்பு இல்லை என்று கருதி வேதனைப் படுகிறானே என்று வருந்தினாள் அவள்.

ஒரு பெருமூச்சுடன், "என் ஒரு தலைக் காதலைப் பயன்படுத்தி, தங்கள் பணச் சிக்கலை உன் சகோதரி வீட்டார் தீர்த்துக் கொள்ளப் போகிறார்கள் என்பது அப்போது எனக்கு தெரியாது" என்றான் அவன். "உன் படிப்புக்காகத் தனியாக நிறையச் செலவாகி விட்டதாகவும், அதைக் கொடுப்பவருக்குத்தான் உன்னை மண முடித்துக் கொடுக்க முடியும் என்றும் உன் அக்கா சொன்னார்கள். இதுபோலத் தருவதற்கு வேறு ஒருவர் முன் வந்திருப்பதாகவும் சொன்னார்கள். எனக்கு நீ முக்கியம். எவ்வளவென்றாலும் தருவதாகச் சொல்லி விட்டேன். அதைப் போய் என்னவெல்லாம் சொல்லி விட்டாய்!

"அதென்ன, மாடுபிடிப்பது போல மனைவியை விலை கொடுத்து வாங்கினேனா? விலை என்று சொல்லுவானேன்? பரிசம் போடுவது. நம்பழக்கம் தானே? காலகாலமாய் நடப்பதுதானே? அன்று அரிதாயிருந்த புலிப்பல்லை கொண்டுவந்து கொடுத்துத் தாலி கட்டினான். இன்று அரிய பொருள் பணம்தானே. அதைத் தர நினைத்ததில் தப்பென்ன? நான் ஒன்றும் மனைவி என்று ஒரு பெண்ணை மணந்து அவளுக்கு சோறு போட வக்கில்லாமல் வரதட்சணையும் சேர்த்து வாங்கவில்லையே!

"ஆனால் உனக்கு மனம் ஒப்பாத திருமணம் என்பது எனக்குத் தெரியாது. உன் சகோதரியின் பேச்சினால் உனக்கும் சம்மதம் என்றே நினைத்திருந்தேன். படிக்காத பட்டிக்காட்டுப் பண்ணையார் தானே. சந்தேகப்பட தோன்றவே இல்லை.



"பொருத்தம் என்பது மனதைப் பொறுத்தது என்று நான் எண்ணினேன். ஆனால் அது படிப்பாலும், நடை உடை பாவனையிலும் இருப்பதாக நீ சொல்லுகிறாய். போகட்டும். இதுவரை "நடந்ததை மாற்றுகிற சக்தி எனக்கு இல்லை. ஆனால் . . ." என்று எழுந்து நின்றான் வீரபாண்டியன்.

தன் முழு உயரத்துக்குமாகச் சற்றும் இறுக்கம் இல்லாத வயிரம் பாய்ந்த ஒரு தூண்போல அவன் நிற்பதை அண்ணாந்து பார்க்கையில் மதுரவாணிக்குள் ஒரு குளிர் பிறந்தது. இவன் ஏதோ முடிவு செய்து விட்டான்! அது என்னவாக இருக்கும்?

அச்சத்துடன் அவள் பார்த்துக் கொண்டு இருக்கையில் அவன் மேலே பேசினான். "ஆனால் இன்னும் ஒரு வேலை என்னால் செய்ய முடியும். அதைச் செய்கிறேன். இன்றுமுதல் நீ விரும்பாத இந்தக் கட்டிலிருந்து உன்னை விடுவிக்கிறேன். நீ என்ன முறையில் வேண்டினாலும் அந்த முறையில் விவாகரத்து தர நான் தயாராயிருக்கிறேன்"

"எனக்கு விவாகரத்து வேண்டாம்" என்று கிறீச்சிட்டாள் மதுரவாணி.

"குறுக்கே பேச வேண்டாம் என்று நான் ஏற்கனவே சொல்ல வில்லை?" என்ற குரலில் அவள் வெலவெலத்துப் போனாள்.

ஆனால், "நீ அந்த ராஜாராமனையே மறுமணம். ." என்று வீரபாண்டியன் கூறவும், அவனது எச்சரிக்கையை மீறி, "எனக்கு எந்த ராஜாராமனும் வேண்டாம்" என்று வெடித்தாள்.

ஒரு கணம் பேசாதிருந்து விட்டு, "தனித்து வாழ்வது என்றாலும் அது உன் விருப்பம்" என்று முடித்தான் வீரபாண்டியன்.

"நான். . . நான் இங்கேயேதான் இருப்பேன்."



தலையசைத்து, "அது சாத்தியமல்ல" என்றான் அவன். "அதற்குத் தேவையும் இல்லை. இன்னமும் நீ உன் மனதில் இருக்கும் வெறுப்பை மறைத்து நேசம் போல நடிக்க வேண்டிய அவசியமில்லை." மனைவி தன்னை வெறுத்தாள் அதை மறைத்து நடித்தாள் என்பது அவனால் தாங்க முடியவில்லை என்பது அவளுக்கு புரிந்தது.

"இல்லை. இப்போதெல்லாம் நடிப்பதே இல்லை. ப்ளீஸ். . இவ்வளவு நேரம் நீங்கள் சொன்னதை நான் கேட்டுக் கொண்டு இருக்க வில்லையா? நான் சொல்லுவதைக் கொஞ்சநேரம் கேளுங்களேன்." என்று அவசரமாக வேண்டியவள், அவன் பேசாமல் நிற்கவும், அதையே சம்மதமாகக் கொண்டு மடமடவேன்று சொன்னாள்" முதலில் உங்களை நான் விரும்பாதது உண்மைதான். ஆனால் நாளாக நாளாக உங்கள் அன்பு என்னை மாற்றி விட்டது. நான் உங்களை உயிராக நேசிக்கத் தொடங்கி விட்டேன்" என்றாள் வேகத்துடன்.

"இல்லை என்பதற்கு சான்று இருக்கிறது" என்றான் அவன் உணர்ச்சியற்ற குரலில்.

"என்னது?" அவன் உள்ளூர வேதனைப் படுவது புரிந்து அதற்காகவே தவித்தபடி அவள் கேட்டாள்.

"மாதாமாதம் நீ வாங்கி உண்டுவரும் கருத்தடை மாத்திரைகள்" ஒரு கணம் திகைத்த மதுரவாணி உடனேயே மதுரமாகக் சிரித்தாள். மெல்ல எழுந்து அவன் முன்னே வந்து நின்றாள். "என் மனதை நானே அறிந்திராத அந்த நாட்களில் அந்த மாத்திரைகளை நான் எடுத்துக் கொண்டது மெய்தான். ஆனால் உண்மை புரிந்த பிறகு. . இப்போது என்னுள் உங்கள் குழந்தைக்கு. . நாற்பது நாள்" என்றாள் முகம் சிவக்க.

அவன் கண்களில் பளிச்சிட்ட ஒளி உடனே மறையவும், "இன்னும் என்ன?" என்றாள் அவள் கவலையுடன்.



"இதையும் நான் அன்பென்று எப்படிக் கொள்வது? சற்று முன் உன் சகோதரியிடம் சொன்னாயே, "மேக்கிங் தி பெஸ்ட் ஆஃப் இட்" என்று. அதுபோலப் பிள்ளை பெறவும் முடிவு செய்திருக்கலாம்." என்றான் அவன்

"அய்யோ, இப்படிச் சொன்னால் செய்வது? நான் சொல்வது நிஜம் அத்தான். சத்தியம். . தயவு செய்து என்னை நம்புங்கள்" என்று கெஞ்சியவள் அவன் அசையாமல் நிற்கவும் அதற்கு மேல் தாளாமல் கைகளில் முகம் புதைத்து விம்மி அழுதாள்.

இயல்பாக அவளை நோக்கி நீண்ட கரங்களை அடக்கிக் கொண்டு, "வாணி, என்னை நிமிர்ந்து பார்." என்றான் வீரபாண்டியன் அமர்ந்த குரலில். நெஞ்சின் ஏக்கத்தையெல்லாம் கண்ணில் தேக்கி அண்ணாந்து பார்த்தாள் மதுரவாணி.

சில கணங்கள் அவளை ஊடுருவிப் பார்த்தவன், "நீ சொல்வது மெய்யென்றால் அதை நிரூபித்துக் காட்டு" என்றான்.

மனதில் இருப்பதை எல்லாம் துளிகூட மறையாமல் அவனிடம் கொட்டியாயிற்றே. பெரிய அதிசயம் பிள்ளை ரகசியம் வரையும் சொல்லி விட்டாளே!

இதற்கு மேல் எப்படி நிரூபிப்பது? புரியாமல் அவனிடம் கேட்டாள் மதுரவாணி.

"அது உனக்குத்தான் தெரியவேண்டும்" என்றான் அவன் சற்றும் தளராமல்.

ஒன்றும் தோன்றாமல் சற்று நேரம் மலைத்து நின்றாள். அவள், வார்த்தைகளை அவன் ஒப்பவில்லையே! பின்னே?

கணவனை நெருங்கி அவனைத் தழுவ முயன்றாள்.

ஆனால் ஒருவருத்தமான முறுவலுடன் அவளது கரங்களை மிருதுவாய் விலக்கி, தலையசைத்தான் வீரபாண்டியன்.

சொல், செயல் எதையும் ஒப்பவில்லை என்றால் என்ன செய்து அவனை நம்ப வைப்பது?

எப்போதும் குழைவும் சிரிப்புமாக இருக்கும் கணவனின் இறுக்கமும் உறுதியும் அவளை இன்னமும் கலங்கவைத்தன.

போயிற்று. எல்லாம் போயிற்று. நிராசையுற்று மனம் சோர்ந்த போது முன்னொருதரம் இப்படிக் கலங்கியது மாறியதும் வாழ்வு இன்ப மயமானதும் நினைவு வந்தது.

சூழ்ந்து வந்த இருளில் எதுவோ பளீரிட்டது. அன்பு. அவனது அன்பு செய்த மாயம் அது. அன்று குறள் பாடினானே, அன்பெனப் பாடுவது யாதெனில் எல்லோரும் இன்புற்றிருக்கச் செயல் என்று.

யாரும் கஷ்டப்பட்டால் தாங்க முடியவில்லை என்றானே! அவன் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்று சொன்னானே!

இப்போது மிகவும் கஷ்டப்படுவது ....

என்ன செய்ய வேண்டும் என்று மதுரவாணிக்கு உடனே புரிபட்டுப் போயிற்று.

ஓடிச் சென்று, இரும்புப் பெட்டியை திறந்து, வாழைத்தார் விற்ற பணம் முழுவதையும் எடுத்து வந்தாள். ஒரு கைப்பையுள் அடுக்கி வைத்தாள்.

அவனது அலமாரியிலிருந்து பேப்பர், பேனா எடுத்து வேகமாக எழுதினாள். "ஒரு சிறுபிசகு அக்கா, உனக்குச் சின்னவள்தானே நான்? மன்னித்து விடு. நீ கேட்டதற்கு இருமடங்கு இதில் வைத்திருக்கிறோம். கடையை முன்னைவிடவும் சிறப்பாக நடத்து" என்று எழுதி, உன் அன்புள்ள மதுக்குட்டி. என்று கையெழுத்திட்டாள்.

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு, பேசாத சிலையாகப் பார்த்துக் கொண்டு நின்ற



கணவனிடம் கடிதத்தைக் காட்டிவிட்டு, மடித்து உறையிலிட்டு, பணத்தோடு வைத்தாள்.

நம்பிக்கையான மனிதரான கணக்குப் பிள்ளையை அழைத்தாள். "என் அக்கா வீடு தெரியுமல்லவா? இதைக் கொண்டு போய், பத்திரமாக அவள் கையிலேயே ஒப்படைத்து விட்டு வாருங்கள்" என்று சொல்லி அனுப்பினாள்.

இவ்வளவையும் ஒரு வேகத்துடன் செய்து முடித்தவளுக்கு இப்போது மனம் பதைத்தது.

இனியேனும் நம்பிக்கை வருமா என்ற ஏக்கத்துடனேயே கணவனின் அறைக்குள் சென்றவளுக்கு, அதற்கு மேல் மூச்சுவிட முடியவில்லை.

அவ்வளவு இறுக்கமாக அவளை ஆரத்தழுவியிருந்தான் அவளுடைய ஆருயிர் நாயகன் வீரபாண்டியன்.